75

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

# மகிழ்ச்சியான வாழ்க்கை
# அன்பான குடும்பம்

கணவன் மனைவி இருவரும் தங்களுக்குள் பரஸ்பர அன்போடு, ஒற்றுமையோடு இருந்து, குடும்ப வாழ்க்கையை வெற்றிகரமாக அமைப்பதற்குத் தேவையான ஒழுக்கங்கள் மற்றும் வழிகாட்டல்களை எளிமையாக, எதார்த்தமாக புரியவைக்கும் நூல்!

ஆசிரியர்:
உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

DARUL HUDA

About This Book

| | |
|---|---|
| Name of the Book | : மகிழ்ச்சியான வாழ்க்கை & அன்பான குடும்பம் |
| Name in English | : Happy life & loving family |
| Name in Arabic | : الحياة السعيدة والأسرة الحبيبة |
| Author | : **Mufti A. Omar Sheriff Qasimi** |
| **Proof Readers** | : Abdul Qadir Rabbani, Imamudeen Hasani |
| Language | : Tamil |
| Edition | : 1st, Jan 2023 |
| Total Pages | : 128 |
| Copies | : 2000 |
| Book Code | : DH-TML 2075 |
| Printed by | : Patel Graphics, Chennai - 6. |

**HADIYAH: RS. 100/-**

Published by:

DARUL HUDA
QUALITY ISLAMIC BOOK PUBLISHERS
# 211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-1.
Phone :+91-44-25247866,
Mobile : +91-98401 74121
darulhuda.chennai@gmail.com
www.darulhuda.net

# பொருளடக்கம்


பதிப்புரை - 4

தாருல் ஹுதா அறிமுகம் - 7

1. அன்புதான் மகிழ்ச்சிகள் நிறைந்த
குடும்பத்தின் அஸ்திவாரம் - 11

2. வெறுப்பு ஒரு நெருப்பு! - 18

3. சிணுங்கல்களை சகிப்போம்!
வருத்தங்களை தவிர்ப்போம்! - 26

4. தர்க்கம் தவிர்ப்போம்! - 35

5. நல்ல துணையைத் தேர்ந்தெடுத்து, ஒத்து வாழ்வோம்!
வெற்றி காண்போம்! - 42

6. நிறைகளைப் பார்ப்போம்!
குறைகளை கண்மூடுவோம்! - 49

7. கோபம் தவிர்ப்போம்! - 56

8. அதிகம் எதிர்பார்க்க வேண்டாம் - 61

9. சந்தேகம் தவிர்ப்பீர்! - 71

10. உறவாடுவீர்! - 81

11. போட்டிப் போட வேண்டாம்!
பிடிவாதம் பிடிக்க வேண்டாம்! - 99

12. வாழ்க்கையை அனுபவியுங்கள்!
சடைந்து விடாதீர்கள்! - 109


----

# பதிப்புரை

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அல்லாஹ்வின் வாழ்த்துகளும் பாதுகாப்பும் நபி முஹம்மத் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் மீதும் நிலவட்டும்.

அல்லாஹ்தான் இந்த சிறு தொகுப்பை வெளியிடுவதற்கு எங்களுக்கு உதவினான். அவனுடைய அருளும் உதவியும் இல்லை எனில் எங்களால் எந்த நல்ல காரியத்தையும் செய்திருக்க முடியாது. எங்களில் ஒவ்வொரு பணியிலும் அவனுடைய அருளை மட்டுமே நாங்கள் எதிர்பார்த்தவர்களாகவும் நம்பிக்கை வைத்தவர்களாகவும் இருக்கிறோம்.

குடும்ப வாழ்க்கை அல்லாஹ்வின் அற்புதமான ஓர் அருட்கொடையாகும். மனிதனுக்கு வாழ்க்கையின் மீது பற்றையும் பிடிப்பையும் ஆசையையும் ஏற்படுத்தக் கூடியதாக குடும்ப வாழ்க்கை இருக்கிறது. தாய் தந்தை எப்படி நமக்கு அல்லாஹ்வின் மாபெரும் அருளோ அப்படித்தான் மனைவி மக்களும் நமக்கு அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும்.

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் புரிந்துணர்வும் ஒற்றுமையும் இல்லை என்றால் அந்த குடும்பம் சண்டை சச்சரவுகளால், மன கசப்புகளால், வீணான குழப்பங்களால் சூழப்பட்டுவிடும்.

சேர்ந்து வாழ ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள்தான் கணவன் மனைவி என்பவர்கள். சேர்ந்து வாழவேண்டுமென்றால் இருவரும் ஒருவரை ஒருவர் புரிய வேண்டும், நேசிக்க வேண்டும், ஒருவர் மற்றவருக்காக விட்டுக்கொடுக்க வேண்டும். இப்படி பல நூறு நற்பண்புகள் உள்ளன. அவற்றை கணவன்

மனைவி இருவரும் தங்களிடம் கொண்டுவர வேண்டும். எந்த வகையிலும் இருவருக்கும் இடையில் முரண்பாடுகள், பிரச்சனைகள் வராமல் தங்கள் உறவை பாதுகாக்க வேண்டும்.

எனது சமூக வாழ்க்கையில் பல ஆண்டுகளாக குடும்ப பிரச்சனைகளில் கணவன், மனைவி இருவருக்கும் நான் கொடுத்த ஆலோசனைகள், உபதேசங்கள், வழிகாட்டல்கள் ஆகியவற்றை சுருக்கமாக தொகுத்து வாழ்க்கையை அன்பினால் கட்டி எழுப்புவோம் என்ற பெயரில் தொடராக எழுதி வந்தேன். அந்த தொடர் பன்னிரண்டு அமர்வுகளில் நிறைவுற்றது. அதையே இப்போது மகிழ்ச்சியான வாழ்க்கை & அன்பான குடும்பம் என்ற தலைப்பில் ஒரு சிறு நூலாக வெளியிடுகிறோம். அல்ஹம்து லில்லாஹ்.

நீங்களும் இந்த நூலை வாசிப்பதோடு திருமணம் முடிக்க இருக்கிற எல்லோருக்கும் இந்த நூலை வாசிக்க தூண்டுங்கள்! உங்கள் மூலம் ஒரு குடும்பம் ஒற்றுமையாகிவிட்டால், நேர்வழியில் வாழ்ந்துவிட்டால், உங்களுக்கு அது அல்லாஹ்விடம் பெரும் நற்கூலியாக அமைந்து விடும்.

இன்றைய வாலிபர்களுக்கு இதுபோன்ற வழிகாட்டல்கள் மிக மிக அவசியமாகும். சரியான வழிகாட்டல் இல்லாமல் பல வாலிப ஆண்கள், பெண்கள் தங்களுக்கு மத்தியில் இருக்கிற பிரச்சனையை சரிவர தீர்க்க தெரியாமல் மணமுறிவுக்கு சென்றுவிடுகின்றனர். அவர்களுக்கெல்லாம் இந்த நூல் ஒரு வழிகாட்டியாக நல்லுபதேசியாக அமையும் என்று அல்லாஹ்விடம் ஆதரவு வைக்கிறோம். அல்லாஹ் அப்படியே ஆக்கித் தருவானாக! ஆமீன்.

இதில் ஏதாவது பிழைகள், தவறுகள் இருப்பின் எங்களுக்கு அதை தெரியப்படுத்தும்படி அன்புகூர்ந்து உங்களை கேட்டுக்கொள்கிறோம். அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிட அது எங்களுக்கு உதவியாக இருக்கும் இன் ஷா அல்லாஹ்.

அல்லாஹ்வே! எங்களிடமிருந்து இதை ஏற்பாயாக! எங்களை மன்னிப்பாயாக! உனது மார்க்கப் பணிகளுக்கு உதவிய உதவக்கூடிய எல்லோருக்கும் நீ அருள் புரிவாயாக! அவர்களை மன்னித்து, அவர்களை சொர்க்கவாசிகளில் ஆக்குவாயாக! அவர்களின் உடல், பொருள், குடும்பம், மார்க்கம் அனைத்திலும் அவர்களுக்கு பரகத் - அருள் வளம் புரிவாயாக! ஆமீன்.

**குர்ஆன், ஸுன்னா பணியாளன்**

**உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்**

**தாருல் ஹுதா - மதராஸ் - இந்தியா**

**H 10-06-1444 | 03-01-2023**

----

# தாருல் ஹுதா
# அறிமுகம்

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

தாருல் ஹுதா அறிமுகத்தின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கத்தையும் அதன் பணிகளையும் விவரிப்பதுடன் அதன் இன்றைய தேவையையும் தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்: இறை நம்பிக்கையுடைய ஆண்களும், இறை நம்பிக்கையுடைய பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கின்றனர். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைப்பிடித்து, (மார்க்க வரி) ஜகாத்து கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். இத்தகை யோருக்கு வெகு விரைவில் அல்லாஹ் அருள்புரிவான். (அல்குர்ஆன் 9 : 71)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்: (நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் மனிதர்களைச் சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களில் இருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கட்டும். இத்தகையவர்கள்தாம் வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 3 : 104)

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: உங்களில் யாராவது ஒரு

தவறைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தனது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும். (ஸஹீஹுல் புகாரீ)

மேலும் நபி ﷺ கூறுகிறார்கள்: இறைநம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசங்கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஓர் உடலைப் போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் முறையிடுகின்றன. (ஸஹீஹுல் புகாரீ)

இன்று நமது சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலோர் சரியான மார்க்க ஞானத்திற்கும் முறையான வழிகாட்டலுக்கும் அதிகம் தேவையுள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்கள் மற்றும் நபி மொழிகளுக்கிணங்க சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபி வழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைப்பொருத்தத்தை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் **தாருல் ஹுதா**.

**பணிகளும் தொண்டுகளும்:**

**அழைத்தல்:**

இதுவே இஸ்லாமின் அடிப்படையாகும். உலகில் இப்பணி இறைத் தூதர்கள் வாயிலாக நிலை நிறுத்தப்பட்டது. இறுதித் தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்குப் பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபி மொழியும் இதன் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. இதற்கிணங்க இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும், அதன்

உயர்வுகளை விளங்கச் செய்வதும் தாருல் ஹுதாவின் தலையாயப் பணியாகும்.

**கற்பித்தல்:**

இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது முக்கிய பணியாகும்.

**நூல் வெளியிடுதல்:**

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூல்களை தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது சிறப்புப் பணியாகும்.

**உதவுதல்:**

அல்லாஹு தஆலாவே அனைவரின் தேவைகள், துன்பங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய்பவன். மிகப்பெரிய வள்ளலாகிய அல்லாஹ் தன் சார்பாக உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்றவரை உதவுவது முஸ்லிம்களுடைய அடிப்படைப் பண்புகளாகும். இவ்வுன்னதப் பணிக்காக **பைத்துல்மால்** (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச் சிந்தையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று தேவையுடையோருக்கு உதவுதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

மேற்கூறிய பணிகளைத் தவிர, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனிதச் சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூக புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை அல்லாஹ்வுக்காக தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும் தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் தங்களால் இயன்றவரை இப்பணிகளில் பங்கு பெறவும் அழைக்கிறோம்.

பேராற்றலுடைய அல்லாஹ்விடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!!

உங்களால் முடிந்த உதவிகளை அல்லாஹ்வின் பொருத்தம் நாடி தந்துதவுங்கள்.

நன்மையான காரியங்களில் எவற்றை நீங்கள் உங்களுக்காக (மரணம் வருவதற்கு) முன்னதாகவே செய்து கொள்கிறீர்களோ அவற்றை அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெற்றுக் கொள்வீர்கள். (அல்குர்ஆன் 73 : 20)

அல்லாஹ் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

# அன்புதான் மகிழ்ச்சிகள் நிறைந்த குடும்பத்தின் அஸ்த்திவாரம்

பயிற்சியாளரின் சாட்டைக்கு பயந்த சிங்கமும் புலியும் ஒரு நாள் அவரின் கையிலிருந்து சாட்டை நழுவி விட்டால் அவனது கதையை முடித்து விடுகின்றன. ஆனால், வளர்ப்பவரின் அன்பினால் அடக்கப்பட்ட மிருகங்களோ ஒருபோதும் அவரை காயப்படுத்துவதில்லை. அவரோ எந்த சாட்டையுமின்றி அதனுடன் இருக்கிறார்.

அன்பினால் பழக்கப்படுத்தப்பட்ட மிருகங்கள் தங்கள் வளர்ப்பாளர் மீது உயிரையே விடுகின்றன. அவரை ஆரத்தழுவி தமது பாசத்தை பொழிகின்றன. அவை அவர்களை கொஞ்சுகின்றன. அவர்கள் அவற்றை கொஞ்ச வேண்டுமென்று அடம் பிடிக்கின்றன. இதில் சிங்கம், புலி, யானை, சிறுத்தை, என எந்த மிருகமும் விதிவிலக்கு இல்லை.

அன்பு என்பது அத்தகைய அபூர்வ சக்தியாகும்.

அன்பு என்பது ஓர் இனிப்பாகும். எத்தகைய கசப்பான கட்டளையையும் அவற்றில் அன்பை கலந்துவிட்டால் அவற்றை இனிப்பாக்கி விடலாம். எத்தனையோ இனிப்பான கட்டளைகளில் அன்பில்லாததால் அவை கசப்பாகிவிடுகின்றன.

அன்பு என்பது ஒரு பசையை போன்றது. அன்பு என்பது காந்தத்தை போன்றது.

அன்புக்கு அளவுமில்லை, எல்லையுமில்லை. அன்புக்கு விலை போட முடியாது. அன்புக்கு விலை கொடுக்கவும் முடியாது.

உண்மையான அன்பு உண்மையான உயிரிலிருந்து வருகிறது. உண்மையான அன்பிற்கு மதிப்பு உயிர்தான். வேறொன்றும் அன்பிற்கு சமமாக முடியாது.

அன்பு உள்ளத்திற்கு குளுமையை தருகிறது. வெறுப்பு மனதில் புழுக்கத்தை ஏற்படுத்துகிறது.

அன்பு மனதிற்கு அமைதியை தருகிறது. பகைமை உள்ளத்தில் பதட்டத்தை ஏற்படுத்துகிறது.

அன்பு ஓர் ஆரோக்கியமாகும். வெறுப்பு ஒரு நோயாகும்.

குடும்ப வாழ்க்கையின் அஸ்திவாரமே அன்பும் பாசமும்தான்.

அன்பு இருந்தால்தான் நிம்மதியும் அமைதியும் அக்கறையும் இருக்கும்.

வீட்டுக்கு சுவரும் முகடும் பாதுகாப்பாகும். அவை இரண்டும் உறுதியாக இருக்க வேண்டும். அப்படித்தான் அன்பும் பாசமும் குடும்பத்திற்கு சுவரைப்போலவும் முகட்டைப் போலவுமாகும்.

குடும்ப வாழ்கையின் இலக்கணத்தையும் இல்லற வாழ்க்கையின் ரகசியத்தையும் கணவன் மனைவி உறவையும் இப்படித்தான் அல்லாஹ் அல்குர்ஆனில் வர்ணிக்கிறான்:

இன்னும், அவன் உங்களுக்காக உங்களிலிருந்தே (உங்கள்) மனைவிகளை - அவர்களிடம் நீங்கள் அமைதி பெறவேண்டும் என்பதற்காக - படைத்ததும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதுதான். இன்னும், உங்க(ள் இரு குடும்பங்க)ளுக்கு மத்தியில் அன்பையும் கருணையையும் அவன் ஏற்படுத்தினான். சிந்திக்கின்ற மக்களுக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் உள்ளன.[1]

1. அல்குர்ஆன் 30 : 21.

வாழ்க்கை என்பது ஒரு இருள் என்றால் அன்பு என்பது அதன் வெளிச்சமாகும். வாழ்க்கை என்பது ஒரு பாதை என்றால் அன்பு என்பது அதன் வழிகாட்டியாகும். வாழ்வதற்கு உயிர் அவசியம் என்றால் அந்த உயிருக்கு அன்பு அவசியம். ஆகவேதான் அன்பு கிடைக்காதவர்கள் உயிர் வாழவே ஆசைப்படுவதில்லை. அன்பை பறிகொடுத்தவர்கள் அல்லது அதை தவறவிட்டவர்கள் அல்லது அதில் ஏமாற்ற மடைந்தவர்கள் அந்த அன்பருக்கு பின்னால் வாழ்க்கையே கசந்து விட்டது என்று கூறுகிறார்கள்.

அல்லாஹ்வின் தூதரும் நமது மார்க்க முன்னோடியுமான நமது உயிரினும் மேலான நபி ﷺ அவர்களிடம் ஒரு தோழர் கேட்கிறார், உங்களுக்கு மிக பிரியமானவர், மிக அன்பிற்குரியவர் யார் என்று. உடனே அந்த நபி ﷺ அவர்கள், என் மனைவி ஆயிஷாதான் எனக்கு மிக பிரியமானவர், மிக அன்பிற்குரியவர் என்று பதில் அளிக்கிறார்கள்.[2]

பாருங்கள்! ஒரு இறைத்தூதர் தன் மனைவியின் மீது வைத்திருந்த அன்பையும் பிரியத்தையும்.

நீங்கள் உங்களையும் உங்கள் வாழ்க்கையையும் நேசிப்பது உண்மை என்றால் உங்கள் மனைவி மக்களை நீங்கள் நேசித்தாக வேண்டும். அவர்கள் மீது அன்பும் பாசமும் வைத்தாக வேண்டும். அப்போதுதான் நாம் இந்த உலக வாழ்க்கையை சுவைக்க முடியும், ஜீரணிக்க முடியும்.

உலகில் உள்ள மிருகங்களை, பறவைகளை, இன்னும் பல உயிரினங்களை நன்கு பாருங்கள்! அவை எப்படி ஜோடி ஜோடியாக குடும்பம் குடும்பமாக வாழ்கின்றன! ஒவ்வொரு மிருகமும் தன் ஜோடியை கொஞ்சியும் பாசத்தை பகிர்ந்தும் மகிழ்கிறது. காதல் பறவை என்று சொல்லப்படும் ஓர் பறவை இனத்தை பார்த்தாவது நாம் அன்பையும் பாசத்தையும் படிக்க வேண்டாமா?

2. அறிவிப்பாளர்: அம்ரு இப்னு ஆஸ் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 4358.

மனைவியை முழுமையாக நேசிக்காத ஓர் ஆணின் ஆண்மை குறைவுடையது என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

அப்படித்தான் தன் கணவனை நேசிக்காத, அவன் மீது அன்பையும் பாசத்தையும் அடை மழையாக பொழியாத பெண்ணின் பெண்மை குறைபாடுடையது என்பதிலும் எனக்கு சந்தேகமில்லை.

உடலுக்கு பல விட்டமின்கள் அவசியமாக இருப்பது போல வாழ்க்கைக்கு கண்டிப்பாக அன்பு என்ற முக்கியமான விட்டமின் அவசியம்.

வாகனங்கள் இயங்குவதற்கு ஒரு எரி சக்தி அவசியம். அப்படித்தான் நமது குடும்ப வாழ்க்கை சீராக இயங்குவதற்கு நமக்கு அன்பு என்ற சக்தி தேவை.

அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது. அன்பை கடைகளில் காடுகளில் தேட முடியாது. அன்பை, அன்பைக் கொண்டுதான் பெற முடியும். அன்பு, உள்ளங்களின் ஒற்றுமையினால் இறைவன் ஏற்படுத்துகிற அற்புதமாகும்.

அந்த மகா கருணையாளனிடம் நாம் அவனது அன்பை வேண்ட வேண்டும். அவனது நல்லடியார்களின் அன்பை வேண்ட வேண்டும். அப்படித்தான் கணவன் மனைவியின் அன்பையும் மனைவி கணவனின் அன்பையும் பெற்றோர் பிள்ளைகளின் அன்பையும் பிள்ளைகள் பெற்றோரின் அன்பையும் வேண்ட வேண்டும்.

அல்குர்ஆன் தனக்கே உரிய இலக்கிய நயத்துடன் நமக்கு இதை இப்படி கற்பிக்கிறது.

இன்னும், அவர்கள் கூறுவார்கள்: “எங்கள் இறைவா! எங்களுக்கு எங்கள் மனைவிகள் மூலமும், எங்கள் சந்ததிகள் மூலமும் (எங்கள்) கண்களின் குளிர்ச்சியை தருவாயாக! எங்களை

இறையச்சமுள்ளவர்களுக்கு இமாம்களாக (-வழிகாட்டிகளாக) ஆக்குவாயாக!"[3]

ஆக, உங்கள் ஜோடியின் மீதும், பிள்ளைகள் மீதும், குடும்பத்தார் மீதும் அன்பு வையுங்கள். உள்ளங்களை அன்பினால் நிரப்புங்கள்.

விசாலமான உள்ளம் அன்பு நிறைந்த உள்ளமே!

அருள் நிறைந்த உள்ளம், அன்பு ஊற்றாய் ஊறுகிற உள்ளம்தான்.

அன்பு மிகைத்த உள்ளம்தான் அமைதியும் நிம்மதியும் குடியிருக்கும் உள்ளம்.

நமது நபி ﷺ அவர்கள் அன்பைக் கொண்டு அரபுலகத்தையே தம் பக்கம் ஈர்த்தார்கள். வெறுத்தவர்கள் மீது கருணை காட்டினார்கள். அந்த நபி ﷺ அவர்களின் அன்பினால் ஈர்க்கப்பட்ட ஒவ்வொருவரும் இந்த மார்க்கத்திற்காக உயிரையே தியாகம் செய்தார்கள்.

அன்று நபி ﷺ அவர்கள் மக்கள் மீது காட்டிய அன்பு இன்றும் உயிரோடு இருந்து பல நூறு கோடி முஸ்லிம்களை அவர்கள் பக்கம் ஈர்த்து வைத்திருக்கிறது.

இன்றும் அவர்களை போற்றி புகழ்ந்து பேசுகிறோம். அவர்களின் தூய தியாக வரலாறை பற்றி பேசும்போது கண்கள் நம்மையும் அறியாமல் கண்ணீரை கொட்டுகின்றன.

நமது உயிர்கள் அந்த தூதர் மீது அர்ப்பணமாகட்டுமாக!

அந்த தூதரின் போதனையே அன்புதான். குடும்ப வாழ்க்கைக்கு துணை ஒன்றைத் தேடினேன். அவளை நான் மணம் முடிக்க முடிவு செய்துள்ளேன் என்று ஒரு தோழர் அந்த நபியிடம் கூறும்போது உடனே அந்த தோழருக்கு நபி ﷺ அவர்கள் கூறிய ஆலோசனை இதுதான். அதாவது, நீ அவளை மணம்

3. அல்குர்ஆன் 25 : 74.

முடிக்கும் முன்பாக ஒரு முறை பார்த்துக்கொள்! அது உங்கள் இருவருக்கும் இடையில் அன்பையும் இணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த மிக தோதுவாக இருக்கும். அந்த தோழரும் அப்படியே செய்தார். தன் திருமணம் முடிந்து அந்த வாழ்க்கை மிக சிறப்பாக இருந்தது என்று அவர் தன் அனுபவத்தை பகிர்கிறார்.[4]

மனைவி மக்கள் என்பவர்கள் நீங்கள் உருவாக்கிய ஒரு அழகிய பூங்காவாகும். அதை ஏன் வெறுப்பு என்ற நெருப்பை கொண்டு பொசுக்க முயற்சிக்கிறீர்கள். அன்பு என்ற நீர் பாய்ச்சி மேலும் மேலும் அதை செழிப்படைய செய்யுங்கள்!

யாரிடம் குறை இல்லை, அல்லாஹ் ஒருவனைத் தவிர. குறைகளை பார்க்காதீர்கள். குற்றங்களைத் தேடாதீர்கள். தவறுகளை மனதில் பதிய வைத்துக் கொள்ளாதீர்கள். காயங்களை மருந்திட்டு ஆற்றிவிடுங்கள். நிறைகளைப் பாருங்கள்! நல்லதைத் தேடுங்கள்! நல்லதை நினைவில் வையுங்கள்! உங்கள் ஜோடிக்கு நன்மையை செய்யுங்கள்! ஒரு சில சமயம் ஜோடியில் ஒருவர் வெறுப்பை வீசினாலும் நீங்கள் அன்பை காட்டுங்கள். அவர் உங்களுக்கு அடிமையாகி விடுவார். உங்கள் மீது தன் உயிரையே கொடுத்து விடுவார்.

இதோ அல்லாஹ் நமக்கு அப்படித்தானே வழி காட்டுகிறான்.

நன்மையும் தீமையும் சமமாகாது. மிக அழகியதைக் கொண்டு (தீமையை) தடுப்பீராக! அப்போது உமக்கும் எவர் ஒருவருக்கும் இடையில் பகைமை இருக்கிறதோ அவர் ஓர் நெருக்கமான உறவுக்காரரைப்போல் ஆகிவிடுவார். இ(ந்த குணத்)தை பொறுமையாளர்கள் தவிர கொடுக்கப்பட மாட்டார்கள். இன்னும், பெரும் பாக்கியம் உடையவர்கள் தவிர இ(ந்த குணத்)தை கொடுக்கப்பட மாட்டார்கள். நிச்சயமாக ஷைத்தானிடமிருந்து ஏதாவது தீய எண்ணம் (உமது எதிரியை பழிவாங்கும்படி)

4. அறிவிப்பாளர்: முகீரா இப்னு ஷுஃபா ﷺ, நூல்: ஸுனனுத் திர்மிதி எண்: 1087.

உம்மைத் தூண்டினால் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவீராக! நிச்சயமாக அவன்தான் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன் ஆவான்.[5]

இந்த அறிவுரையை குடும்ப வாழ்க்கையில் முதலில் நாம் பின்பற்றவில்லை என்றால் நம்மை விட துர்பாக்கியவான்கள் யார் இருக்க முடியும்? அல்லாஹ் பாதுகாப்பானாக!

அன்பு உருவாகுவதற்கும் அன்பு நிலைத்திருப்பதற்கும் அன்பு பரவுவதற்கும் அன்பு நீடித்திருப்பதற்கும் அன்பை அதிகப்படுத்துவதற்கும் ஆயிரம் காரணங்களைத் தேடுங்கள்! வெறுப்புக்கு ஒரு காரணத்தை கூட தேடிவிடாதீர்கள்.

அல்லாஹ்வே உனது அன்பையும் நேசத்தையும் எங்களுக்கு கொடு! உன் தூதரின் அன்பையும் நேசத்தையும் எங்களுக்கு கொடு! எங்கள் ஜோடிகளின், பிள்ளைகளின் அன்பையும் பாசத்தையும் எங்களுக்கு கொடு! எங்கள் உள்ளங்களை அன்பினால் நிரப்பு! வெறுப்பையும் மன கசப்புகளையும் எங்கள் இதயங்களில் இருந்து முற்றிலுமாக அகற்றி விடு! இந்த உலக வாழ்க்கையிலும் மறு உலக வாழ்க்கையிலும் எங்களுக்கு அழகியதை தா! நரக நெருப்பை விட்டு எங்களை பாதுகாத்துக் கொள்! நிச்சயமாக நீ நன்கு செவியுறுபவன், அனைத்தையும் நன்கறிந்தவன்.

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”[6]**

ஆமீன்.

***

5. அல்குர்ஆன் 41 : 34-36.
6. அல்குர்ஆன் 25 : 74.

அதிகாரம் 2

# வெறுப்பு ஒரு நெருப்பு!

குடும்பத்தில் எல்லோரும் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள்.

உறவுகளில் எல்லோரும் ஒரே குணத்தில் பழக மாட்டார்கள்.

சொந்த பந்தங்களில் பலதரப்பட்டப் பண்புகளை உடையவர்கள் இருப்பார்கள்.

வாசனைகள் எல்லாம் ஒரு மாதிரியாக இருந்தால் அதுவும் சலித்துவிடும் அல்லவா?

பூக்கள் எல்லாம் ஒரே நிறமாக இருந்தால் பார்க்க அலுப்பு தட்டிவிடுமல்லவா?

பூமி முழுக்க ஒரே மாதிரியாக இருந்தால் சுற்றி பார்க்க மனம் வருமா?

கடல்களில் பல வகை! மலைகளில் பல வகை! மரங்களில் பல வகை! நீர்களில் பல வகை! நிறங்களில் பல வகை! கனிகளில் பல வகை! ஒரே வகை கனியில் பல சுவை! பூமியிலும் பல வகை! இப்படி பல வகை மக்களாகத்தான் மனிதர்களையும் அல்லாஹ் படைத்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

மக்களிலும், ஊர்வன விலங்குகளிலும், (-பூமியின் மேல் செல்லக் கூடிய பொதுவான மிருகங்களிலும், ஆடு மாடு ஒட்டகம்

குதிரை போன்ற) கால்நடைகளிலும் இவ்வாறே (அவற்றின்) நிறங்கள் மாறுபட்டவை உள்ளன. அல்லாஹ்வை அவனது அடியார்களில் அஞ்சுபவர்கள் எல்லாம் அறிஞர்கள்தான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், மகா மன்னிப்பாளன் ஆவான்.[7]

அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ் தன் ஞானத்தின் படி இந்த உலகத்தில் உள்ள படைப்புகளை ஜோடி ஜோடியாக, ஜதை ஜதையாக படைத்திருக்கிறான்.

ஆண் பெண், இரவு பகல், நீர் நெருப்பு, வானம் பூமி, இனிப்பு கசப்பு, நல்லது கெட்டது, உண்மை பொய், இப்படியாக பல முரண்பட்டதை அல்லாஹ் சில தத்துவங்களின் அடிப்படையில் படைத்திருக்கிறான்.

முரண் இல்லை என்றால் ஒரு பொருளை அறிய முடியாது.

அநீதி, அக்கிரமம் என்று ஒன்று இல்லை என்றால் நீதியை நேர்மையை புரிய முடியாது. குருடு என்று ஒன்று இல்லை என்றால் பார்வையின் அருமை தெரியாது. செவிடு என்று இல்லை என்றால் செவியின் பெருமையை உணர முடியாது. ஊமை என்று ஒன்று இல்லை என்றால் பேச்சின் மதிப்பை அறியமுடியாது.

எல்லாவற்றுக்கும் ஒரு தத்துவம் இருக்கிறது. அந்த தத்துவத்தின் ஆழத்தை அல்லாஹ் அறிந்தவனாக இருக்கிறான்.

ஏக இறைவன் அல்லாஹ்வை நம்புகிற நாம் அவனது படைப்புகளில் உள்ள அவனது ஏற்ற தாழ்வையும் மாறுபட்ட பல தன்மைகளையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அல்லாஹ் படைத்ததில் எந்த தீமையும் இல்லை. மனிதன் அதை பயன்படுத்துவதில்தான் தீமை நிகழ்கிறது.

---

7. அல்குர்ஆன் 35 : 28.

சரி, ஒரு பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ சில நேரம் வெறுப்பு தவிர்க்க முடியாமல் இருக்கலாம்.

சில நேரங்களில் மனைவியின் சில பேச்சுகளால், அல்லது சில செயல்களால் அல்லது சில அனுகுமுறைகளால் கணவனுக்கு மனைவி மீது கோபம் வரலாம். பிறகு அந்த கோபம் வெறுப்பாக மாறலாம். ஆனால், அந்த வெறுப்பை போக்க வழிகளை தேட வேண்டுமே தவிர எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்ற முயற்சிக்கக் கூடாது. அதாவது, அந்த வெறுப்பை அதிகப்படுத்தக் கூடாது.

முதலில் வெறுப்பிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேட வேண்டும்.

கணவன் மனைவி ஒவ்வொருவரும் மற்றவரின் அன்பை வேண்டி அல்லாஹ்விடம் மிக உருக்கமாக துஆ செய்ய வேண்டும்.

வெறுப்புக்கான காரணங்களை விட்டு விலகி செல்ல வேண்டும்.

என் வாழ்க்கைத் துணைக்கு என்னில் என்ன பிடிக்க வில்லை, எது? அவனை / அவளை வெறுப்படையச் செய்கிறது என்பதை கணவன் / மனைவி அறிந்து அதை விட்டு தன்னை தூரமாக்க வேண்டும்.

விருப்பு, மற்றும் வெறுப்பின் அளவுகோல் மார்க்கத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் மார்க்கம் அனுமதித்த தனி உரிமையில் தான் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று மற்றவர் முரண்டு பிடிக்க கூடாது.

இருவரும் ஒன்றாக அமர்ந்து மனம் விட்டு பேச வேண்டும்.

உளூ செய்துவிட்டு, முடிந்தால் இரண்டு ரக்அத் தொழுது துஆ செய்துவிட்டு பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

பேசும்போது அமைதியாக பேச வேண்டும். கண்ணியமான வார்த்தைகளை பயன்படுத்தி பேச வேண்டும்.

பேச துவங்கும் முன் ஒருவர் மற்றவரை உயர்த்தி, புகழ்ந்து, அவரிடம் உள்ள நல்லதை எடுத்து சொல்லி பேச ஆரம்பிக்க வேண்டும்.

முடிந்தளவு தனி அறையில் அமர்ந்து பேச வேண்டும்.

இருவரில் ஒருவர் அடுத்தவரிடம் என்ன குறையை காண்கிறாரோ அதை மிகவும் பெரிது படுத்தாமல், கடுமையான சொற்களை கொண்டு விமர்சிக்காமல், எனக்கு உன்னிடம் இன்ன இன்ன செயல் அல்லது குணம் மனதுக்கு வலியை தருகிறது என்று பண்பாக பேச வேண்டும்.

பண்பு மிகத் தேவை. பண்பாக பேசவில்லை என்றால் எல்லாம் வீணாகிவிடும்.

ஒருவர் மற்றவரிடமிருந்து அவர் சொல்வதை காது கொடுத்து கேட்க வேண்டும். எடுத்தெறிந்து பேசக் கூடாது. இடைமறித்து பேசக் கூடாது.

அசிங்கமான வார்த்தைகளால், கடுமையான வார்த்தைகளால் ஒருவர் மற்றவரை காயப்படுத்த கூடாது.

ஒருவர் மற்றவரின் இயற்கை படைப்பை பற்றி பேசக் கூடாது. ஒருவர் மற்றவரை அவரின் இயற்கை உடல் அமைப்பை குறை கூறக் கூடாது. அல்லாஹ் படைத்தது அவர் என்ன செய்ய முடியும்? ஒருவர் மற்றவரை பார்த்து பொருந்தி கொண்டுதான் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தீர்கள். அப்படி இருக்க திருமணத்திற்கு பின்னர், ஒருவர் மற்றவரை பார்த்து, நீ குண்டு, நீ ஒல்லி, நீ நெட்டை, நீ குட்டை, நீ கருப்பு, நீ அப்படி நீ இப்படி என்று குறைப் பேசுவது மிகவும் நேர்மையற்றதாகும்.

ஒருவர் மற்றவரின் பெற்றோரை பற்றி பேச நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவர்களை மரியாதை குறைவாக பேசக் கூடாது.

பேசும்போது இணக்கத்தை ஏற்படுத்தவே பேசுகிறேன் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தி பேச வேண்டும்.

ஒரே செய்தியை திரும்ப திரும்ப பேசக்கூடாது.

ஒருவர் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து விட்டால் மீண்டும் அதை நினைவுபடுத்தக் கூடாது.

பேசிக்கொண்டிருக்கும்போது பிள்ளைகள் வந்தால் அவர்கள் மீது கோபத்தை வெளிப்படுத்தக் கூடாது. அவர்கள் முன்னிலையில் பேச்சை தொடரக் கூடாது. அவர்களை வேறு வேலையில் ஈடுபடுத்திவிட்டு, வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டு பேச்சை தொடர வேண்டும். இல்லை என்றால் பேச்சை வேறு ஒரு நேரத்திற்கு ஒத்திவைக்க வேண்டும்.

நேர்மையாக, நீதமாகப் பேச வேண்டும். பிறர் தன் மீது குறை சொன்னார் என்பதற்காக உடனே அவர் இவர் மீது இல்லாத பொல்லாததை சொல்ல முயலக் கூடாது. பழிபோட வழி தேடக் கூடாது.

நீண்ட நேரம் பிரச்சனைகளை பேசக் கூடாது. ஷைத்தான் தேவை இல்லாத குழப்பங்களை ஏற்படுத்தலாம்.

மறுமை பயத்தையும், விசாரணை நாளையும் நினைவில் வைத்து அல்லாஹ்வின் தண்டனையை பயந்து பேச வேண்டும்.

ஒருவர் மற்றவரின் செயலுக்கு இதுதான் காரணம் என தன் யூகத்தின் படி முடிவு செய்துகொண்டு பேசக் கூடாது. ஒருவர் சொல்லும் நியாயமான காரணங்களை அழகிய முறையில் மற்றவர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேவை இல்லாத யூகங்களை அறவே பேசக் கூடாது.

கணவன், மனைவியின் மீது கற்பு ரீதியாக சந்தேகப்பட்டு பேசக் கூடாது.

அதுபோன்ற குழப்பத்தை கண்கூடாக பார்க்காமல் பிறர்

சொல்வதை வைத்து முடிவு செய்து விடக்கூடாது.

தீர விசாரிக்காமல் எடுக்கப்படுகிற எல்லா முடிவுகளும் நஷ்டத்தையே ஏற்படுத்தும்.

ஒவ்வொரு காரியத்திலும் நிதானமும் சகிப்புத் தன்மையும் பொறுமையும் மிக உயர்ந்த குணங்களாகும்.

நபி ﷺ அவர்கள் ஒரு தோழரை பார்த்து உம்மிடம் இருகுணங்கள் உள்ளன. அவற்றை அல்லாஹ் விரும்புகிறான் என்று கூறினார்கள்.[8]

ஆகவே, பிரச்சனைகளில் சகிப்புத்தன்மையோடும் நிதானத்தோடும் இல்லை என்றால் பிரச்சனைகள் தீராது, முடிவுக்கு வராது.

மனைவியிடம் உள்ள ஒரு குறையை சொல்வதற்கு முன்னர் கணவன் தனது குறையை திருத்த வேண்டும். அப்படித்தான் மனைவியும். தன்னிடம் அதே தீமையை வைத்துக் கொண்டு அடுத்தவரை மட்டும் குறை சொல்வது எப்படி நியாயமாகும்?

அல்லாஹ்வின் விதியை பொருந்திக் கொண்டு பேச வேண்டும். அல்லாஹ்வையோ, அவனது விதியையோ குறை கூறி விடக் கூடாது. அல்லாஹ்விற்கு கோபத்தை ஏற்படுத்தும் சொற்களை பயன்படுத்தக் கூடாது.

தொழுகை நேரம் வந்துவிட்டால் முதலில் தொழுகைக்கு சென்றுவிட வேண்டும். உணவு நேரம் வந்து விட்டால் உணவுக்காக சென்றுவிட வேண்டும்.

முடிந்தவரை அஸர் தொழுகைக்கு பின்னர் பேசுவது நல்லது. மக்ரிபு தொழுகைக்கு முன்பாக பேசி முடித்து விட வேண்டும். அதாவது அந்தளவு நேரத்திற்குள்ளாக பேசி தீர்ப்பது நல்லது.

8. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ﵄, நூல்: ஸுனனுத் திர்மிதி எண்: 2011.

எந்தளவு குறைவாகப் பேச முடியுமோ பேசி, பிரச்சனைகளை பெரிதாக்காமல் இலகுவாக முடித்துக் கொள்வது மிக நல்லது.

ஒருவர் மற்றவருக்காக அல்லாஹ் உனக்கு அருள் புரியட்டும் அல்லாஹ் உன் மீது கருணை காட்டட்டும் இப்படி நல்ல துஆக்கள் செய்துகொண்டே பேச வேண்டும்.

பொய் சத்தியம் செய்துவிடக் கூடாது. மிக மிக அவசிய தேவை இல்லாமல் மற்றவரை சத்தியம் செய்ய சொல்லக் கூடாது. சத்தியம் செய்ய அவசியம் ஏற்பட்டால் அல்லாஹ்வின் மீது மட்டுமே செய்ய வேண்டும். ஒருவர் சத்தியம் செய்து விட்டால் அவர் அதை மீறக் கூடாது. மற்றவர் அவரை பொய்ப்பிக்கக் கூடாது. அவர் பொய் சத்தியம் செய்தார் என்று அல்லாஹ் வெளிப்படுத்தினால் தவிர.

இணக்கமே சிறந்தது என்று (4:128ல்) அல்லாஹ் கூறி இருப்பதை நினைவில் வைத்து பேச வேண்டும்.

மன கசப்புகளை நீக்க, வெறுப்புகளை களைய நமது நபி ﷺ அவர்கள் கூறிய அழகிய அறிவுரையை நமது கவனத்தில் எப்போதும் வைக்க வேண்டும்.

முஃமினான கணவன் முஃமினான மனைவியை வெறுத்து விட வேண்டாம். அவளிடம் ஒரு குணம் அவனுக்கு பிடிக்க வில்லை என்றால் அவளிடம் வேறு ஒரு குணம் அவனுக்கு திருப்தியாக இருக்கும்.[9]

அல்லாஹ்வே, எங்கள் குடும்பங்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்கி வைப்பாயாக! எங்கள் துணைகள் மூலமாக எங்களுக்கு நிம்மதியை அமைதியை ஆதரவை ஏற்படுத்துவாயாக! எங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவாயாக! கோபத்தை வெறுப்பை பகைமையை எங்கள் உள்ளத்திலிருந்து அகற்றுவாயாக! உனக்கு நன்றி உள்ளவர்களாக, நீ எங்களுக்கு

9. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1469.

பங்களித்ததை கொண்டு திருப்தி அடைந்தவர்களாக எங்களை ஆக்கி வைப்பாயாக! எங்களில் ஒருவரை மற்றவருக்கு சோதனையாக ஆக்கி விடாதே! எங்களை நல்லோரில் ஆக்குவாயாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[10]

ஆமீன்.

***

10. அல்குர்ஆன் 25 : 74.

அதிகாரம் 3

# சிணுங்கல்களை சகிப்போம்! வருத்தங்களை தவிர்ப்போம்!

பெண்ணின் நடையில் நெளிவு இருப்பது போல அவளின் குணத்திலும் நெளிவுகள் பல இருக்கும்.

கிளைமேட் அவ்வப்போது மாறுவது போல அவளின் குணங்களிலும் மாறுதல் நிகழும்.

காலங்களில் வெயிலும் உண்டு, குளிரும் உண்டு, மழையும் உண்டு, வசந்தமும் உண்டு.

சாலை என்றால் அதில் சில வளைவுகளும், மேடு பள்ளமும் இருக்கத்தான் செய்யும்.

இப்படி நம் அன்றாட வாழ்க்கையில் எதுவும் ஒரே மாதிரி இருப்பதில்லை. எல்லாவற்றிலும் சில சில சிறிய பெரிய மாற்றங்கள் நிகழத்தான் செய்கின்றன. அந்த மாற்றங்களை நாம் அனுசரித்து, வாழ்க்கை பயணத்தை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறோம்.

கவலையில் அழுகை, மகிழ்ச்சியில் சிரிப்பு, வலியில் வேதனை இப்படியாக எல்லாம் வாழ்க்கையில் இருக்கத்தான் செய்யும்.

வாழ்க்கை என்பது பேக்கரியில் செய்யப்படுகிற கேக் அல்ல. ஒரே மாதிரியாக, இனிப்பாகவே எல்லாம் இருப்பதற்கு. அல்லது ஃபேக்டரியில் செய்யப்படுகிற சிரிப்பு பொம்மை அல்ல, நாம் சிரித்து கொண்டே இருப்பதற்கு.

நாம் உணர்வும் உணர்ச்சிகளும் உள்ள மனிதப் பிறவிகள். நமக்குள் ஓர் உலகமே இருக்கிறது.

ஆகவே, குடும்ப வாழ்க்கை என்றால் சில குழப்பங்களும் இருக்கும். மகிழ்ச்சிகள் இருப்பது போல் சில கவலைகளும் இருக்கும். இன்பங்கள் இருப்பது போல் சில வலிகளும் இருக்கும். கணவனிடம் சில முரட்டு குணங்களும், கோபமும் சில பிடிவாதங்களும், சில குளறுபடிகளும் இருக்கலாம்.

பெண்ணிடம் சில சிணுங்கல்களும், சில தவறான புரிதல்களும் சில அவசர முடிவுகளும் இருக்கலாம். ஆணை விட பெண் அதிக உணர்ச்சிவசப்படுபவள், ஒன்று அவள் சீக்கிரம் கோபப்படுவாள். தாமதமாக அதிலிருந்து விடுபடுவாள். அல்லது தாமதமாக கோபப்பட்டுவிட்டு மிக தாமதமாகவே அந்த கோபத்திலிருந்து வெளியே வருவாள். ஒரு சிலர் இதிலிருந்து விதிவிலக்காக இருக்கலாம்.

குறையில்லாத மனிதன் இல்லை. தவறுகள் செய்யாதவர்கள் வானவர்கள் மட்டுமே. இறைவன் படைத்த ஆண் பெண் படைப்பில் அவரவர் உடல் அமைப்புக்கும், குணங்களுக்கும் தொடர்பு உண்டு.

பெண்ணை பற்றி வேதமும் தூதரும் கூறியவை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை. அதாவது பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறாள்.[11] ஆகவே அவளில் வளைவு இருப்பதுடன்தான் நாம் வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிக்க முடியும். வில் வளைந்திருந்தால்தான் அதிலிருந்து வேட்டையை நோக்கி அம்பெறிய முடியும். அப்படித்தான் பெண் வளைந்திருந்தால்தான் அவள் பெண். அவள் ஆணுக்கு சுகத்தை இன்பத்தை மகிழ்ச்சியை ஆனந்தத்தை அன்பை பாசத்தை பிரியத்தை கொடுக்க முடியும். ஆணும் பெண்ணும் மனித இனம் என்றாலும் இருவரும் இருவேறு பாலினம்.

11. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3331.

இருவருக்குள் இருக்கும் உணர்வுகள் எண்ணங்கள் ஆசைகள் எல்லாம் ஒன்றாக இருக்க முடியாது. சில ஒத்து போனாலும் பல வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

ஆணுக்கு பொறுப்புகளும், சுமைகளும், கடமைகளும் அதிகம். பெண்ணுக்கு பொறுப்புகளும், கடமைகளும் குறைவாக இருப்பினும் குடும்பத்தின் உள் விவகாரங்களை அவள்தான் கவனிக்க வேண்டும்.

சில சமயம் உள் விவகாரங்களை கவனிப்பது வெளிவிவகாரங்களை கவனிப்பதை விட மிக கடினமும் சிரமமும் சவால்கள் நிறைந்ததுமாக இருக்கும். கடலுக்கு மேல் இருக்கிற அலைகளை விட அதற்குள் இருக்கிற எரி மலை மிக ஆபத்தானது என்பது எல்லாருக்கும் தெரியும். பூமிக்கு மேல் இருக்கும் மலைகளை விட அதன் கீழ் இருக்கும் மலைகளின் வேர்கள் மிக ஆழமானது, வலிமையானது.

அப்படித்தான் உள் விவகாரங்களை கவனிப்பது. ஆகவே, அது ஒரு சாதாரண காரியமல்ல.

இருவரும் தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்பையோ, அற்ப காரணங்களையோ கவனத்தில் கொள்ளாமல் தங்கள் பெற்றோரையும் குடும்பத்தையும் உறவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கணவனுக்கு வெளி வாழ்க்கையில் பிரச்சனைகள் இருக்கலாம். கொடுக்கல் வாங்களில், வர்த்தக தொடர்பில் இப்படி ஏதாவது அவனுக்கு சிக்கல்கள் இருக்கலாம். அதனால் அவனுக்குள் மன அழுத்தம் ஏற்படலாம். அந்த மன அழுத்தங்களிலிருந்து வணக்கவழிபாடுகள், திக்ருகள், துஆக்கள், நல்லோரின் அறிவுரைகளை செவியுறுதல் போன்ற நற்காரியங்கள் மூலம் வெளியே வர முயற்சிக்க வேண்டும். இவற்றை தவிர மற்ற எல்லா முயற்சிகளும் மன அழுத்தத்தை அதிகப்படுத்துமே தவிர குறைக்காது; பிரச்சனைகளை கூட்டுமே தவிர குறைக்காது.

அல்லாஹ்வின் நினைவைக் கொண்டு உள்ளங்கள் அமைதி பெறும் என்று அல்லாஹ் கூறுகிறான்.[12]

குர்ஆன் ஓதுவதும் அதில் சிந்திப்பதும் மனதிற்கு மிகப் பெரிய நிம்மதியும் அமைதியும் இருப்பதாக நபிமொழி கூறுகிறது.[13]

மஸ்ஜிதில் தொழுவதும் முடிந்தளவு பகலில் அங்கு அதிக நேரம் இருப்பதும் ஒரு தொழுகைக்கு பின்னர் இன்னொரு தொழுகையை எதிர்பார்த்து முன்கூட்டியே மஸ்ஜிதுக்கு செல்வதும் நமக்கு மிக அதிகமாக மனதிற்கு அமைதியையும் நிம்மதியையும் மன வலிமையையும் கொடுக்கும். காரணம் இந்த அமல்கள் மூலம் நாம் அல்லாஹ்விற்கு மிக நெருக்கமாக, அவனுக்கு மிக பிரியமானவர்களாக ஆகிவிடுகிறோம். அதுபோன்று அறிஞர்களின் ஆலோசனைகளை விட்டும் அவர்களின் அறிவுரைகளை விட்டும் ஒருபோதும் நாம் தூரமாகிவிடக் கூடாது. நமது மனோ இச்சையின்படி, நமது கோப உணர்வுகள்படி அவசர முடிவு எடுக்கக் கூடாது.

சரி, இப்போது பெண்ணுடைய பிரச்சனைக்கு வருவோம்.

ஒரு பெண் படைப்பால் பலவீனமானவள் என்பதை நாம் அறிவோம். அவள் சிறுபிராயத்திலிருந்தே தன் தாய் தந்தை உடன் பிறந்தோரின் அன்பில் பாசத்தில் வளர்ந்தவள். அவள் பூமியில் விழுந்த பின்னர் முதன் முதலில் பார்த்த ஆண் அவளின் தந்தைதான். அவளை தூக்கி கொஞ்சி, கேட்டதை எல்லாம் அதற்கு அதிகமாக வாங்கி கொடுத்து வளர்த்தவர் அவளின் தந்தை. தான் ஏழையாக இருப்பினும் தன் மகளை ஓர் இளவரசியாக வளர்க்க முயற்சி செய்பவர் அவளின் தந்தை. வீட்டில் அண்ணன் தம்பி இருந்தால், மாமா, சாச்சா இருந்தால் இப்படி எல்லா உறவு ஆண்களாலும் அன்பாலும் பாசத்தாலும் பிரியத்தாலும் தாலாட்டப்பட்டவள் பெண். இப்படித்தான் பெண்கள் பெரும்பாலும் வளர்க்கப்படுகிறார்கள்.

12. அல்குர்ஆன் 13 : 28.

13. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2699.

ஆகவே, கணவனும் சரி, கணவனின் வீட்டாரும் சரி, தங்கள் வீட்டுக்கு வருகிற மணமகளை தங்கள் வீட்டின் வேலையாளாக, எடுபிடி கையாளாக பார்க்காமல், குறை கூறுவதற்கே மஹர் கொடுத்து ஈஜாப் கபூல் செய்து அழைத்து வரப்பட்டவள் என்று கருதாமல், இவளை வீட்டில் வைப்பதும் இவளுக்கு சோறுபோடுவதும் இவளை அவ்வப்போது குத்தி பேசி கேலி கிண்டல் செய்து நாம் மகிழ்வதற்காக என்று நினைக்க வேண்டாம்.

மருமகள், மனைவி வீட்டு வேலைகளை செய்வாள், ஆனால், அவள் வேலைக்காரி அல்ல.

மருமகள், மனைவி மாமா மாமியை கவனிப்பாள்,. ஆனால் அவள் எடுபிடி கையாள் அல்ல.

கணவனுக்கு அவள் பணிவிடைகள் செய்வாள், அதில் நேரம் காலம் பார்க்க மாட்டாள். ஆனால், அவள் அடிமை இல்லை. அவள் ஓர் இராணி, அவள் ஓர் இளவரசி, அவள் ஓர் இல்லத்தரசி, அவள் ஒரு மனையாள், இப்படியாக உயர்வான பல பட்டங்களுக்கு உரிய சமூக அந்தஸ்துள்ள, கண்ணியமும் மதிப்பும் உள்ளவள். அவள் மனைவி என்ற பெயரில் இருந்தாலும் சரி, மருமகள் என்ற பெயரில் இருந்தாலும் சரி அவள் புகுந்த வீட்டில் சம உரிமை உள்ளவள், கணவனின் வீட்டின் மேய்ப்பாளர், பொறுப்பாளர், அரசி ஆவாள். மாமனார் மாமியாருக்கு மருமகள் அதாவது தங்களுக்கு பிறக்காத ஒரு மகள், தங்களுக்கு பிறந்த மகளுக்கு வீட்டில் என்ன உரிமையும் கண்ணியமும் இருக்கிறதோ அதே உரிமையும் கண்ணியமும் மருமகளுக்கும் இருப்பதை மாமனார் மாமியார் உறுதி செய்ய வேண்டும். தங்கள் மகளை நடத்துவதுபோல் மருமகளை நடத்த வேண்டும். அவளுக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் கொடுக்க வேண்டும். அவளுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அவள் மீது செலவு செய்வதில் கருமித்தனம் காட்டக்

கூடாது. அன்பையும் பாசத்தையும் நெருக்கத்தையும் அவளிடம் காட்ட வேண்டும். அவளின் உணர்வுகளை காயப்படுத்துவதோ, அவளின் மனதை புண்படுத்துவதோ அவளுக்கு தொந்தரவு தருவதோ அவளை குத்தி பேசி அவமானப்படுத்துவதோ அவளின் குடும்பத்தை இழிவுப்படுத்துவதோ அவளின் உரிமைகளை பறிப்பதோ அநியாயக்கார அரசன் அடிமைகளை நடத்துவது போன்று அவளை மோசமாக நடத்துவதோ மிகப் பெரிய பாவமாகும், இழிவான குணமாகும், கேவலமான பண்பாகும்.

பல குடும்பங்கள் தங்கள் வீட்டுக்கு வந்த பெண்களோடு - மனைவியோடு - மருமகளோடு, நாத்தனாரோடு - இப்படி நடந்துகொள்வது இந்த சமுதாயத்தில் அதிகமாகி விட்டது. இது மிக வேதனையான, கவலைக்குரிய விஷயமாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

ஒரு மணமகளுக்கு புகுந்த வீட்டில் பிறந்த வீட்டில் இருந்த சூழ் நிலைக்கு கொஞ்சம் மாற்றமான அல்லது முழுதும் மாற்றமான சூழ் நிலை இருக்கலாம்.

ஒரு பெண்ணுக்கு அவளது தாய் சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும். பெண் தனது தாயிடமிருந்து அவளிடமுள்ள நல்ல குணங்களையும் உயர்ந்த பண்புகளையும் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு பெண் சமூகவாதியாக இருக்க வேண்டும். குடும்பத்தின் மீது பற்றுள்ளவளாக இருக்க வேண்டும். அவள் புகுந்த வீட்டை தான் பிறந்த வீட்டை போல பார்க்க வேண்டும். தனது தாயை தனது தந்தையை மதிப்பதுபோல, பேணிபாதுகாப்பது போலவே தனது மாமனார் மாமியாரை மதிக்க வேண்டும், பேணி பாதுகாக்க வேண்டும். வேர் இல்லாமல் மரம் இல்லை, மரம் இல்லாமல் கனி இல்லை. கணவன் மரம் என்றால், தனக்கும் தனது கணவனுக்கு பிறக்கும் பிள்ளைகள் கனிகள் என்றால் மாமனாரும்

மாமியாரும் வேர் ஆவார்கள். குடும்பத்திற்கு எல்லாரும் அவசியம். ஆகவே, பெண் அனைவரையும் அவரவர் குணாதிசயங்களோடு ஏற்றுகொள்ள வேண்டும். தனது தாய் தந்தையின் கோபத்தையும் கண்டிப்பையும் ஏற்றுக்கொள்வது போன்று தனது மாமனார் மாமியாரின் கோபதாபங்களையும் கண்டிப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை அனுசரித்து கொள்ள வேண்டும்.

கணவனோடு எப்போதும் இணக்கமாக இனிமையாக மென்மையாக பாசமாக இருக்க வேண்டும். அவனை வெறுக்கவோ, புறக்கணிக்கவோ, ஒதுக்கவோ கூடாது. கோபத்தையும் சிணுங்கல்களையும் இரவுக்குள் முடிவுக்கு கொண்டு வந்து விட வேண்டும். நீ என் மீது மகிழ்ச்சி அடையாமல் நான் தூங்க மாட்டேன் என்று இறங்கி வந்து விட வேண்டும். இப்படித்தான் நபிமொழி உனக்கு அறிவுரை கூறுகிறது. உனது நபியை விட உனக்கு நன்மையை நாடக்கூடியவர் யார் இருக்க முடியும்?

விட்டுக்கொடுப்பவர் கெட்டுப்போக மாட்டார். பணிபவர் உயர்வார்.

கணவனும் தன் கோபத்தை அடக்கக்கூடியவனாக இருக்க வேண்டும். வெறுப்பு என்ற நெருப்பை கண்ணிலும் வாயிலும் இதயத்திலும் எப்போதும் வைத்துக்கொண்டே இருக்கக் கூடாது. ஒருவர் மன்னிப்பு கேட்டால் உடனே மற்றவர் மன்னித்து விட வேண்டும். ஒருவர் இறங்கி வந்துவிட்டால் உடனே மற்றவரும் இறங்கிவிட வேண்டும். ஒருவர் சிரித்துவிட்டால் உடனே மற்றவரும் பல்லை காட்டிவிட வேண்டும். மூஞ்சை தூக்கிகொண்டு முருங்கை மரத்தில் உட்கார்ந்து இருக்க கூடாது.

வாழ்க்கையை மகிழ்ச்சியாக்க முயற்சிக்க வேண்டும். வாழ்க்கையை இன்பமாக்க வழிகளை தேட வேண்டும். வலிகள்

இருந்தாலும் இன்பமாக வாழ வழிகளை உருவாக்க வேண்டும். மன வலிமையும் குண நலனும் சிரித்த முகமும் கனிவான சொல்லும் சேவை மனமும் விட்டுக்கொடுக்கும் இயல்பும் இருந்தால் போதும் நீங்கள்தான் அங்கு ஆட்சியாளர்.

மனைவியின் சிணுங்கல்களை அன்பாக இன்பமாக கடந்து செல்வது அலைகளில் கால்களை நனைத்து மகிழ்வதுபோல. மனைவியின் சில முறையீடுகளை புன்முறுவலோடு செவிகொடுத்துவிட்டு, அதில் உள்ள நல்லதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றி தர வேண்டும். சிலவற்றை புரிய வைக்க வேண்டும். கணவன், மனைவிக்கு ஓர் ஆசிரியராகவும் இருக்க வேண்டும், அவளிடமுள்ள சில குறைகளை தவறுகளை திருத்தி தர வேண்டும். அவளுக்கு மாணவனாகவும் இருக்க வேண்டும். அவளிடமிருந்து கற்க சில நல்லவை இருக்கலாம். அவளுக்கு ஆலோசனை கொடுக்க அவளின் ஒரு நல்ல தோழியைப் போன்றும் இருக்க வேண்டும்.

அவள் சிணுங்கும்போது நீ அட்ஜஸ்ட் செய்ய வேண்டும். நீ கோபப்படும்போது அவள் அட்ஜஸ்ட் செய்ய வேண்டும். அட்ஜஸ்மெண்ட்தான் வாழ்க்கை. அட்ஜஸ்மெண்ட் இல்லை என்றால் எதுவும் முடியாது. பாவத்திலும் மார்க்கத்தை மீறுவதிலும் அட்ஜஸ்மண்ட் இல்லை. மற்றபடி முடிந்த வரை விட்டுக்கொடுப்பதும் பெருந்தன்மையாக கடந்து செல்வதும்தான் வாழ்க்கை.

குடும்பத்தில் மன கசப்புகளும் சண்டை சச்சரவுகளும் அதிகமாகி ஒருவர் மற்றவருடன் அறவே இணக்கமாக இருக்கவே முடியாது என்று வரும்போதுதான் பிரிதல் என்பது வருமே தவிர, எடுத்த எடுப்பில் என்னை விடு என்று பெண் சொல்வதோ, அல்லது உன்னை தலாக் செய்துவிடுவேன் என்று ஆண் சொல்வதோ மார்க்கத்தில் இல்லை என்பதை நாம் புரிய வேண்டும். அல்லாஹ் மிக அறிந்தவன்.

அல்லாஹ்வே எங்களுக்கு எங்கள் ஜோடிகள் மூலம் மன நிம்மதியையும் கண் குளிர்ச்சியையும் தா! எங்களில் ஒருவரை மற்றவருக்கு மகிழ்ச்சியாக ஆக்கிவை. கவலையாக பிரச்சனையாக ஆக்கிவிடாதே! எங்களுக்குள் உள்ள மன கசப்புகளை, வெறுப்புகளை, கோபதாபங்களை போக்கி விடு! மார்க்கத்தோடு மறுமைக்காக வாழ்கிற நல்லோரில் எங்களை ஆக்கிவிடு! எங்கள் அமல்களையும் குணங்களையும் சீராக சிறப்பாக ஆக்கிவிடு!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[14]

ஆமீன்.

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

***

14. அல்குர்ஆன் 25 : 74.

# தர்க்கம் தவிர்ப்போம்!

திருமணம் செய்ய முடிவு செய்திருக்கும் என் சகோதர சகோதரிகளே! மணம் முடித்து இல்லற வாழ்வில் இருக்கிற என் சகோதர சகோதரிகளே! ஒரு முக்கிய செய்தியை நீங்கள் அறிய வேண்டும். அதை வாழ்க்கையில் கொண்டு வர வேண்டும். மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அது ஒரு முக்கிய காரணமாகும்.

அது என்ன? ஆம், அதுதான் தர்க்கம் செய்வதையும், வாக்குவாதம் செய்வதையும், விதண்டாவாதம் பேசுவதையும், ஏட்டிக்குப்போட்டிக்கு பதில் பேசுவதையும், குதர்க்கம் செய்வதையும் விட்டு விலகி இருப்பதாகும்.

அன்பு மலர வேண்டுமென்றால் ஒருவர் பேசுவதை ஒருவர் செவியுற வேண்டும். ஒருவர் பேசும்போது காது கொடுக்க வேண்டும். அதில் உள்ள நியாயத்தை ஏற்க வேண்டும். அதில் உள்ள உண்மையை மறுக்கக் கூடாது. பிரச்சனைக்கு தீர்வு உண்மையை மறைப்பதோ, மறுப்பதோ அல்ல. உங்கள் மனைவி அல்லது உங்கள் கணவர் உங்களிடம் உள்ள பிரச்சனையை சுட்டிக்காட்டினால் அதை ஏற்றுக் கொண்டு உங்களை திருத்த முயற்சி செய்யுங்கள்.

ஏற்றுக்கொள்பவருடைய கண்ணியம் கூடுமே தவிர குறைவதில்லை.

சரி, இருவரில் ஒருவர் மற்றவரின் குறையை சொல்லும்போது

அவர் அதை திருத்திக்கொள்ள, தன்னை மாற்றிக்கொள்ள தேவையான அளவு கால அவகாசம் கொடுக்க வேண்டும். இப்பவே நீ இதை விட வேண்டும், இப்பவே நீ இதை செய்து முடிக்க வேண்டும் என்று ஒருவர் மற்றவர் விஷயத்தில் அடம் பிடிக்க கூடாது. நாம் சொல்வது பெரும்பாவம் பற்றி அல்ல. பொதுவான செயல்கள், நடத்தைகள், பழக்கவழக்கங்கள் போன்ற விஷயங்களை பற்றியாகும்.

ஒவ்வொரு விஷயத்தையும் பிரச்சனையாக ஆக்கி அது சம்பந்தமாக விவாதம் செய்வது, தர்க்கிப்பது, வாய் சண்டை செய்வது, குடும்ப உறவில் ஒருவர் மீது மற்றவருக்கு வெறுப்பை ஏற்படுத்தி விடும். வெறுப்பு தோன்றுவது கண்ணாடியில் வெடிப்பு விழுவதை போல. ரொம்பவும் ஆபத்தானதாகும்.

சச்சரவு செய்வது வாய்க்கு இன்பமாக இருக்கும் உடலுக்கு சொறிவது இன்பமாக இருப்பதை போல. பிறகுதான் தெரியும் எரிச்சலும் வேதனையும். அப்படித்தான் சும்மா சும்மா சண்டை செய்வதும், விதண்டாவாதம் செய்வதும், சச்சரவு செய்வதும் பெரும் மன வேதனைக்கு வழி வகுத்துவிடும்.

தர்க்கம் செய்வது ஒரு கெட்ட குணமாகும். நமது பாசமிகு நபியவர்கள் இதை வெறுத்துள்ளார்கள். இதை விடுவதற்கு ஆர்வமூட்டி இதை தவிர்ப்பவருக்கு சொர்க்கத்தின் நற்செய்தியை கூறி இருக்கிறார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: தர்க்கத்தை விடுபவருக்கு சொர்க்கத்தின் ஓரத்தில் ஒரு வீட்டுக்கு நான் பொறுப்பாளர் ஆவேன்.[15]

ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டிய பின்னர் தர்க்கம் செய்யக்கூடாது[16] என்று அல்லாஹ் கூறியதிலிருந்து உடன் பயணிக்கிற

15. அறிவிப்பாளர்: அபூ உமாமா அல்பாஹிலி ﵁, நூல்: ஸுனன் அபூதாவூது, எண்: 4800.

16. அல்குர்ஆன் 2 : 197.

பயணிகளுக்கு இடையில் தர்க்கம் என்பது பயணத்தை கசப்பாகவும், நெருக்கடி மிக்கதாகவும், வெறுப்பாகவும் ஆக்கிவிடும் என்று எச்சரிக்கிறான்.

சிறிய ஒரு பயணத்திலேயே இப்படி என்றால் கணவன் மனைவி இருவரின் வாழ்க்கையோ ஒரு நீண்ட பயணமாகும். ஆகவேதான் மனைவிக்கு வாழ்க்கை துணைவி என்றும், சகதோழி என்றும், வாழ்க்கையின் கூட்டாளி, பங்காளி என்றும் இப்படி பல பெயர்கள் உள்ளன.

சிறிய பயணத்தையே தர்க்கத்திலிருந்து பாதுகாத்து பயணத்தை மகிழ்ச்சியாக, இன்பமாக, சுகமாக, சுபிட்சமாக, ஆனந்தமாக, ஆரோக்கியமாக, அழகாக, அற்புதமாக ஆக்குங்கள் என்று அல்லாஹ்வின் கட்டளை நமக்கு கற்பித்து கொடுக்கும்போது வாழ்க்கையின் நீண்ட பயணமாகிய மணவாழ்க்கையை நாம் எப்படி கண்ணும் கருத்துமாக இந்த தர்க்கம் என்ற ஆபத்திலிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

ஆம், தர்க்கம் என்பது நட்பையும், உறவையும் கலங்கப்படுத்தி நிம்மதியை போக்கக்கூடிய ஒரு கெட்ட அனல் காற்றாகும்.

தர்க்கம் செய்வதற்கு உதாரணமாவது, ஓர் அழகிய வீட்டை கடப்பாறையால் சேதப்படுத்துவது போலாகும். ஒவ்வொரு முறை நீங்கள் உங்கள் வாழ்க்கை துணையோடு தர்க்கம் செய்கிற போதெல்லாம் உங்களது வீட்டை நீங்கள் உடைக்கிறீர்கள். ஆம், உங்களுக்கு இடையில் அன்பினால், பாசத்தினால் கட்டப்பட்ட நல்ல அழகான இல்லறம் என்ற வீட்டை நீங்கள் இடிக்கிறீர்கள். நீங்களாக உருவாக்கிய இல்லறம் என்ற சோலைக்கு நீங்களே தீ மூட்டுகிறீர்கள். ஒருவர் மற்றவரின் மனதை காயப்படுத்துகிறீர்கள்.

கணவன் மனைவிக்கு இடையில் வேறுபட்ட கருத்துகள் வரலாம். அவை முரண்பாடாக இல்லாத வரை பிரச்சனை

இல்லை. அப்படியே இருவரும் இரு மாறுபட்ட கருத்தில் இருந்தால் யாராவது ஒருவர் உடனடியாக தனது கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். மற்றவரின் கருத்தோடு இணக்கம் கண்டு விட வேண்டும்.

நீங்கள் உங்கள் மனைவி மீது ஆழமான உண்மையான பாசம் வைத்திருந்தால் அவளோடு எப்படி வாக்குவாதம் செய்ய மனம் வரும்? அவளை நீங்கள் நேசிப்பவராக இருந்தால் அவளின் பேச்சை மறுத்து பேசி விதண்டாவாதம் பேசவோ, வீண் குதர்க்கம் செய்யவோ உங்களுக்கு மனம் வருமா?

அப்படித்தான் மனைவிக்கும் சொல்கிறேன். கணவனை உண்மையாக மதிப்பவள் எப்படி அவனை எதிர்த்து பேசுவாள்? கணவன் மீது கண்ணியமும் மரியாதையும் உள்ளவள் தனது கணவனின் பேச்சை மறுத்து பேசுவாளா? கணவனின் கருத்து சரியாக இருக்கும்போது அதில் தர்க்கம் செய்ய எப்படி அவளுக்கு மனம் வரும்? அப்படியே அவனின் கருத்து தவறாக இருந்தாலும் மனைவியாகிறவள் அன்பாக பண்பாக அடக்கமாக கணவனுக்கு புரிய வைக்க வேண்டுமே தவிர சண்டை செய்யக் கூடாது, தர்க்கம் செய்யக் கூடாது.

நபி ﷺ அவர்கள் ஒருபோதும் தர்க்கத்தை விரும்ப மாட்டார்கள். தர்க்கம் செய்வது அல்லாஹ்விற்கும் பிடிக்காத குணமாகும்.

உங்கள் கணவன் உங்களை மதிக்க வேண்டுமென்றால் அவருடன் தர்க்கம் செய்யாதீர்கள்!

உங்கள் மனைவி உங்களை போற்ற வேண்டுமென்றால் அவளுடன் தர்க்கத்தை தவிர்த்து பாருங்கள்.

எத்தனையோ அன்பான குடும்பத்தை தர்க்கம் மன கசப்பில் தள்ளியது. மன கசப்பு மண விலக்கில் தள்ளியது.

பணிவான மனைவி ஒருபோதும் கணவனுடன் தர்க்கம் செய்ய மாட்டாள். பாசக்கார மனைவி தனது கணவனிடம்

சச்சரவு செய்து, அவனது மனதை காயப்படுத்தவோ அவனது உள்ளத்தை உடைக்கவோ மாட்டாள். தனது கருத்து கணவனின் கருத்துக்கு மாற்றமாக இருந்தாலும் அதை நயமாக அன்பாக பொறுமையாக எடுத்து சொல்வாள். அவன் அதை ஏற்றுக்கொண்டால் அல்ஹம்துலில்லாஹ். இல்லை என்றால் அவளது பொறுப்பை அவள் நிறைவேற்றி விட்டாள். அவள் மீது குற்றமில்லை.

இங்கு இன்னொரு முக்கியமான செய்தியையும் கவனிக்க வேண்டும். அதாவது கணவன் மனைவி இருவருக்கும் ஈகோ இருக்கக் கூடாது. பிரிஸ்டிஜ் பார்க்கக் கூடாது. யார் முதலாவதாக நல்லதை சொன்னாலும் மற்றவர் அதை அங்கீகரிக்க வேண்டும். நீ சொன்னதை நான் கேட்க வேண்டுமா? எனக்கு தெரியாதா? என்னை விட உனக்கு அதிகம் தெரியுமா? இப்படியான போட்டி மனப்பான்மை கணவன் மனைவிக்குள் வரக் கூடாது.

கணவன், மனைவி இருவரும் தர்க்கம் செய்வதற்கு உதாரணம் எப்படி என்றால் கதவுகளும் ஜன்னல்களும் பூட்டப்பட்டு குளிரூட்டப்பட்ட ஏசி அறையில் நெருப்பு எரிப்பது போலாகும்.

பஞ்சு மெத்தையில் படுத்து தூங்கும்போது நெருப்பு விளக்கை அருகில் வைப்பதற்கு சமமாகும்.

எரிமலைகள் ஒரே சமயத்தில் எடுத்த எடுப்பிலேயே வெடித்து சிதறி அழிவை ஏற்படுத்துவது இல்லை. முதலில் குமுறும். குமுறுதல் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும். பிறகுதான் அது வானுயர வெடித்து சிதறி பேராபத்தை உண்டாக்கும். அப்படித்தான் தர்க்கம் என்பதும்.

இன்னும் பல உதாரணங்களை கூறலாம்.

நமது ரப்பும், நமது நபி ﷺ அவர்களும் தர்க்கம் வேண்டாம் என்று கூறிய அறிவுரையே நமக்கு போதும்.

இன்றிலிருந்து தர்க்கத்தை தவிர்த்து விடுங்கள். ஏட்டிக்கு போட்டி பேசுவதை நிறுத்தி விடுங்கள்! எதிர்த்து பேசுவதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்! மறுத்து பேசுவதை மறந்து விடுங்கள்! சச்சரவு செய்வதை விட்டு விலகிவிடுங்கள்! குதர்க்கம் பேசுவதை மறந்து விடுங்கள்! புழுதி காற்றி வீசினால் அதை எதிர்க்க நீங்களும் புழுதி அள்ளி வீசுவீர்களா? முகத்தை மூடி ஓரமாக ஒதுங்கி உங்களை பாதுகாத்து கொள்வீர்கள்தானே! அப்படித்தான் ஒருவர் வாக்குவாதத்தை தொடங்கினால், சர்ச்சையை ஆரம்பித்தால் உடனே ஒதுங்கி விடுங்கள்! உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்!

ஒருவர் பேசுவதை மற்றவர் கேளுங்கள்! ஒருவருக்கு மற்றவர் செவிகொடுங்கள்! ஒருவர் பேசுவதை மற்றவர் ரசியுங்கள்! அன்பாக அதை ஏற்றுக்கொள்ளுங்கள்!

இப்படி செய்து பாருங்கள்! வாழ்க்கையில் மகிழ்ச்சி மழை எப்படி பொழிகிறது என்று பிறகு பாருங்கள்!

ஒருவரின் பேச்சு பிடித்தால், உண்மையாக இருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லை என்றால் தர்க்கம் செய்யாமல் வாய்மூடி மௌனமாக அமைதி காத்துவிடுங்கள். வாழ்க்கையில் நிம்மதியின் தென்றல் வீசிக்கொண்டே இருக்கும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

அல்லாஹ்வே! எங்களுக்கும் எங்கள் வாழ்க்கை துணைகளுக்கும் மத்தியில் அன்பையும் பாசத்தையும் ஒற்றுமையும் தா!

மன கசப்பில்லாத, உள்ளத்தில் வெறுப்பில்லாத, சண்டை சச்சரவு இல்லாத, அன்பான, பாசமான, நெருக்கமான, நேரான, ஒற்றுமையான, நேர்மையான நல்ல வாழ்க்கையை எங்களுக்கு தா!

ஷைத்தான் எங்களுக்குள் குழப்பத்தை, மன கசப்புகளை, சச்சரவை, பிளவுகளை, வெறுப்புகளை, பிரிவினைகளை

ஏற்படுத்துவதை விட்டு எங்கள் மன வாழ்க்கையை காப்பாற்றுவாயாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[17]

ஆமீன்.

***

17. அல்குர்ஆன் 25 : 74.

## அதிகாரம் 5

# நல்ல துணையை தேர்ந்தெடுப்போம்! ஒத்து வாழ்வோம்! வெற்றி காண்போம்!

உங்களது வாழ்க்கைத்துணை அழகாக இருப்பதை விட, உங்கள் ஜோடி வசதியானவராக இருப்பதை விட, உங்கள் இல்லத்தரசி படித்த பட்டதாரியாக இருப்பதை விட பண்பட்ட, பொறுமையுள்ள ஒத்த கருத்துள்ளவளாக, ஒத்த சிந்தனையுள்ளவளாக இருப்பதுதான் வாழ்க்கையின் நிம்மதிக்கும் வெற்றிக்கும் முக்கிய காரணமாக அமையும்.

இந்த கருத்தை நமது நபி ﷺ அவர்கள், "பெண்கள் அழகுக்காக, செல்வத்திற்காக, வமிசத்திற்காக, மார்க்கத்திற்காக மணம் முடிக்கப்படுவார்கள். நீ மார்க்கமுள்ளவளை தேர்ந்தெடு, உன் கரங்கள் மண்ணாகட்டும் என்று மிக அழகாக கூறியதிலிருந்து மிகத் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.[18]

உங்களுக்கு தய்யிப் - பொருத்தமாக, மனம் விருப்பமாக உள்ளத்திற்கு மகிழ்ச்சியாக, வாழ்க்கைக்கு நறுமணமாக இருப்பவளை மணம் முடித்துக் கொள்ளுங்கள்[19] என்று அல்லாஹ் சொல்லி இருப்பதை நாம் ஆழமாக சிந்தித்தால் இந்த கருத்து நன்றாக புரியவரும்.

தாப, தய்யிப் என்பது இந்த இடத்தில் மிக மிக இலக்கிய நயத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. தாப, தய்யிப் என்பதற்கு

18. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5090.
19. அல்குர்ஆன் 4 : 3.

மிகப் பொருத்தமான பெண் யார் என்றால் அவள் கணவனை மகிழ்விப்பாள், கணவனை பாதுகாப்பாள், கணவனுக்கு பணிவிடை செய்வாள், கணவனின் வளர்ச்சியை விரும்புவாள், கணவனின் வெற்றிக்கு துணை நிற்பாள், கணவனின் இலட்சியம் நிறைவேற, அவனது குறிக்கோள் முழுமை அடைய அன்னை ஹாஜர் தமது கணவனார் நபி இப்ராஹீமுக்கு ஒத்துழைப்பு நல்கியதுபோன்று முழு ஒத்துழைப்பு நல்குவாள். பாலைவனத்தில் விட்டாலும் குழந்தையை பலி கொடுக்க கேட்டாலும் எதற்கும் சம்மதம்தான். அல்லாஹ்வின் நபியாகிய, அறிவாளியான, நல்ல கணவனுக்கு கீழ்ப்படிவதிலும், அவரது நோக்கம் நிறைவேற தனது சுக வாழ்க்கையை இழந்துவிட்டு நாடோடியாக மக்காவின் பாலைவனத்தில் குடியேறவும், பிறகு குழந்தையை பலி கொடுக்கவும் அந்த பெண்மணி தயாராகி இருந்தார் என்றால் அது எத்தகைய நற்பாக்கியம். அவர்தான் ஒவ்வொரு பெண்ணுக்கும் அழகிய முன்மாதிரி ஆவார்.

அப்படிப்பட்ட வாழ்க்கைத்துணையை ஆணும் தேட வேண்டும், பெண்ணும் தேட வேண்டும். இன்று இதற்கு மாற்றமாக, அற்ப அழகை, சொற்ப செல்வத்தை, உலக அந்தஸ்தை, உலகாதாய படிப்பை மட்டுமே அடிப்படையாக வைத்து துணைகள் தேர்ந்தெடுக்கப்படுவதால் குறிக்கோள் இல்லாத வாழ்க்கையாக, இலட்சியமற்ற பயணமாக வாழ்க்கை மாறி இருக்கிறது.

வாழ்க்கை என்றால் என்ன என்றே நமக்கு புரியவில்லை, ஏன் வாழ்கிறோம், நமது பொறுப்பு என்ன, நமக்கு கொடுக்கப்பட்ட கடமை என்ன? இவை எதுவும் நமது சிந்தனையில் இருப்பதில்லை.

வாழ்க்கைத்துணை என்பவர், கல்வியில் வணக்க வழிபாட்டில் உயர்வான சாதனைகளை செய்வதில் உறுதுணையாக, உதவியாக, உத்வேகத்தை கொடுப்பவராக இருக்க வேண்டும்.

உண்பது, உறங்குவது, தின்பது, உடுத்துவது, ஊர் சுற்றுவது,

ஆட்டம் பாட்டம் போடுவது, கண்ணை கவரும் ஆடைகளை அணிந்து விழாக்களிலும் விருந்துகளிலும் வலம் வருவது, அற்ப உலகத்தை சேர்த்து வைத்துக்கொண்டு பெருமை அடிப்பது அல்ல வாழ்க்கை. இதற்காக கொடுக்கப்பட்டதல்ல வாழ்க்கை.

உங்கள் உடலுக்கு பொருந்தாத ஆடையை உங்களால் அணிய முடியுமா? உங்கள் குடலுக்கு ஒவ்வாத உணவை உங்களால் உண்ண முடியுமா? உங்கள் காலை கடிக்கும் காலணியைக் கொண்டு நீங்கள் நீண்ட நேரம் நடக்க முடியுமா?

உங்கள் நல்ல கருத்தை செயல்படுத்தாத உங்கள் காரியதரிசியைக் கொண்டு நீங்கள் உங்கள் நிர்வாகத்தை சிறப்பாக நடத்த முடியுமா? உங்கள் நல்ல திட்டங்களை புரிந்து செயல்படுத்தாத மந்திரியைக் கொண்டு நீங்கள் மக்களுக்கு நல்லாட்சியை தர முடியுமா? அப்படித்தான் வாழ்க்கையில் உங்கள் வாழ்க்கை துணை உங்களை புரியாமல் இருந்தால், உங்களோடு ஒத்த கருத்துள்ளவராக இல்லை என்றால், உங்களால் வாழ்க்கையை வெற்றிகரமாக நகர்த்த முடியாது.

ஒரு வாகனம் தரையில் சீராக ஓட வேண்டுமென்றால் அதன் சக்கரங்கள் எல்லாம் ஒரே அளவாக ஒரே தடிப்பமாக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் வாகனம் சீராக ஓட முடியாது.

அப்படித்தான் வாழ்க்கையும். வாழ்க்கையில் நமது துணை நம்மை புரிந்தவராக, நமது நோக்கத்தை அறிந்தவராக, நமது இலட்சியத்தை விளங்கியவராக, நமது குறிக்கோளை ஆதரிப்பவராக, ஒத்த சிந்தனையும் ஒத்த புரிதலும் உடையவராக இருக்க வேண்டும்.

கணவன், தனது நல்ல எண்ணத்திற்கு ஏற்ப மனைவியை மாற்ற வேண்டும். தனது உயர்வான இலட்சியத்தை தனது வாழ்க்கைத்துணைக்கு புரிய வைக்க வேண்டும். வாழ்க்கையில் தனது இலக்கு என்ன, குறிக்கோள் என்ன என்பதை

மனைவியிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கேற்ப தனது மனைவியை மாற்ற வேண்டும். தான் கற்ற நல்லதை அவளுக்கு கற்பிக்க வேண்டும். தான் புரிந்த வாழ்க்கை பாடங்களை அவளுக்கு புரிய வைக்க வேண்டும்.

வாழ்க்கையில் நாம் என்ன சாதிக்க வேண்டியது இருக்கிறது, பொருளாதாரத்தை எப்படி மேம்படுத்துவது, வரவுக்கு ஏற்ப எப்படி செலவு செய்வது, குடும்ப உறுப்பினர்ககளை எப்படி பேணுவது, பிள்ளைகளை எப்படி வளர்ப்பது, இப்படியாக நல்ல திட்டங்களை இல்லத்தாளுக்கு அன்பாக பண்பாக பாசமாக சொல்லித் தர வேண்டும்; புரியவைக்க வேண்டும்.

அப்போதுதான் ஒத்த கருத்து ஏற்படும். ஒத்த சிந்தனை உருவாகும். கணவன் மனைவி இருவருக்கு இருவேறு கருத்துகள் இருக்கலாம். முரண்பட்ட சிந்தனைகள் இருக்கலாம். ஒத்துபோகாத குறிக்கோள்கள் இருக்கலாம். மாறுபட்ட இலட்சியங்கள் இருக்கலாம். ஆனால், இருவரும் உட்கார்ந்து கலந்தாலோசித்து ஒருவர் மற்றவருக்கு நல்லதை புரிய வைக்கும்போது, உயர்வானதை விளங்க வைக்கும்போது, தனது சிறப்பான வாழ்க்கை இலட்சியத்தை உணர வைக்கும்போது மற்றவரும் தனது கருத்தை, சிந்தனையை, குறிக்கோளை இலட்சியத்தை மாற்றிக் கொள்வார்.

பிறகு, இருவரும் ஒரே குறிக்கோளில், ஒரே இலட்சியத்தில் வாழ்க்கையை முன்னே எடுத்து செல்லலாம்.

நாம் வாழ்கிற உலக வாழ்க்கை எல்லாருக்கும் ஒரே மாதிரியாக அமைந்து விடாது. நல்ல வாழ்க்கை, நல்ல துணைவி, நல்ல வாழ்வாதாரம், நல்ல நண்பர்கள் அமைய வேண்டும் என்று நமக்கு ஆசைதான். சில நேரம் விரும்பாதது நடந்து விடுகிறது. ஒரு கவிதையில் சொல்லப்படுவதுபோல காற்று, கப்பலை அது விரும்பாத திசைக்கு கொண்டு செல்கிறது. அப்படித்தான் வாழ்க்கையும் சில சமயம் ஆசைப்படாதது கிடைத்து விடலாம். பிடிக்காதது அமைந்து விடலாம்.

பழங்கள் பொதுவாக இனிப்புடையவையாகும். ஆனால், பழங்களில் சில புளிக்கவும் செய்யும். சில பழம் கசக்கவும் செய்யும். சில ருசியே இல்லாமல் இருக்கும்.

மலர்கள் பொதுவாக மணக்கும். ஆனால், மலர்களில் சில துர்நாற்றம் அடிக்கும். சில மலர்களில் வாசமே இருக்காது.

மலர்கள் எல்லாம் மல்லிகையாகவோ, ரோஜாவாகவோ, இரவு ராணியாகவோ ஆகிவிட முடியாது. சில பழங்களுக்கு அதன் ருசியை மறைக்கக்கூடிய முரட்டு தோல் இருக்கும். அப்படி இல்லை என்றால் அந்த பழங்கள் மனிதனுக்கு கிடைத்திருக்காது என்பார்கள். அந்த முரட்டு தோலை கண்டு பழத்தை ஒதுக்கி விட்டால் பழத்துக்கு நஷ்டமில்லை. அதை சுவைக்க முடியாமல் போனவனுக்குத்தான் நஷ்டம்.

பெண்கள், பெரும் வரலாற்றுக்கு உரியவர்கள்தான். பெண்களில் பலர் போற்றவும் மதிக்கவும் தக்கவர்கள்தான். வீரர்களின் முதல் பாசறையே தாய்தான் என்பதில் சந்தேகமில்லை.

பெண்களில் சிலர், கொஞ்சம் வம்பும் பிடிவாதமும் உடையவர்களாக இருப்பார்கள். நிலவிலும் கிரகணம் நிகழ்கிறது அல்லவா? சூரியனும் சில சமயம் ஒளி மங்கத்தானே செய்கிறது. ஓடுகிற நதியும் சில நேரம் பள்ளத்தில் வீழ்ந்து, சிறிது நேரம் கழித்து, பள்ளம் நிரம்பி மீண்டும் ஓட தொடங்குகிறது.

இல்லற வாழ்க்கை இன்பமானதுவே. குடும்ப வாழ்க்கை இனிமையானதுதான். கணவன் மனைவி என்ற உறவு மிக சுவையானதுவே. அன்பும் காமமும் கலந்து, பாசமும் நேசமும் இணைந்து, உடலும் உயிரும் ஒட்டி உருவானதுதான் திருமண வாழ்க்கை.

உறவுகளில் ஒப்பந்தத்தின் அடிப்படையில், வாக்குக் கொடுத்து, உறுதிமொழி வாங்கி உருவாக்கப்பட்டதுதான் திருமண உறவு. முன் பின் பழக்கமில்லாமல், நேற்று இன்று அறிமுகமில்லாமல்,

நீண்ட நெடிய இரத்த உறவுகள் இல்லாமல் ஒரு சபையில் செய்யப்பட்ட இந்த ஒப்பந்த உறவு இரு உடல்களை மட்டுமல்ல, இரு உயிர்களை ஒன்றோடு ஒன்று இணைத்து விடுகிறது. ஒருவர் மீது ஒருவருக்கு தேடலை ஏற்படுத்தி விடுகிறது. சொல்லால் வர்ணிக்க முடியாத அக்கறையை இருவரும் இடையில் ஏற்படுத்தி விடுகிறது. தன் மனைவியின் மீது கணவன் பைத்தியமாவதும், தன் கணவன் மீது மனைவி பைத்தியமாவதும் உலக வரலாற்றில் நடக்கும் அன்றாட நிகழ்வாகும்.

எல்லோருடைய வாழ்க்கையிலும் சில மாற்றங்கள் வரத்தான் செய்யும். எல்லாமே இங்கு இன்பமாக ஆகிவிட்டால் மனிதனுக்கு சொர்க்கத்தின் மதிப்பு தெரியாமல் போய்விடுமே!

ஆணும் பெண்ணும் அவரவர் கடமைகளை செய்து தனது துணையோடு ஒத்து போகும்போது அலையில்லா கடலில் ஓடம் மென்மையாக மிதந்து இலக்கை நோக்கி சென்று சேர்வது போல வாழ்க்கையும் மிருதுவாக கடந்து கொண்டே இருக்கும்.

அன்பும், அரவணைப்பும், பாசமும், புரிந்துணர்வும், அடக்கமும், வெட்கமும், பெண்ணிடம் மிகுந்து காணப்பட வேண்டும். ஆணோ தன் வாழ்க்கைத் துணைக்கு செல்வத்தையும், நேரத்தையும் செலவளிப்பவனாக இருக்க வேண்டும். ஆண், தன் மனைவியை அடிக்காமல், அதட்டாமல், கருணையோடு பராமரிக்க வேண்டும்.

ஒத்து போகும்போதுதான் நெருக்கம் அதிகமாகிறது.

ஒத்து போகும்போது பாசம் கூடுகிறது.

ஒத்து போகும்போது குடும்பம் வலுப்பெறுகிறது.

உடலும் உடலும் இணையும்போது இன்பத்தின் எல்லையை அடைய முடிவது போன்று மனமும் மனமும் ஒத்து போகும்போது மகிழ்ச்சியின் எல்லையை அடைய முடியும்.

கணவன் மனைவி ஒத்து வாழும்போதுதான் இருவரில் ஒருவருக்கு மற்றவர் மீது காம ஆசையும் அதிகரிக்கிறது.

காமமானது, தம்பதியர்களுக்கு மத்தியில் மகிழ்ச்சியான, அன்பான வாழ்க்கை அமைய துணை செய்கிறது.

அது மட்டுமல்ல, அவ்வப்போது வந்து போகும் கசப்புகளை போக்கி வாழ்க்கையை இனிப்பாக்கி விடுகிறது.

அல்லாஹ்வே! எங்களுக்கும் எங்கள் வாழ்க்கைத்துணைகளுக்கும் மத்தியில் நல்ல பொருத்தத்தை, ஒற்றுமையை ஏற்படுத்து! மறுமைக்காக வாழ்ந்த நல்லோரில் எங்களை ஆக்குவாயாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[20]

ஆமீன்.

***

20. அல்குர்ஆன் 25 : 74.

# நிறைகளை பார்ப்போம்! குறைகளை கண்மூடுவோம்!

உலகமே குறையுடையதுதான். மறுமைதான் நிறைவானதும் முழுமையானதுமாகும். எல்லோரிடத்திலும் பல நிறைகளும் சில குறைகளும் இருக்கும். குறைகள் இல்லா மனிதனை தேடுவது பீனிக்ஸ் பறவையை தேடி கண்டுபிடிப்பது போலத்தான்.

பிறர் குறைகள் நமக்கு நன்றாக தெரியும்! நமது குறைகள் நமக்கு தெரியாது. குறை சொல்வதும், குறை பேசுவதும், குறைகளை தேடுவதும் நமக்கு கைவந்த கலையாகும்.

நம்மிடத்தில் நூறு குறைகள் இருக்கும். அவை நமது கண்களுக்கு தெரியாது. பிறரிடம் ஒரே ஒரு குறை இருந்தாலும் அது நமது கண்ணில் பட்டுவிடும்.

அரபியில் அழகாக சொல்வார்கள்:

أَبْصَرُ النَّاسِ مَنْ أَبْصَرَ عُيُوبَهُ

மக்களில் நல்ல பார்வையுடையவர் யாரென்றால் தனது குறைகளை நோக்கியவரே!

எப்போதும் குறைகளை பேசுவதும், குறைகளை தேடுவதும், பரப்புவதும் கெட்ட குணமாகும். அத்தகையோரை அல்லாஹ் கண்டிப்பதுடன் அவர்களை எச்சரிக்கவும் செய்கிறான்.

புறம் பேசி குறைகூறி திரிவோருக்கு நாசம் உண்டாகட்டும்.[21]

நாம் ஒருவரை நேசித்தால், அவர் மீது அன்பு வைத்தால் அவரின் நிறைகள் நமக்கு அதிகமாகவும் குறைகள் குறைவாகவும் தெரியும். அல்லது குறைகள் தெரியாமல் போய்விடும்.

ஒருவர் மீது நாம் வெறுப்பு வைத்தால் அவரின் நிறைகள் குறைவாகவும் குறைகள் அதிகமாகவும் தெரியும். அல்லது குறைகள் மட்டுமே தெரியும்.

இமாம் ஷாஃபியி அவர்களின் ஓர் அரபுக் கவிதை இதை அழகாக நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

وَعَيْنُ الرِّضَا عَنْ كُلِّ عَيْبٍ كَلِيْلَةٌ

وَلَٰكِنَّ عَيْنَ السُّخْطِ تُبْدِي الْمَسَاوِيَا

திருப்தியின் கண்ணோ எல்லா குறைகளையும் கண்டுகொள்ளாமல் விட்டுவிடும். அதிருப்தியின் கண்ணோ எல்லா குற்றங்களையும் வெளிப்படுத்தும்.

கணவன், மனைவி உறவு முறை சிறப்பாக, மகிழ்ச்சியாக, இன்பமாக, இனிமையாக அமைவதற்கு சில முக்கிய தத்துவங்களை, அழகிய கோட்பாடுகளை இருவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

அதாவது, ஒருவர் மற்றவரின் நிறைகளை பார்க்க வேண்டும். ஒருவர் மற்றவரின் குறைகளை தேடக்கூடாது, ஒருவர் மற்றவர் மீது குறை சுமத்தக் கூடாது.

கணவர் எங்கே செல்கிறார், யாரோடு பேசுகிறார், அவரின் போனில் யாருடைய நம்பர் இருக்கிறது என்று துருவி துருவி ஆராயக்கூடாது. நல்லெண்ணம் வைக்க வேண்டும். சந்தேக கண் இருந்தால் எல்லாம் குற்றமாகவும் குறையாகவும் தெரியும்.

21. அல்குர்ஆன் 104 : 1.

கணவனும் மனைவியிடம் குறைகளை தேடக் கூடாது. அவள் நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம் என்று அவளின் சொல்லையும் செயலையும் குற்றக்கண் கொண்டே பார்க்கக் கூடாது. அவளது பேச்சுகளுக்கு தப்பான அர்த்தங்களை கொடுத்து, கெட்ட நோக்கத்தை கற்பித்து, பிரச்சனைகளை உருவாக்கக் கூடாது.

மனைவி எதை சமைத்தாலும் அதில் குறை சொல்வது, மனைவியின் ஒவ்வொரு செயலையும் குற்றக்கண்ணோடு பார்ப்பது, எப்படா அவள் தப்பு செய்வாள், அதை நாம் கண்டுபிடிக்கலாம் என்று சி.ஐ.டி வேலை பார்க்கக் கூடாது.

இன்றைய காலகட்டம் எப்படி இருக்கிறது என்றால், ஒருவர் மற்றவர் மீது குறை சொல்வது, பழிபோடுவது, ஒருவருடைய குறையை தோண்டி துருவி ஆராய்வது இப்படியாக குறை பேசுவதும், குற்றம் சுமத்துவதுமே வாழ்க்கையாக ஆகிவிட்டது.

காலையிலிருந்து மாலை வரை, பிறகு மாலையிலிருந்து காலை வரை குறை சொல்லிக் கொண்டே இருப்பது பொழுதுபோக்காக ஆகிவிட்டது.

மனைவி சமைப்பதில் குறை, மனைவி ஆடை அணிவதில் குறை, மனைவியின் உடல் அமைப்பை பற்றி குறை, மனைவியின் குடும்பத்தார்களைப் பற்றி குறை, மனைவியின் சகோதரர்களைப் பற்றி குறை, இப்படியாக கணவன் மனைவியைப் பற்றி குறை சொல்வதையே வாழ்க்கையாக கொண்டிருக்கிறான்.

அதுபோன்று மனைவியும் தன் கணவனைப் பற்றி குறை பேசுகிறாள். கணவனின் பிள்ளைகளைப் பற்றி, அல்லது கணவனின் தாய் தந்தையரைப் பற்றி, கணவனின் சகோதர சகோதரிகளைப் பற்றி, அல்லது கணவனுடைய சொல், செயலைப் பற்றி இப்படியாக இருவருமே எப்போது பேசினாலும் சரி ஒருவரைப் பற்றி ஒருவர் குறை சொல்வது இன்றைய வாழ்க்கையின் வாடிக்கையாகி விட்டது.

தனியாக இருந்தாலும் சரி, வெளியே சென்றாலும் சரி, வீட்டில் இருந்தாலும் சரி, இப்படியாக குறைபேசிக்கொண்டே இருக்கின்ற காரணத்தால் ஒருவர் மீது மற்றவருக்கு வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. பிறகு, பார்ப்பதற்கு வெறுப்பு, பேசுவதற்கு வெறுப்பு, நெருங்கி பழகுவதற்கு வெறுப்பு என்று வாழ்க்கை வெறுப்பால் நிரம்பிவிடுகிறது.

ஏனென்றால், இவளிடத்தில் நாம் பேசினாலே இவள் தன்னைப் பற்றி, தன் குடும்பத்தைப் பற்றி குறை சொல்லிக் கொண்டே இருப்பாள் என்று கணவன் மனைவிடம் பேசுவதை விட்டு தூரமாகி விடுகின்றான். அதுபோன்று, கணவன் தன்னை எப்போதும் குறை சொல்லிக் கொண்டே இருக்கிறான் என்று அவனை விட்டும் மனைவியும் விலகி சென்று விடுகின்றாள். கடைசியாக இந்த தூரமானது இருவருக்கும் மத்தியில் மிக அதிகமாகி விடுகிறது.

வாழ்க்கையை எப்படி மகிழ்ச்சியாக சுவைத்து, இன்பமாக, சந்தோஷமாக, குதூகலமாக வாழ வேண்டுமோ அத்தகைய வாழ்க்கையை கணவன் மனைவி இருவருமே தொலைத்து விடுகிறார்கள்.

பிறகு, இவர்களுக்கு செல்போன் பார்ப்பதே வாழ்க்கையாக அமைந்து விடுகிறது. சினிமாவும் டிவியும் வாழ்க்கையாகி விடுகிறது. இப்படியாக அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் தடம் புரளுவதை பார்க்கின்றோம். இன்று பலர் சோஷியல் மீடியாவிற்கு அடிமையாகி அதிலேயே மூழ்கி விடுகிறார்கள். முன்பெல்லாம் சீரியல்களில் பெண்கள் மூழ்கி கிடப்பார்கள். இன்றைய காலத்தில் ஆணும் பெண்ணும் முக நூலில், அல்லது இன்ஸ்டாகிராமில் மூழ்கிவிடுகிறார்கள்.

கணவனும் மனைவியும் கொஞ்சி குலாவி, பேசி, சிரித்து, சிரிக்க வைத்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டியவர்கள் ஹாய், ஹாய், பை, பை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறார்கள்.

ஒரே வீட்டில், ஒரே ரூமில் வசித்தாலும், சில சமயம் இரவு உறவுகள் இருந்தாலும் கூட இருவரும் மனம் விட்டு சிரித்து பேசுவதோ, பேசி மகிழ்வதோ இல்லாமல் போய்விடுகிறது.

பேசினாலே பிரச்சனை வருகிறது என்று இருவரில் ஒவ்வொருவரும் சொல்வதை பார்க்க முடிகிறது. ஒருவரின் பேச்சை மற்றவர் பாசிடிவாக எடுப்பதே இல்லை. எல்லா பேச்சுக்கும் நெகடிவ் மீனிங் கொடுப்பதே இருவருக்கும் வழக்கமாக ஆகிவிட்டது. ஒவ்வொரு பேச்சிலும் குறைகாண்பதும் குற்றம் சொல்வதும் வாடிக்கையாகி விட்டது.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடைய சிறிய உதாரணத்தை உங்களுக்கு நான் நினைவு கூறுகிறேன்.

நபி ﷺ அவர்களுக்கு முன் உணவு வைக்கப்பட்டால் அது அவர்களுக்கு பிடித்தால் சாப்பிடுவார்கள். இல்லை என்றால் விட்டு விடுவார்கள்.

எந்த ஓர் உணவையும் அவர்கள் குறை கூறியது கிடையாது என்பதாக நாம் ஹதீஸ்களில் பார்க்கின்றோம்.[22]

நபி ﷺ அவர்களின் பொது வாழ்க்கையிலும் சரி, நண்பர்களுடன் பழகும் போதும் சரி, குடும்ப வாழ்க்கையிலும் சரி, யாரைப் பற்றியும் குறை பேசாமல் அவர்களின் நிறைகளை பற்றி மட்டுமே பேசுவது அவர்களின் வழக்கமாக, பண்பாக, வழமையாக இருந்தது.

இன்று இந்த நல்ல பண்பு நமது குடும்பங்களில் தவறிவிட்டது. கணவனும் மனைவியும் இந்த ஒரு நல்ல பண்பை கடைப்பிடிப்பதில்லை. கணவனுக்கு முன்னாலும் கணவனை பற்றி குறை, கணவனுக்கு பின்னாலும் கணவனை பற்றி குறை, தனது தோழிகளிடத்தில் கணவனைப் பற்றி குறை, தனது குடும்பத்தாரிடத்தில் கணவனைப் பற்றி குறை இப்படியாக மனைவி குறை கூறிக்கொண்டே இருக்கிறாள்.

22. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3563.

அதுபோன்றே கணவனும் மனைவி மீது திருப்தியே படுவதில்லை. மனைவியின் சொல்களையும் செயல்களையும் குற்றக் கண்ணாடி கொண்டே பார்க்கிறான். இருவரும் போட்டி போட்டுக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் குறை சொல்லும்போது அவர்களின் வாழ்க்கையில் மனத்தூய்மை என்பது எடுபட்டு விடுகிறது; இருவரின் உள்ளத்தில் அன்பு வற்றி விடுகிறது; பாசம் காய்ந்து விடுகிறது; நேசம் திசை மாறிவிடுகிறது.

எந்த இடத்தில் இக்லாஸ் - மனத்தூய்மை எடுபட்டு விடுமோ அங்கு அல்லாஹ்வின் பரக்கத் இல்லாமல் போய் விடுகிறது.

இக்லாஸ் என்பது வணக்க வழிபாடுகளில் மட்டுமல்ல, கணவன் மனைவிக்கு மத்தியிலும் இக்லாஸ் இருக்க வேண்டும். அதாவது, மனைவியை அல்லாஹ்விற்காக ஏற்றுக் கொண்டு உண்மையான அன்பை கொடுக்க வேண்டும். அப்படித்தான் மனைவியும் கணவனை அல்லாஹ்விற்காக ஏற்றுக் கொண்டு, உண்மையான அன்பை கொடுக்க வேண்டும்.

எப்போது அவர்கள் தங்களுக்கு மத்தியில் குறை சொல்வார்களோ, பழி போடுவார்களோ, பிறரின் குறையை தேடுவார்களோ அப்போது இந்த அன்பு அவர்களுக்கு மத்தியில் கானல் நீராக ஆகி விடுகிறது.

ஆகவே, இந்த பழக்கத்தை நாம் உடனடியாக மாற்ற வேண்டும். அழகிய வார்த்தைகளை, கண்ணியமான பேச்சுகளை பேச வேண்டும். ஒருவர் மற்றவரின் நிறைகளை, உயர்வுகளை, சாதனைகளை, நன்மைகளை புகழ்ந்து பேச வேண்டும்.

குறைகள் சில இருந்தாலும் அவற்றை கண்டும் காணாமல் செல்வது மட்டுமல்ல, அந்தக் குறைகளை அழகிய முறையில் மாற்றுவதற்கு நல்ல முறைகளை கையாள வேண்டும்.

குறைகளை மறைப்பது ஸுன்னாவாகும். குறைகளை பகிரங்கப்படுத்தி அவமானப்படுத்துவது குற்றமாகும்.[23]

23. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 2442.

இங்கு குறைகள் என்று நாம் குறிப்பிடுவது ஒரு பொதுவான வார்த்தையாகும். குறைகள் மார்க்கத்தில் வெறுக்கப்பட்ட செயல்களாக இருக்கலாம். அல்லது சிறு பாவங்களாக இருக்கலாம். அல்லது பெரும் பாவங்களாக இருக்கலாம். அல்லது அதற்கும் மார்க்கத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் ஒருவரில் ஒருவருக்கு பிடிக்காத செயலாக இருக்கலாம்.

நமக்கு பிடிக்காத காரியங்களில் நாம் பெருந்தன்மையாக இருக்க வேண்டும். அல்லாஹ்விற்கு பிடிக்காத காரியமாக இருந்தால் அதை உடனே முடிந்தளவு விரைவாக திருத்த சரி செய்ய முயற்சிக்க வேண்டும். ஆனால், இன்று நாமோ மாற்றமாக இருக்கிறோம். அல்லாஹ்வின் விஷயத்தில் அலட்சியமாகவும் நமது விஷயத்தில் மிக கராராகவும் நடந்து கொள்கிறோம்.

இதுவே நமக்கு அல்லாஹ்வின் பரகத்தும் ரஹ்மத்தும் குடும்பத்தில் இல்லாமல் போவதற்கு காரணமாக ஆகிவிடுகிறது. அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

அல்லாஹ்வே! எங்கள் துணைகளை எங்களுக்கு மன நிறைவாக ஆக்கிவை! அவர்கள் மூலமாக எங்களுக்கும் எங்கள் மூலமாக அவர்களுக்கும் மன நிம்மதியையும் மன மகிழ்ச்சியையும் கண் குளிர்ச்சியையும் தருவாயாக! எங்களுக்கு மத்தியில் ஒற்றுமையை ஒருங்கிணைப்பை தா!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[24]

ஆமீன்.

24. அல்குர்ஆன் 25 : 74.

அதிகாரம் 7

# கோபம் தவிர்ப்போம்!

அன்பான வாழ்க்கைக்கு அடித்தளம் பரஸ்பர புரிந்துணர்வும், பொறுமையும், சகிப்பும், மன்னித்தலும் ஆகும்.

புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், பொறுமை, சகிப்பு, மன்னித்தல் இந்த பண்புகள் குடும்ப வாழ்க்கைக்கு மிக அவசியமாகும்.

மனிதன் என்றால் அவனிடத்தில் சில தவறுகள் இருக்கலாம். அவ்வப்போது சில மிஸ்டேக்ஸ் அவனிடமிருந்து நிகழ்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஆகவே, கணவனும் சரி, மனைவியும் சரி, ஒருவர் மற்றவரை மன்னிப்பவராக இருக்க வேண்டும். அவர் மீது கோபப்படக் கூடாது, எரிச்சல் படக் கூடாது, ஆவேசப்படக் கூடாது, ஆத்திரப்படக் கூடாது. அமைதிகாக்க வேண்டும், நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

கோபம் என்பது ஒரு விஷமாகும். விஷத்தில் கொஞ்சம், அதிகம் என்பது இல்லை.

ஒரு மனிதர் பல முறை எனக்கு உபதேசம் செய்யுங்கள் என்று நபி ﷺ அவர்களிடம் கேட்டபோது, “கோபப்படாதே!” என்றுதான் அவருக்கு நபியவர்கள் உபதேசம் செய்தார்கள்.[25]

அதுபோன்று, முஃமின்கள் கோபப்பட்டால் உடனே மன்னித்து விடுவார்கள் என்று குர்ஆன் போதிக்கிறது.[26]

25. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6116.
26. அல்குர்ஆன் 42 : 37.

இன்னும், முஃமின்கள் உடைய அழகிய பண்புகளில் ஒன்று அவர்கள் கோபத்தை மென்று விழுங்கி விடுவார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.[27]

கோபம் சில நேரங்களில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கலாம். ஆனால், எதற்கெடுத்தாலும் கோபப்படுவது, அற்ப காரணங்களுக்காக கோபப்படுவது, அடுத்தவர் தெரியாமல், அறியாமல், புரியாமல் செய்த தவறுகளுக்காக கோபப்படுவது என்பது கூடாத ஒன்றாகும்.

கோபம் அல்லாஹ்விற்காக மட்டும் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் சட்ட வரம்புகள் மீறப்படும்போது மட்டும் கோபப்பட வேண்டும்.

ஒருவர் கோபப்படும்போது அடுத்தவர் உடனே அமைதியாகிவிட வேண்டும். அவரும் பதிலுக்கு கோபப்படக் கூடாது. தவறு செய்தவர் உடனே மன்னிப்பு கேட்க வேண்டும். கோபப்பட்டவர் உடனே மன்னித்து விட வேண்டும். கோபத்தை அதிகப்படுத்தக் கூடாது. நீண்ட நேரம் கோபத்தில் இருக்கக் கூடாது.

காலையின் கோபம் மாலை வரை நீடிக்கக் கூடாது. மாலையின் கோபம் காலை வரை நீடிக்கக் கூடாது.

ஒருவர் மற்றவரை கோபப்படுத்தும்படியான சொல்லை பேசக் கூடாது, கோபமூட்டும்படியான செயலை செய்யக் கூடாது.

தனது மனைவிக்கு கோபமூட்டும் செயலை கணவன் தவிர்க்க வேண்டும். கணவனுக்கு கோபமூட்டக்கூடிய செயலை மனைவி தவிர்க்க வேண்டும்.

ஒருவரை மற்றவர் மகிழ்ச்சியாக, நிம்மதியாக, சந்தோஷமாக வைக்க முயற்சி செய்ய வேண்டுமே தவிர, எப்போதும் பதட்டமாக, கோபமாக வைக்க முயற்சிக்க கூடாது.

ஒருவருக்கு பிடிக்காத சொல்லை, பிடிக்காத செயலை மற்றவர்

27. அல்குர்ஆன் 3 : 134.

அறவே செய்யக் கூடாது. அப்படியே செய்துவிட்டால் உடனடியாக, 'சாரி' சொல்லி இருவரும் பழமாகி விட வேண்டும். காயாகவே நீண்ட நேரம் இருக்கக் கூடாது.

ஒன்று மிக முக்கியான செய்தியாகும். அதாவது, ஒவ்வொருவரும் தனது விருப்பு, வெறுப்புக்கு மார்க்கத்தை அளவுகோளாக வைக்க வேண்டும்.

அதுபோன்று, ஒருவர் மற்றவரின் தனிப்பட்ட உரிமையில் தலையிடக் கூடாது. எனக்கு பிடித்த உணவையே நீயும் சாப்பிட வேண்டும், எனக்கு பிடித்த நிற ஆடையையே நீ அணிய வேண்டும், இப்படியாக ஒருவர் மற்றவரை நிர்ப்பந்திக்கக் கூடாது.

கணவன் மனைவி ஒருவர் மற்றவரை விட்டுப் பிடிக்க வேண்டும். ரொம்ப கட்டிப் போடக்கூடாது. கசக்கி பிழியக் கூடாது. கஞ்சி காய்ச்சக் கூடாது. தொனதொன என்று தொல்லை தரக் கூடாது. உப்பு சப்பு இல்லாத காரணத்திற்காக மூஞ்சை தூக்கி வைத்துக் கொண்டு பரணியில் உட்கார்ந்து கொள்ளக் கூடாது. கோபித்து கொண்டு அறையில் புகுந்து கதவை பூட்டிக் கொள்ளக் கூடாது.

எதற்கெடுத்தாலும் மூலையில் குந்திகொண்டு தேம்பித் தேம்பி அழக் கூடாது. தைரியம் வேண்டும், சமாளிக்க வேண்டும், சிரிச்சு பேசி மயக்க வேண்டும், மிதமான நகைச்சுவை செய்து மற்றவரை குதூகலப்படுத்த வேண்டும்.

கணவன் கோபித்துக்கொண்டு வெளியில் சென்று போனை சுவிட்ச் ஆஃப் செய்துவிடுவதோ, அல்லது மனைவி கோபித்துக்கொண்டு அம்மா வீட்டுக்கு ஓடிவிடுவதோ பிரச்சனையை பெரிதாக்கிவிடுமே தவிர, பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவராது.

சரி, மீண்டும் தலைப்புக்கு வருவோம்.

சில வீடுகளில் ஆண் அதிக கோபக்காரனாக இருப்பான். சில வீடுகளில் பெண் கோபக்காரியாக இருப்பாள். தனது வாழ்க்கைத்துணை எப்படி என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

கோபத்திற்கான காரணங்களை இருவருமே தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஒருவர் கோபப்பட்டு விட்டால் உடனே மற்றவர் அவரை சாந்தப்படுத்த வேண்டும். அந்த நேரத்தில் நீ கோபப்படாதே, ஏன் கத்துகிறாய், ஏன் டென்ஷன் ஆகிறாய், உனக்கு ரத்த கொதிப்பு அதிகம், கொஞ்சம் பொறுமையாக இரு! என்று உபதேசம் செய்யக் கூடாது.

கோபப்படுத்தியவர் மன்னிப்பு கேட்க வேண்டும். வருத்தம் தெரிவிக்க வேண்டும். கோபத்தை ஏற்படுத்தியவர் தன் தவறை உணர வேண்டும். தன் தவறுக்காக வருந்த வேண்டும்.

ஒருவர், தான் தப்பும் செய்துவிட்டு, அதனால் தன் மீது கோபப்பட்டவர் மீது அவரும் கோபப்படுவதை விட முட்டாள்தனம் இருக்குமோ! இதுதான் இன்று நடக்கிறது.

கோபம், எரிச்சலை ஏற்படுத்தும்.

கோபம், அன்பை குறைத்துக் கொண்டே போகும்.

கோபம், இடைவெளியை உருவாக்கும்.

கோபம், நெருக்கத்தை குறைத்து, தூரத்தை அதிகப்படுத்தும்.

கோபம், நமது கண்ணியத்தை குறைக்கும்.

கோபம், நமது அழகையும் குறைத்து விடும்.

கோபமானது நமது உடல், உயிர், உடமை என அனைத்துக்கும் சேதம் விளைவிக்கும்.

கோபத்தின் தொடக்கம் பைத்தியம், அதன் இறுதி கைசேதம் என்று அரபு பழமொழி ஒன்று கூறுகிறது. ஆம், கோபத்தினால் கொலை வரை மனிதன் சென்று விடுகிறான். அல்லாஹ் பாதுகாப்பானாக!

கணவன், மனைவி கண்டிப்பாக கோபத்தை தவிர்த்து வாழ்ந்தால் அன்பான, பாசமான, பிரியமான, நேசமான, மகிழ்ச்சியான வாழ்க்கை அமையப் பெறுவார்கள்.

ஒரேடியாக கோபத்தை விட முடியவில்லை என்றாலும், கொஞ்சம் கொஞ்சமாக கோபத்தை குறைத்து குறைத்து கோபமே இல்லாமல் ஆக்கிவிட முடியும்.

உங்களில் ஒருவர் கோபப்பட்டால் அவர் நின்றிருந்தால் உடனே உட்கார்ந்து விடட்டும். அவரை விட்டும் கோபம் சென்றுவிட்டால் சரி. இல்லை என்றால் அவர் படுத்துக்கொள்ளட்டும் என்று நபி ﷺ காட்டிய வழிமுறையை பின்பற்றுவோம்.[28]

அதுபோன்று கோபம் வரும்போது, أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன் என்று கூற வேண்டும். அப்படி கூறினால் அந்த கோபம் சென்றுவிடும் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.[29]

நபியே ஷைத்தான் உம்மை கோபப்படுத்தினால் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவீராக! என்று அல்லாஹ் கூறுகிறான்.[30]

அல்லாஹ் உங்களுக்கும் எனக்கும் அத்தகைய நல்ல வாழ்க்கையை தந்தருள்வானாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”[31]**

ஆமீன்.

***

28. அறிவிப்பாளர்: அபூதர் அல்கிஃபாரி ﵁, நூல்: ஸுனன் அபூதாவூது, எண்: 4782.
29. அறிவிப்பாளர்: சுலைமான் இப்னு ஸுரத் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3282.
30. அல்குர்ஆன் 7 : 200.
31. அல்குர்ஆன் 25 : 74.

# அதிகம் எதிர்பார்க்க வேண்டாம்

எதிர்பார்ப்பு இல்லாமல் வாழ்க்கை இல்லை.

பல நல்ல எதிர்பார்ப்புகளைக் கொண்டுதான் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

நல்ல எதிர்பார்ப்புகள் மனதுக்கு இதமாகவும், இன்பமாகவும் இருக்கும்.

ஆம், சொர்க்கத்தை எதிர்பார்த்து முஃமின்களின் வாழ்க்கை இன்பமாக நகர்ந்து கொண்டிருக்கிறது, வாழ்க்கையில் எவ்வளவுதான் சிரமமும், வலியும், துன்பமும் இருந்தாலும் சரி.

மறுமையில் அல்லாஹ்வின் சந்திப்பு, அவனது பொருத்தம், இன்பமான சொர்க்கம் இவற்றை எல்லாம் நம்பிக்கையாளர் எதிர்பார்த்திருக்கும்போது அவருக்கு இந்த உலகத்தின் வலிகள், இன்னல்கள், பிரச்சனைகள் எல்லாம் ஒரு பொருட்டே அல்ல.

நம்மை பார்த்து காஃபிர்கள் நகைக்கிறார்கள். நாமோ சொர்க்கத்தை எதிர்பார்த்தவர்களாக அதை எளிதில் கடந்து செல்கிறோம்.[32]

இந்த வாழ்க்கையில் சிரமப்படாதவர் உண்டோ! இன்னல்கள் இல்லாத வாழ்க்கை இருக்கிறதா? சிரமங்கள் இன்றி யார்

32. அல்குர்ஆன் 83: 29-32.

வாழ்கிறார்? பிரச்சனைகளை எதிர்கொள்ளாமல் எந்த உயிரினம் வாழ்கிறது.

இந்த உலகத்தில் சிரமப்படுகிற உயிரினம் மனிதன் மட்டுமா?

காட்டில் உள்ள மிருகங்களாக இருக்கட்டும், கடலில் உள்ள மீன்களாக இருக்கட்டும், ஆகாயத்தில் பறக்கும் பறவைகளாக இருக்கட்டும், மண்ணுக்குள் வாழ்கிற புழு பூச்சுகளாக இருக்கட்டும் எல்லாவற்றுக்கும் பிரச்சனை இருக்கிறது. இதில் பிரச்சனை குறைவானவன் மனிதன்தான். ஆனால், அது அவனுக்கு புரியாது.

சரி, இப்போது குடும்ப வாழ்க்கைக்கு வருவோம்.

திருமணத்திற்கு முன்பு ஆணுக்கு தனது வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கப்போகிற வருங்கால மனைவி பற்றி பல எதிர்பார்ப்புகள் இருக்கும். அவள் அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும், அவள் அதை செய்ய வேண்டும், இதை செய்ய வேண்டும், அப்படி இருக்கக் கூடாது, இப்படி இருக்கக் கூடாது, அதை செய்யக் கூடாது, இதை செய்யக் கூடாது, இப்படியாக இருக்க வேண்டிய, இருக்க வேண்டாத பல எதிர்பார்ப்புகள் இருக்கும்.

அப்படித்தான் பெண்ணுக்கும் பல எதிர்பார்ப்புகள் இருக்கும்.

இப்படி, ஆணும் பெண்ணும் எதிர்பார்ப்பது சரியா, தவறா?

சரி என்றும் ஒத்த வார்த்தையில் சொல்ல முடியாது. தவறு என்றும் ஒத்த வார்த்தையில் சொல்ல முடியாது.

எதிர்பார்ப்புகள், ஆசைகள் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று நெருக்கமான பொருள் கொண்ட வார்த்தைகள் என்று கூட சொல்லலாம். மொழி ரீதியாக இரண்டுக்கும் இடையில் கொஞ்சம் வித்தியாசமும் செய்யலாம்.

அதாவது, ஒவ்வொருவருக்கும் ஆசைகள் ஆயிரம் இருக்கலாம்.

ஆனால், ஆசைகள் எதிர்பார்ப்புகளாக மாற வேண்டுமென்றால் அதற்கு சில வரையறைகள் உள்ளன.

1. நாமும் நமது அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேற, கைகூட கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டும்.

2. அந்த எதிர்பார்ப்பு நமது தகுதிக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

3. நடைமுறைக்கு சாத்தியமானதாக நமது எதிர்பார்ப்பு இருக்க வேண்டும்.

4. எதிர்பார்ப்புகள் ஓர் அளவிற்குள், ஓர் எல்லைக்குள் இருக்க வேண்டும்.

5. எதிர்பார்ப்பு ஹலாலான - ஆகுமான வழியில் நிறைவேறுகிற வரை பொறுமையாக இருக்க வேண்டும்.

6. நாம் எதிர்பார்ப்பதானது நமது சூழ்நிலை, நமது பொருளாதாரம், இன்னும், நமது சமூக அந்தஸ்து, நமது குடும்ப தகுதிக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

7. நாம் யாரிடம் என்ன எதிர்பார்க்கிறோமோ அது அவரால் முடியுமா என்பதை அறிந்து எதிர்பார்க்க வேண்டும்.

8. ஒருவரால் முடியாத ஒன்றை; அல்லது, அவர் பழக்கப்படாத ஒன்றை; அல்லது, அவரிடம் இல்லாத ஒன்றை அவரிடம் எதிர்பார்த்து விட்டு, நாமும் ஏமாந்து போவதையோ; அல்லது அவரை நொந்து கொள்வதையோ நாம் தவிர்க்க வேண்டும்.

9. நமது ஆகுமான எதிர்பார்ப்பு நிறைவேற நல்ல முயற்சிகள் செய்ய வேண்டும்.

10. ஆனால், எதிர்பார்ப்பதெல்லாம் நடக்க வேண்டும் என்று அடம் பிடிக்க கூடாது. நமது எதிர்பார்ப்புகளை அல்லாஹ்வின் நாட்டத்தில் விட்டுவிட வேண்டும்.

11. எதிர்பார்த்தது நடந்தால், அல்ஹம்து லில்லாஹ். இல்லை என்றால் எது நடந்ததோ அதையே ஏற்றுக்கொண்டு திருப்தி அடைய வேண்டும்.

12. நாம் எதிர்பார்த்ததற்கு மாற்றமாக நடந்துவிட்டால், அதற்காக நாம் கவலைப்பட்டு நம்மை மாய்த்துக்கொள்ளக் கூடாது. மன நெருக்கடிக்கு ஆளாகி பித்துபிடித்தவன்போல் ஆகி விடக்கூடாது. அதை நினைத்து நினைத்து நிகழ்கால இன்பத்தையும் வெற்றியையும் இழந்துவிடக் கூடாது.

ஒருவர் தன் மனைவி உலக அழகியாக; அல்லது, உலக பணக்காரியாக; அல்லது, உலக அறிவாளியாக; அல்லது, உலகிலேயே மிகப் பெரிய புத்திசாலியாக; அல்லது, இப்படி ஏதாவது ஒன்றில் வெரி டாப்பாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படலாம். ஆசையில் தப்பு இல்லை. நல்ல ஆசைகள் இருக்க வேண்டும். நல்ல ஆசைகள் வர வேண்டும். நல்ல ஆசைகள் வரலாம். நல்ல ஆசைகளை ஆசைவைக்கலாம். அந்த ஆசையை எதிர்பார்ப்பாக ஆக்கிக் கொண்டு நீங்கள் ஒரு கல்யாண புரோக்கரை அணுகி அவரிடம் உங்களுக்கு வரப்போகும் மனைவி இப்படி இருக்க வேண்டும் என்று உங்கள் ஆசையை எதிர்பார்ப்பாக ஆக்கி அதை நீங்கள் அவரிடம் சொன்னால் அவர் என்ன பதில் சொல்வார்?!

தமிழில் ஒரு பழமொழி உண்டு.

“ஆசை இருக்கு ராசாவாக, அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க”

அப்படித்தான் நமது ஆசைகள் பலவற்றை நாம் நமது உள்ளத்தில்தான் வைத்துக் கொள்ள முடியுமே தவிர, வெளியில் சொல்ல முடியாது. வெளியில் எதை சொல்ல முடியுமோ அந்த ஆசைதான் நமது எதிர்பார்ப்பாக இருக்க வேண்டும்.

நன்றாக படிக்கிற ஒரு மாணவன், தான் மருத்துவராக வேண்டும்; அல்லது, பொறியாளராக ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதை எதிர்பார்க்கிறான்.

நன்றாக படிக்கிற மாணவன் ஒருவன், முதல் மதிப்பெண்

எடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான், பரீட்சை நன்றாக எழுதிவிட்டு அதை எதிர்பார்க்கிறான்.

வாடிக்கையாளர் அதிகம் வருகிற இடத்தில் ஒரு கடையை திறந்து, அதில் தரமான பொருட்களை வைத்து, வருவோரை நல்ல பண்போடு வரவேற்று ஒருவர் வர்த்தகம் செய்கிறார். இவர் தனக்கு இலாபத்தை, நல்ல வருவாயை ஆசைவைக்கிறார். அதை எதிர்பார்க்கிறார். இவரின் ஆசையும் சரியானது. இவரின் எதிர்பார்ப்பும் நியாயமானது என்று கூறுவோம்.

இத்தகைய நிலையை சரியான ஆசை, சரியான எதிர்பார்ப்பு என்கிறோம்.

இந்த சில உதாரணங்களை புரிந்துகொண்டால் நமது வாழ்க்கை மிக எளிதாகிவிடும்.

நடைமுறை வாழ்க்கைக்கு எது சாத்தியமோ அதை மட்டுமே நாம் ஆசைவைத்து, அதை மட்டுமே எதிர்பார்க்க பழகிக்கொள்ள வேண்டும்.

திருமணம் ஆகுவதற்கு முன்பு ஆணும் பெண்ணும் பல ஆசைகள் வைத்திருக்கலாம். அவற்றை எதிர்பார்ப்புகளாக மாற்றி, முடிந்த வரை சாத்தியமாக்க முயற்சிகள் செய்யலாம்.

நமது ஆகுமான எல்லா நல்ல முயற்சிகளையும் செய்வதில் குற்றம் ஏதும் இல்லை.

பிறகு, எது நடக்கிறதோ அது அல்லாஹ்வின் நாட்டப்படி நடக்கிறது.

ஆகவே, நடந்ததை நாம் பொருந்தி கொள்ள வேண்டும். அதில் அல்லாஹ்விடம் நன்மையை வேண்டி துஆச் செய்ய வேண்டும். அதில் உள்ள நன்மைகளை பார்க்க வேண்டும்.

சில சமயம் ஆசைப்பட்டது, எதிர்பார்த்தது, முயற்சி செய்தது எல்லாம் சரியாக இருந்தும் விரும்பத்தகாத ஒன்று நிகழ்ந்து

விடலாம். நாம் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் முரணானது அமைந்து விடலாம். அல்லாஹ் அப்படி நடக்காமல் பாதுகாப்பானாக! ஆமீன்.

பயணத்தை மேற்கொள்ளும்போது சில சமயம் வண்டி பஞ் சராகுவதை போல; வண்டி, அந்த வீலுடன் நகர்வதே சிரமமாகி விடுவதை போல சில சமயம் வாழ்க்கை நகர்வதே சிரமமாகி விடலாம். பஞ்சரை சரி செய்ய வேண்டும். எத்தனை முறை சரி செய்ய முடியுமோ அத்தனை முறை சரி செய்ய வேண்டும். இனி சரி செய்தாலும் எந்த பலனும் இல்லை என்று முடிவெடுத்து விட்டால் டியூபை, டயரை மாற்ற வேண்டும் அல்லவா?

அப்படித்தான் இஸ்லாமும் நமக்கு தலாக், குலா போன்ற அழகிய தீர்வை வைத்திருக்கிறது. அது இறுதி கட்டம் என்பதை நினைவில் வைக்கவும்.

இல்லை என்றால் கை வலிக்கிறது, கால் வலிக்கிறது என்பதற்காக ஆப்ரேஷன் செய்து கையை அல்லது காலை எடுப்பதா தீர்வு?

இறுதி கட்டம்தான் ஆப்ரேஷன். அப்படித்தான் தலாக்கும் குலாவும்.

கணவன் மனைவியிடமும் மனைவி கணவனிடமும் அழகிய நல்ல எதிர்பார்ப்புகளை வைக்க வேண்டும். அந்த எதிர்பார்ப்புகளை வைப்பதற்கு முன்னர் நன்கு யோசித்து கொள்ள வேண்டும். மேற்கூறப்பட்ட வழிகாட்டல்களை புரிந்து கொண்டு, அதற்கேற்ப எதிர்பார்க்க வேண்டும்.

தேவை இல்லாத, அனாவசியமான, அதிகப்படியான எதிர்பார்ப்புகளை வைத்துவிட்டால், பிறகு அவை நிறைவேறாமல் போகும்போது நாம் மிகுந்த சிரமத்திற்குள்ளாக நேரிடும். நமது மூடு அவுட் ஆகிவிடும்; நமது மைண்ட் அப்செட் ஆகிவிடும். அதை தொடர்ந்து கணவன் மனைவி இருவருக்குள் சண்டை சச்சரவுகள் உருவாகலாம்.

ஒரு மனைவி தனது கணவனால் என்ன சாத்தியமோ அதை மட்டுமே அவனிடம் எதிர்பார்க்க வேண்டும்.

ஒரு கணவன் தனது மனைவியிடம் அவளால் என்ன சாத்தியமோ அதை மட்டுமே அவளிடம் எதிர்பார்க்க வேண்டும்.

ஒவ்வொருவரும் அடுத்தவரின் தகுதி அறிந்து அவரிடம் எதிர்பார்ப்புகள் வைக்க வேண்டும்.

நாம் விரும்புவதை எல்லாம் அவை நல்லவையாக இருந்தாலும் அடுத்தவர் நிறைவேற்ற வேண்டும் என்று நாம் ஆசைப்படுவதும் எதிர்பார்ப்பதும் இறைவனின் விதிப்படி நடைமுறையில் முடியாத ஒன்றாகும். அல்லாஹ்வின் விதியில் எழுதப்பட்டதுதான் நடக்கும்.

தனது மகன் லா இலாஹ இல்லல்லாஹ் சொல்ல வேண்டுமென்று நபி நூஹ் ﵇ ஆசைப்பட்டார்கள். முயற்சி செய்தார்கள். நடக்கவில்லை.

தனது மனைவி நல்லவளாக ஆக வேண்டும் என்று நபி லூத் ﵇ முயற்சி செய்தார்கள். ஆனால், நடக்கவில்லை.

தனது தந்தை, அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ள வேண்டும், சிலை வணக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று நபி இப்ராஹீம் ﵇ ஆசைப்பட்டார்கள். பல முறை அறிவுரை கூறினார்கள். விடா முயற்சி செய்தார்கள். ஆனால், நடக்கவில்லை.

நமது நபி ﷺ அவர்கள் தமது சாச்சா இஸ்லாமை ஏற்க வேண்டும் என்று பெரிதும் ஆசைப்பட்டார்கள். முயற்சி செய்தார்கள். சாச்சாவின் இறுதி மூச்சு வரை அவரை கலிமாவின் பக்கம் அழைத்தார்கள். ஆனால், அவரோ நிராகரிப்பிலேயே இறந்து விட்டார். அவருக்கு இஸ்லாமை அல்லாஹ் நாடவில்லை. இது குறித்து, நபியே நீர் விரும்பியவருக்கு நேர்வழி காட்டிவிட முடியாது என்று அல்லாஹ் வசனத்தை இறக்கினான்.[33]

33. அல்குர்ஆன் 28 : 56.

அப்படித்தான் நமது குடும்பத்திலும், எல்லோரும் கலந்து இருப்பார்கள். பல பண்புள்ள, பல குணமுள்ளவர்கள் இருப்பார்கள். நமது அறிவுரையை ஏற்பவரும் இருப்பார்கள். நமது உபதேசத்தை எதிர்ப்பவரும் இருப்பார்கள்.

கணவன், மனைவி இருவரில் ஒவ்வொருவரும் பிறரின் நல்ல ஆசையை, எதிர்பார்ப்பை புரிய வேண்டும், அதை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும்.

ஆனால், ஒருவரின் உடல், உயிர், மனம், ஆசை, விருப்பம் இவை எல்லாம் அவரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அடுத்தவரின் கட்டுப்பாட்டில் இல்லை.

ஆகவே, நீங்கள் விரும்புகிறபடி மற்றவர் அப்படியே முழுமையாக மாறிவிட வேண்டும், நீங்கள் எதிர்பார்க்கிறபடி அவர் அதை செய்துவிட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அவர் நீங்களாகவும் நீங்கள் அவராகவும் ஆனால்தான் முடியும்.

நீங்கள் எப்படி உங்கள் வாழ்க்கை துணையின் எதிர்பார்ப்புகளில் சிலவற்றையோ அல்லது பலவற்றையோ நிறைவேற்ற இயல மாட்டீர்களோ அப்படித்தான் உங்கள் வாழ்க்கை துணையும் என்பதை நீங்கள் இருவருமே புரிய வேண்டும்.

இங்கு இன்னொரு பிரச்சனையும் இருக்கிறது.

அதாவது, உங்கள் எதிர்பார்ப்புகளை உங்கள் வாழ்க்கை துணையோடு நீங்கள் கலந்துரையாடினீர்களா?

அவரிடம் உங்கள் எதிர்பார்ப்புகளை எடுத்து கூறினீர்களா? உங்கள் எதிர்பார்ப்புகளை பற்றி அவரிடம் மனம் விட்டு பேசினீர்களா? அவரிடம் உங்களுக்கு என்னென்ன நல்ல எதிர்பார்ப்புகள் உள்ளன என்பதை அவருக்கு எடுத்து சொல்லி இருக்கிறீர்களா?

இவற்றில் எதையும் நீங்கள் செய்யாமல், உங்கள் எதிர்பார்ப்புகளை

உங்கள் மனதில் மறைத்துக் கொண்டு உங்கள் வாழ்க்கை துணையிடம் அவற்றை தேடுவது எப்படி நியாயமாகும்.

இருவரும் ஓர் இடத்தில் அமைதியாக உட்காருங்கள்!

இருவரும் மனம்விட்டு பேசுங்கள்!

ஒருவர் மற்றவரை அன்போடு பாருங்கள்!

புன்முறுவலாக ஒருவர் ஒருவரை நோக்குங்கள்!

பாசமான, காதலான கண் பார்வைகளைக் கொண்டு ஒருவர் மற்றவரை ரசித்துக்கொண்டே பேச ஆரம்பியுங்கள்!

உங்களில் ஒருவருக்கு மற்றவரிடம் இருக்கிற நல்ல எதிர்பார்ப்புகளை நயமாக அழகாக நல்ல சொற்களைக் கொண்டு எடுத்துச் சொல்லுங்கள்!

அவற்றை நிறைவேற்றினால் குடும்பத்திற்கு கிடைக்கப்போகும் நன்மைகளை எடுத்துச் சொல்லுங்கள்!

அவருக்கு உங்கள் எதிர்பார்ப்புகள் பற்றி நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துங்கள்!

எது அடுத்தவரிடம் இல்லையோ, எதை அவரால் செய்ய இயலாதோ அதை அவரிடம் முழுவதுமாக எதிர்பார்க்காதீர்கள்!

அரபியில் சொல்வார்கள்:

“ஒன்றை இழந்திருப்பவன் அவனால் அதை கொடுக்க முடியாது.”

ஆனால், மனிதன் எதையும் கற்றுக்கொள்ளக் கூடியவன். ஆகவே, உங்கள் வாழ்க்கை துணைக்கு கற்றுக்கொடுங்கள்! செய்து காட்டுங்கள்! வழிகாட்டுங்கள்! இப்படியாக நமது நல்ல எதிர்பார்ப்புகளை முடிந்த வரை அடுத்தவரிடம் நாம் சாத்தியமானதாக ஆக்கிக்கொள்ளலாம்.

நீங்கள் இருவரும் நல்லபடியாக பேசி ஒரு புரிந்துணர்வுக்கு வாருங்கள்!

அல்லாஹ்வே! எங்களுக்கும் எங்கள் ஜோடிகளுக்கும் இடையில் நல்ல பொருத்தத்தை, புரிந்துணர்வை தா! எங்களில் ஒருவர் மற்றவரின் நல்ல எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுபவராக ஆக்கிவை! மறுமைக்காக வாழ்ந்து சொர்க்கத்தின் நற்பாக்கியத்தை பெற்ற வெற்றியாளர்களில் எங்களை ஆக்கிவை!

அல்லாஹ்வே! எங்களுக்கு திருப்தியான, நிம்மதியான, மகிழ்ச்சியான, கண் குளிர்ச்சியான நல்ல வாழ்க்கையை தந்தருள்வாயாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[34]

ஆமீன்.

***

34. அல்குர்ஆன் 25 : 74.

# சந்தேகம் தவிர்ப்பீர்!

சந்தேகம் ஒரு சாதாரண நோயா!?

மனநோய்களில் ஒரு பெரிய நோய் சந்தேக நோய். எல்லா நோய்களுக்கும் ஒரு மருத்துவர் இருப்பார். ஆனால், சந்தேக நோய்க்கு அந்த மனிதனே தன்னை மாற்றாத வரை அந்த நோயை யாரும் குணப்படுத்த முடியாது.

ஓர் இடத்தில் புகையும்போது அங்கே நெருப்பு இருக்குமோ என்று சந்தேகம் வரலாம். ஒருவனுக்கு அங்கே புகைகிறதோ என்று வீணான மனபிரமையில் இருந்தால் அவனை என்ன சொல்வது?

மனிதன் ஒரு சந்தேகப் பிறவி என்று சொல்வார்கள். அதற்காக எல்லோரையும் சந்தேகப்படுவதா? எல்லா விஷயங்களிலும் சந்தேகப்படுவதா?

நாம் பிறக்கும்போது நம்மோடு சேர்ந்து பல குணங்களும் நமக்குள் பிறந்து விடுகின்றன. அவற்றில் நல்ல குணங்களும் உண்டு, கெட்ட குணங்களும் உண்டு.

கெட்ட குணமே இல்லாமல் ஒரு மனிதன் பிறக்க முடியாது. காரணம், வானவர்கள் பூமியில் பிறக்க மாட்டார்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையினால் நேரடியாக ஒளியிலிருந்து படைக்கப்பட்டார்கள். பரிசுத்தமான ஒளியிலிருந்து

படைக்கப்பட்ட அவர்களிடம் படைப்பாளன் குறைகளை வைக்கவில்லை. அவர்களுக்கு சோதனை இல்லை. அவர்களுக்கு இருப்பதெல்லாம் கட்டளையும் கீழ்ப்படிவதும்தான்.

சோதனைகள் நமக்குதான். சோதனைக்கு இரண்டு தேவை. நல்லது, கெட்டது, நன்மை, தீமை, இப்படி இருந்தால்தான் அங்கே சோதனை பூர்த்தியாகும்.

மனிதன் ஒரு கலவை. குழைக்கப்பட்ட பிசுபிசுப்பான களிமண்ணிலிருந்து படைக்கப்பட்ட மனிதன் அந்த மண்ணைப் போன்று தனக்குள் வித்தியாசமான குணங்களையும் பண்புகளையும் கொண்டவன்.

மனிதனை பரிசுத்தப்படுத்தி, அவனுக்குள் இருக்கும் கெட்ட குணங்களை நீக்கி, அவனுக்குள் இருக்கும் நல்ல குணங்களை வளர்த்து, அவனை நன்மைகளால் நிறைந்தவனாக ஆக்குகிற சிறந்த பணியைக் கொண்டு நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள்.

மனிதனை பரிசுத்தப்படுத்தவும் இறைவனுக்கு பிடித்தமானவனாக அவனை மாற்றவும் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள்; அவர்கள் மீது வானத்திலிருந்து வேதங்கள் இறக்கப்பட்டன.

ஒருமனிதன் வாழும்போது அவனுக்கு நிம்மதி, கண்ணியம் கிடைக்க வேண்டும். அவனால் பிறருக்கும் நிம்மதியும், கண்ணியமும் கிடைக்க வேண்டும்.

பிறரால் உனக்கு நிம்மதி, உன்னால் பிறருக்கு நிம்மதி, பிறரால் உனக்கு பாதுகாப்பு, உன்னால் பிறருக்கு பாதுகாப்பு! இப்படி வாழ்ந்தால்தான் எல்லோரும் வாழமுடியும்.

சரி, இப்போது குடும்ப விவகாரத்திற்கு வருவோம்.

குடும்பம் என்றால் அது ஒரு வீடு! வீடு என்றால் வாசல் இருக்கும். ஜன்னல் இருக்கும். இதுவெல்லாம் இருந்தால் நல்ல காற்று, சூரிய வெளிச்சம் வீட்டுக்குள் வரும். சில சமயம்

துர்நாற்றமும் சேர்ந்து வந்து விடுகிறது. நாம் அப்போது கதவுகளை சாத்தி வைக்க வேண்டும்.

அப்படித்தான் நமது வீட்டுக்கு நாலுபேர் வருவார்கள். வருபவர்களில் நல்லவர்களும் இருப்பார்கள். சிலர், அப்படியும் இப்படியும் இருப்பார்கள். சிலர், மோசமாக இருப்பார்கள். சிலர், கெடுப்பதற்காகவே வருவார்கள். சிலர், வந்த பின்னர் கெட்டு போவார்கள்.

பெண்கள் ஒரு நறுமணத்தைப் போல. அவர்களை மூடி வைக்க வேண்டும். நறுமணத்தை மூடி வைத்தாலே அதன் நறுமணம் சில சமயம் வெளியே வீசிவிடும்போது. அதுவே திறந்திருந்தால் என்ன சொல்ல வேண்டும்!

பெண் ஆசை இல்லாத ஆண் இல்லை. ஆண் ஆசை இல்லாத பெண் இல்லை.

ஓர் இனத்திற்கு அதன் எதிர் பாலினத்தின் மீது ஈர்ப்பு வருவது இயல்பாகும். இதில் யாரையும் விதிவிலக்காக்க முடியாது, அல்லாஹ் நாடினாலே தவிர.

குதிரையின் கண்ணுக்கு மறைப்பு போடப்படுவதால் அது இங்கும் அங்கும் பார்க்காமல், அதை ஓட்டுபவன் திருப்புகிற திசையில், பாதையில் செல்கிறது. எதையும் பார்த்து பயப்படுவதோ மிரள்வதோ ஏற்படாமல் சீராக சென்று கொண்டே இருக்கும்.

நமக்கு அப்படி இல்லை. நமது பார்வைக்கு திரை போட்டால் நம்மால் நடக்க முடியாது, மிகுந்த சிரமத்திற்குள்ளாகி விடுவோம். எங்கு வேண்டுமானாலும் பார்க்கலாம், அது நமது உரிமை என்று சிலர் நினைக்கிறார்கள்.

உண்மையில் அப்படி இல்லை.

அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டுள்ள நமக்கு எல்லாமே ஒரு கட்டுப்பாடுதான்.

நமது பார்வைக்கு ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. நமது செவிக்கு ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. நமது யோசனைக்கு, நமது சிந்தனைக்கு, நமது பேச்சுக்கு இப்படி எல்லாவற்றுக்கும் நமக்கு கட்டுப்பாடு இருக்கிறது.

முஃமினான ஆண்களுக்கும் முஃமினான பெண்களுக்கும் அல்லாஹ்வின் கட்டளையாவது, அவர்கள் தங்கள் பார்வையை தாழ்த்திக் கொள்ளட்டும்.[35]

நபி ﷺ அவர்கள் நமக்கு கூறினார்கள்: பார்வைக்கு பின் அடுத்த பார்வை பார்க்காதே![36]

பெண்கள், அந்நிய ஆண்களை பார்ப்பதும் ஆண்கள், அந்நியப் பெண்களை பார்ப்பதும் அல்லாஹ் உடைய இந்த மார்க்கத்தில் தடுக்கப்பட்டதாகும்.[37]

ஓர் பெண், அந்நிய ஆணை தனிமையில் சந்திப்பதும், ஓர் ஆண், அந்நிய பெண்ணை தனிமையில் சந்திப்பதும் பெரும் குழப்பத்தை உண்டாக்கிவிடும் என்று மார்க்கம் நமக்கு எச்சரிக்கிறது.[38]

இத்தகைய கட்டுப்பாடுகள் எதற்காக? நமது சுதந்திரத்தை பறிப்பதற்காக அல்ல. மாறாக, நமது சுதந்திரத்தையும், உரிமையையும், உணர்வுகளையும், கண்ணியத்தையும் பாதுகாப்பதற்காக மார்க்கத்தில் சில கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன.

அல்லாஹ்வின் மார்க்கம் நமக்கு போட்டுள்ள ஒவ்வொரு சிறிய பெரிய காட்டுப்பாட்டுக்கு பின்னாலும் பல நூறு தத்துவங்கள் உள்ளன. அவற்றை நமது சிற்றறிவைக் கொண்டு

35. அல்குர்ஆன் 24 : 30,31.
36. அறிவிப்பாளர்: புரைதா இப்னு அல்ஹுஸைப் அல்அஸ்லமீ ﵁, நூல்: ஸுனனுத் திர்மிதி எண்: 2777.
37. அல்குர்ஆன் 24 : 30,31.
38. அறிவிப்பாளர்: இப்னு உமர் ﵄, நூல்: ஸுனனுத் திர்மிதி எண்: 2165.

முழுமையாக நாம் புரிய முடியாது. அந்த கட்டுப்பாடுகளை நாம் கடைப்பிடிக்கும்போதுதான் அவற்றின் நன்மைகளை நாம் வாழ்க்கையில் அனுபவப்பூர்வமாக உணர முடியும், பார்க்க முடியும்.

அந்த கட்டுப்பாடுகள் இல்லாமல் வாழ்கிற பிற மக்களின் வாழ்க்கையை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகிற பிரச்சனைகளும், சிக்கல்களும் அவர்களின் வாழ்க்கையை நரகமாக ஆக்கி இருக்கின்றன. இஸ்லாமை தவிர தீர்வு இல்லை.

அவர்கள் எந்த ஒரு தீர்வை தங்கள் பிரச்சனைக்கு தீர்வாக கொண்டு வந்தாலும் அது அவர்களின் குறுகிய அறிவினால் அவர்கள் உருவாக்கியதால் அதில் பல நூறு குறைகளும், தவறான பக்க விளைவுகளும் இருக்கும். ஒரு பிரச்சனையிலிருந்து வெளியேற முயற்சித்து பல பத்து பிரச்சனைகளில் சிக்குவதுதான் அவர்கள் கொண்டுவந்த தீர்வின் இறுதி நிலையாக இருக்கும். முஸ்லிம்களாகிய நமக்கு அப்படி அல்ல.

அல்ஹம்து லில்லாஹ்!

சரி, இப்போது மேற்கூறப்பட்ட விளக்கத்திற்கும் நமது தலைப்பிற்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் கேட்கலாம்.

ஆம், தொடர்பு இருக்கிறது.

நமது பெண்களும் சரி, நமது ஆண்களும் சரி, பிறரிடம் பழகும்போது அளவோடு பழக வேண்டும். எல்லைக்குள் பழக வேண்டும். கட்டுப்பாடுகளுக்குள் நின்று பழக வேண்டும். சட்டங்களை பின்பற்றி பழக வேண்டும். வரைமுறைகளை அனுசரித்து பழக வேண்டும். ஸூரா அஹ்ஸாபும் (33), அந்நூரும் (24) பல ஒழுக்க மாண்புகளை நமக்கு கற்பிக்கின்றன.

கதவை திறக்காமல் காற்று உள்ளே வராது என்பதை போல் பெண்கள் இடம் கொடுக்காமல் குடும்பத்தில் தவறுகள் நடக்காது.

மான், நீர் குடிக்க ஏரிக்கு செல்லாமல் முதலை அதை கவ்விப்பிடிக்காது.

பசித்த சிங்கத்தின் குகையை தாண்டி கொழுத்த மிருகம் சென்றால் அது என்ன சும்மா இருக்குமா?

அதனால் நமது வீட்டுக்கு நாம் அழைத்து வருகிறவர்களை நன்கு கவனித்து நல்லவர்களை மட்டுமே நாம் அழைத்து வர வேண்டும்.

நபி ﷺ அவர்கள் சொன்னார்கள்: உனது வீட்டின் உணவை இறையச்சமுள்ளவன் மட்டுமே உண்ணட்டும்.[39]

ஆம், தக்வா இல்லாதவன் வீட்டுக்குள் நுழைந்தால் அவனுக்கும் பிரச்சனை, அவனால் நமக்கும் பிரச்சனை.

நமது பெண்கள் பிற ஆண்களோடு பழகும்போது நாம் அவர்களை கவனித்து தேவையான அறிவுரைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

மிக மிக அவசிய தேவை இல்லாமல் பெண்கள் ஆண்களுக்கு முன்னால் வராமல் இருக்க வேண்டும்.

மிக மிக அவசிய தேவை இல்லாமல் பெண்கள் ஆண்களிடம் பேசாமல் இருக்க வேண்டும்.

இப்படித்தான் பிற வீட்டுக்கு செல்கிற ஆண்களும் கவனமாக, கண்ணியமாக இருக்க வேண்டும். பாதையில் நடக்கும்போது நாம்தான் கவனமாக இருக்க வேண்டும். முள் இருக்கும். மேடு பள்ளம் இருக்கும். இன்னும் பிற விஷ ஜந்துக்கள் கூட இருக்கலாம்.

அப்படித்தான் பெண்களில் சிலர் அப்படி இப்படியுமாக இருப்பார்கள். ஆண்களுக்கு அல்லாஹ் அவர்களின்

39. அறிவிப்பாளர்: அபூ ஸயீத் அல் குத்ரீ ؓ, நூல்: ஸுனன் அபூதாவூது, எண்: 4832.

மர்மஸ்தானத்தை பாதுகாக்கும் கட்டளையை மிக கண்டிப்போடு கூறி இருப்பதோடு, மீறுபவர்களை எச்சரித்தும் இருக்கிறான்.[40]

இதுவெல்லாம் நாம் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள்! நாம் பேண வேண்டிய சட்ட திட்டங்கள்.

சரி, இதுக்கும் தலைப்புக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டால் பொறுங்கள் கூறுகிறேன்.

அதாவது, இப்படி கணவன் மனைவி ஒழுக்கமாக வாழும்போது அன்பானது, தானாக நமது விலாசம் தேடி வரும். பள்ளத்தை நோக்கி நீர் வழிந்தோடுவதை போன்று நிம்மதியானது, நமது இல்லம் நோக்கி நாம் அழைக்காமலே வரும்.

கணவனும் மனைவியை முழுமையாக நம்ப வேண்டும். மனைவியும் கணவனை முழுமையாக நம்ப வேண்டும். இஸ்லாமிய ஒழுக்கங்களில் சில கைவிடப்படும்போது, மார்க்கத்தின் கட்டுப்பாடுகள் சில மீறப்படும்போது குடும்பத்திற்குள் குழப்பம் அழைக்கப்படாத விருந்தாளியாக வருவது சகஜமாகிவிடும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

சரி, இன்னும் கொஞ்சம் விஷயத்திற்குள் போவோம். அதாவது, ஆண், தன் மனைவியின் சொல், செயல், நடவடிக்கையின் மீது எடுத்த எடுப்பில் சந்தேகப் பார்வையை செலுத்தி விடக்கூடாது. ஒவ்வொரு செயலுக்கும் இப்படி இருக்குமோ, அப்படி இருக்குமோ என்று அர்த்தம் தேடக்கூடாது. அப்படித்தான் மனைவியும்.

தனது கணவன் மீது வீணான சந்தேகம் கொள்கிற பெண் ஒருபோதும் நிம்மதியாக வாழ முடியாது. அது மட்டுமல்ல. அவளால் தனது கணவனுக்கும் நிம்மதியை கொடுக்க முடியாது.

இருவரில் யார் ஒருவருக்குள் சந்தேக நெருப்பு பற்றிக் கொண்டதோ அந்த நெருப்பு அவனை அல்லது அவளை

40. அல்குர்ஆன் 40 : 5-6, 70 : 29-30.

எரித்து விடும். அடுத்தவரை அதன் அனலும், ஜுவாலையும் பொசுக்கிக் கொண்டே இருக்கும்.

ஆகவே, ஒருவர் மற்றவர் மீது நம்பிக்கை வைத்து வாழுங்கள்!

சந்தேகம் வராத அளவிற்கு இருவரும் கட்டுப்பாடுகளை பேணி வாழுங்கள்!

குழப்பம் ஏற்படாத அளவிற்கு குடும்பத்தை பாதுகாப்பாக வைத்து வாழுங்கள்!

ஒருவர் மற்றவருக்கு அன்பையும், அக்கறையையும், புரிந்துணர்வையும், பாசத்தையும் அந்தளவு கொடுத்து வாழுங்கள். உங்கள் துணையின் கவனம் உங்கள் அல்லாத மற்றவர் மீது செல்லாமல் இருக்கட்டும்.

உங்கள் மனைவி அவசிய தேவைக்காக யார் ஒருவரிடமும் பேசினால் உடனே சந்தேகிக்காதீர்கள். பிறருடன் எப்படி பேச வேண்டும் என்ற ஒழுக்கத்தை கற்றுக்கொடுங்கள்!

பிறரிடம் பழகும்போது தூரத்தை கடைப்பிடிக்க வையுங்கள். பிறகு, பாரத்தை அல்லாஹ்வின் மீது போட்டு விடுங்கள்!

அல்லாஹ் எதை வெளிப்படுத்த வேண்டுமோ அதை வெளிப்படுத்துவான். அல்லாஹ் எதை மறைக்க வேண்டுமோ அதை மறைத்து விடுவான். அல்லாஹ் மறைத்ததை நீங்கள் தோண்டி துருவி ஆராயாதீர்கள். அல்லாஹ் வெளிப்படுத்தியதை கண்டும் காணாமல் தய்யூஸாக இருக்காதீர்கள்.[41]

அதாவது, மனைவி பல ஆண்களிடம் மேய்பவளாக இருப்பதை பார்த்துவிட்டு, அதை சகித்து செல்லும் பொட்டையனாக இருக்காதீர்கள். ரோஷம் உள்ள ஆணாக இருக்க வேண்டும். பெண்ணாகிறவளும் நாணமும், வெட்கமும், கட்டுப்பாடுகளும் அதிகம் உள்ளவளாக இருக்க வேண்டும். கணவனல்லாதவரிடம்

41. அறிவிப்பாளர்: உக்பா இப்னு ஆமிர் ﷺ, நூல்: ஸஹீஹ் நசாயி, எண்: 2561.

எப்படி பேச வேண்டுமோ அதை அறிந்து பேச வேண்டும்.

பிறர் மனம் கெடும்படி பேசக் கூடாது. பிறர் உள்ளம் சாய்கிறபடி உரையாடக் கூடாது. பிறருக்கு குழப்பம் ஏற்படுகிற அளவிற்கு நெருங்கக் கூடாது.

சகோதரியே, உன் கணவன் மீது வீணான சந்தேகத்தை விதைத்து விட்டு பிறகு அதே சந்தேகத்தோடு அவனது ஒவ்வொரு செயலுக்கும் அர்த்தத்தை நீ கொடுத்தால் அவ்வளவுதான் உனது வாழ்க்கை!

ஒருவர் மற்றவரின் அந்தரங்கங்களை ஆராயாதீர்! அவர் என்ன பார்க்கிறார், யாரிடம் என்ன பேசுகிறார், அவரின் போனில் யார் யார் உடைய நம்பர் இருக்கிறது, மெசேஜில் என்ன இருக்கிறது இப்படியாக உங்கள் வாழ்க்கை துணையை பற்றி சந்தேக நெருப்பில் எரிந்து கொண்டே இருக்காதீர்கள். அல்லாஹ்வை நம்புங்கள்! பிறகு உங்கள் வாழ்க்கை துணையையும் நம்புங்கள்!

ஒட்டகத்தை கட்டிபோட்டுவிட்டு நம்பிக்கை வையுங்கள் என்று சொல்லப்படுவதை போல, மார்க்க சட்டங்களை பேணிக்கொண்டு நம்பிக்கையை வையுங்கள்! ஒருவர் மற்றவர் பின்னாலேயே நிற்காதீர்கள்! அவரவருக்கு தேவையான சுதந்திரத்தை, உரிமையை கொடுங்கள்! தக்வாவை போதித்துக் கொண்டே இருங்கள்!

உங்கள் குடும்பத்திலும் என் குடும்பத்திலும் அல்லாஹ் நல்லதையே நாடுவானாக! ஆமீன்.

உங்கள் கண்களுக்கு ஏதாவது உறுதியாக தென்பட்டால் ஆலோசனையும், அறிவுரையும் வழங்குங்கள்! அல்லாஹ்வை பயந்து கொண்டால் அல்ஹம்து லில்லாஹ்! அதை அப்படியே மறந்து விடுங்கள்! இல்லை என்றால் அழகிய முறையில் உங்கள் துணையை விட்டு விலகி விடுங்கள்! முள்ளை காலில் வைத்துக் கொண்டு நொண்டி நொண்டி நடக்காதீர்கள்!

வாழ்க்கை மகிழ்ச்சியாக வாழ்வதற்கே தவிர! குழப்ப நெருப்பை உள்ளத்தில் சுமந்து கொண்டு எரிந்து சாவுவதற்கு அல்ல.

கெட்டுப்போன உணவை சாப்பிட மாட்டோம் அல்லவா?

ஊசிப்போன, நாறிப்போன உணவின் பக்கம் நெருங்க மாட்டோம் அல்லவா?

அப்படித்தான் ஒழுக்க கேட்டால் வாழ்க்கை நாறிவிடக் கூடாது.

அப்படி ஒரு சோதனை நிகழ்ந்துவிட்டால், அதற்கு வன்முறையை தீர்வாக தேடாதீர்கள்! அவரின் கடிவாளத்தை அவரின் முதுகில் போட்டுவிட்டு நீங்கள் விலகி வந்துவிடுங்கள்!

நிம்மதி விலகுவதில்தான் என்றால் விலகிதான் ஆக வேண்டும். நிம்மதிக்கு விலை இந்த உலகத்தில் எதுவும் இல்லை.

அன்பாக வாழுங்கள்! அன்பாக வாழ்வதற்கு வீண் சந்தேகங்களை தவிர்த்து, நம்பிக்கையோடு வாழுங்கள்! ஒருவர் மீது ஒருவர் தேவையற்ற குற்றங்களை தேடாமல், முழுமையாக நம்பிக்கை வைத்து வாழுங்கள்! வீண் எண்ணங்களுக்கு வழிவிட்டு, சந்தேகத்தில் மூழ்கி நிம்மதியையும், பரஸ்பர அன்பையும் தொலைத்து விடாதீர்கள்!

அல்லாஹ்வே, எங்களுக்கு எங்கள் குடும்பத்தில் நிம்மதியை, அன்பை, கண் குளிர்ச்சியை தருவாயாக! ஈமானுடனும், இஸ்லாமுடனும், தக்வாவுடனும் எங்களை வாழவைப்பாயாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[42]

ஆமீன்.

***

42. அல்குர்ஆன் 25 : 74.

# உறவாடுவீர்!

உலகத்தில் ஒப்பற்ற ஓர் உறவு கணவன் மனைவியின் உறவு என்று சொல்லலாம்.

கணவன் மனைவியின் உறவை مِيْثَاقًا غَلِيْظًا மீஸாகன் கலீளா என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான். அதாவது, மிக தடிப்பமான ஒப்பந்தம், மிக உறுதியான உறுதிமொழி, மிகவும் வலிமையான வாக்குறுதி என்பது இதன் பொருளாகும்.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் ஒருவர் மற்றவரின் உரிமையாகவும் உரிமையாளராகவும் ஆகிவிடுகிறார்கள். ஒருவர் மற்றவருக்காக மாறிவிடுகிறார்கள். ஒருவர் ஒருவரோடு இணைந்து விடுகிறார்கள். ஒருவருக்கு ஒருவர் ஜோடியாக ஆகிவிடுகிறார்கள். ஆகவேதான் திருமணத்தை இஸ்லாமில் زِوَاج ஸிவாஜ் - ஜோடி சேருதல் என்று சொல்லப்படுகிறது.

இன்னொரு பக்கம் திருமணத்தை نِكَاح நிகாஹ் என்றும் அரபியில் சொல்லப்படுகிறது. நிகாஹ் என்றால் உடலுறவு கொள்வது என்று பொருள்.

ஆம், இந்த திருமணத்தின் மூலம்தான் ஓர் ஆண், ஒரு பெண்ணை தொடுவது, உரசுவது, காமத்தோடு பார்ப்பது, அந்தரங்கத்தை அறிவது, பார்வைகள் இணைவது மட்டுமல்ல, உடலும் உடலும் ஒட்டி உரசி உணர்ச்சிகளை கிளப்பி, இன்பக் கடலில் மூழ்குவதை அல்லாஹ் அனுமதிக்கிறான்.

இப்படியாக இருவரும் தங்களுக்குள் எவ்வித திரையுமின்றி அன்னியோன்னியமாக கலந்துறவாடி மகிழ்ச்சியாக இருப்பதற்கு புதிய ஓர் உலகத்தையே அல்லாஹ் திருமணத்தின் மூலம் அவ்விருவருக்கும் ஹலாலாக ஆக்கி இருக்கிறான்.

நிகாஹ் உடைய அடிப்படை நோக்கமே மனிதனின் இயற்கையான உடல் ஆசையை ஆகுமான வழியில் ஆகுமாக்கப்பட்ட எதிர்பாலினத்தின் மூலம் தீர்த்துக்கொண்டு, தனது கற்பை பாதுகாப்பதாகும். அத்துடன் தனக்காக வருங்கால சந்ததிகளை தேடுவதுமாகும். ஆம், மனித சந்ததிகளை உருவாக்குவது திருமணத்தின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இந்த இரண்டு முக்கிய நோக்கங்களும் ஹலாலான நிகாஹ் இன்றி நிறைவேறாது.

உலகத்தில் எல்லா உயிரினங்களிலும் இனப்பெருக்கம் என்பது மிக முக்கியமாக நிகழவேண்டிய, நிகழ்ந்துகொண்டே இருக்க வேண்டிய ஓர் இயற்கை விதியாகும். உலகத்தில் ஊர்வன, பரப்பன, நடப்பன என எல்லா உயிரினங்களிலும் இனப்பெருக்கம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். இனப்பெருக்கத்தை தவிர்ப்பதோ; அல்லது, அதை மட்டுப்படுத்துவதோ, கட்டுப்படுத்துவதோ அல்லாஹ் உருவாக்கிய இயற்கையின் மீது போர் தொடுப்பதாகும். இந்த பிரபஞ்சத்தில் அல்லாஹ் உருவாக்கி வைத்திருக்கிற படைப்புகள் மீது ஆயிரம் அணுகுண்டுகளை போட்டு அழிப்பதற்கு சமமாகும்.

இனப்பெருக்கத்தை நிறுத்துகிற; அல்லது, கட்டுப்படுத்துகிற முட்டாள்தனத்தை மனிதனை தவிர வேறு எந்த உயிரினமும் செய்வதில்லை.

அல்லாஹ் சொல்வதை போல, மனிதன் மிகப் பெரிய அநியாயக்காரனாகவும் முட்டாளாகவும் இருக்கிறான்.[43]

43. அல்குர்ஆன் 33 : 72.

மனிதனுக்கு தெளிவான அறிவு கொடுக்கப்பட்டிருந்தும், அவன் அதை கொண்டு நேரிய முறையில் சிந்திக்க மறுக்கிறான். மாறாக, சாத்தானின் வழியில் சிந்தித்து, அழிப்பதை ஆக்குவதாகவும்; நாசப்படுத்துவதை நல்லது செய்வதாகவும் மனிதன் கற்பனை செய்து கொள்கிறான்.

சரி, தலைப்புக்கு வருவோம்.

கணவன் மனைவி இருவரும் ஒருவர் மற்றவருக்கு ஆடை என்று அல்லாஹ் சொல்கிறான்.[44]

ஆம், அப்படித்தான் ஒருவர் ஒருவரோடு, உடலோடு உடலாக ஒட்டிக் கொள்ள வேண்டும்.

நாம் புதிய ஆடையை அணிந்தவுடன், மகிழ்ச்சி அடைவதுபோல ஒவ்வொரு முறையும் கணவனின் உடல் மனைவியின் உடலுடன் சேரும்போது அவர்கள் புத்தம் புதிய உணர்வுகளையும், இன்பங்களையும், ஆனந்தத்தையும் அனுபவிக்கிறார்கள்.

அது ஒவ்வொரு முறையும் புதிய அனுபவமாகவும் இன்பமாகவும் இருப்பதாவது, அதன் மீது மனிதனுக்கு சடைவு வரக் கூடாது என்பதற்காக இருக்கலாம். ஏனெனில், மனிதன் அதை சடைந்து விட்டால் பிறகு இனப்பெருக்கத்தில் குழப்பம் ஏற்பட்டு விடும். அது மட்டுமா இருவரின் அன்பிலும், பாசத்திலும், அக்கறையிலும், ஒருவருக்கு மற்றவர் மீதுள்ள ஈடுபாட்டிலும் விரிசல் ஏற்பட்டு விடும்.

காரணம் என்னவென்றால், தேவை என்பது உலக வாழ்க்கையின் இயக்கத்துடைய அடிப்படையாகும். தேவை என்ற ஒன்றை மனிதனுக்கு அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கவில்லையென்றால் மனிதன் எந்த வேலைக்கும் செல்ல மாட்டான். மனிதன் வேலைக்கு செல்லவில்லையென்றால் உலகத்தில் யாரும் சாப்பிட முடியாது, குடிக்க முடியாது, ஓர் இடத்திலிருந்து வேறு

44. அல்குர்ஆன் 2 : 187.

ஓர் இடத்திற்கு செல்ல முடியாது. யாரும் யாரிடமும் வேலைக்கு செல்ல மாட்டார்கள். ஒவ்வொருவரும் அவரவரின் வேலையை அவரே செய்ய வேண்டும். இது உலகத்தில் சாத்தியமற்ற ஒன்றாகும்.

ஆகவே, கணவனுக்கு மனைவியின் தேவையையும் மனைவிக்கு கணவனின் தேவையையும் அல்லாஹ் ஆக்கி இருப்பது அவனது ஒப்பற்ற வல்லமை மிக்க ஞானத்தின் வெளிப்பாடாகும்.

ஆம், இருவரும் இந்த தாம்பத்திய இல்லற உறவின் மூலம் ஒவ்வொரு நாளும் தங்களுடைய திருமண பந்தத்தை புதுப்பித்துக் கொள்கிறார்கள். தங்கள் முதலிரவை நினைவுப்படுத்திக் கொள்கிறார்கள். தங்களை புதுமண தம்பதிகளாக உணர்கிறார்கள். இது, அவர்களுக்கு வாழ்க்கையில் உற்சாகத்தை தருகிறது; வாழ்க்கையில் அவர்களுக்கு பிடிப்பை தருகிறது; அவர்களுக்கு வாழ்க்கையின் மீது ஆசையையும், பற்றையும், ஈடுபாட்டையும் கொடுக்கிறது; வாழ்க்கையின் அர்த்தத்தை உணர செய்கிறது. மனிதனுக்கு மிகப் பெரிய நிம்மதியை கொடுக்கிறது; மன அமைதியை கொடுக்கிறது.

நீங்கள் மன அமைதி பெறுவதற்காக உங்கள் துணைகளை உங்களிலிருந்து அல்லாஹ் படைத்திருப்பது அவனது அத்தாட்சிகளில் ஒன்று என்று அல்லாஹ் கூறுவதில் மாபெரும் தத்துவம் இருக்கிறது.[45]

படைத்தவன் (மனிதனின் தேவையை) அறியமாட்டானா? என்று (ஸூரா அல்முல்கில்) அந்த இறைவன் மனிதனிடம் கேள்வி கேட்கிறான்.

நம்மையும், நமது ஆசைகளையும், நமது உணர்வுகளையும், நமது தேவைகளையும் படைத்தவன் அவன். ஆகவே,

45. அல்குர்ஆன் 30 : 21.

அவற்றை நிறைவேற்ற ஆரோக்கியமான, இலகுவான வழிகளையும் அவன் உருவாக்கி இருக்கிறான். ஆகவே, அவன் காட்டிய வழியை குறை சொல்பவனும்; அல்லது, அதை மாற்றுபவனும்; அல்லது, வேறு வழியை தேடுபவனும் உலக மகா முட்டாளாக, மூடனாக, மூர்க்கனாக, முரடனாக, சாத்தானின் நண்பனாக இருப்பான்.

சரி, குடும்ப வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு வருவோம்.

குடும்ப வாழ்க்கையின் மகிழ்ச்சியின் தத்துவம் பல காரியங்களில், பல விஷயங்களில் மறைந்திருக்கிறது. அவை எல்லாமே சம நிலையில் பேணப்பட வேண்டும். அவை ஒவ்வொன்றுக்கும் அதற்கேற்ப முக்கியத்துவமும் தகுதியும் தரப்பட வேண்டும். ஒன்றைப் பேணி, மற்றொன்றை புறக்கணித்து விடக்கூடாது. ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்றொன்றை கைவிட்டு விடக்கூடாது. ஒன்றை கவனித்து, மற்றொன்றை அலட்சியம் செய்யக் கூடாது.

குழந்தைகள் பெற்றுக்கொள்ள முறையான தாம்பத்தியம் மிக முக்கியம். கணவன் மனைவி இருவருக்குமிடையில் அன்பு அதிகரிக்க, பாசம் பீறிட, நேசம் நிலைத்திட, உறவுகள் சிறந்திட, பரஸ்பர ஒற்றுமை ஓங்கிட, ஒருவருக்கு மற்றவர் மீது அன்பும் அக்கறையும் அதிகரித்திட, ஒருவர் மீது ஒருவருக்கு தேடல் அதிகமாகவும் நீடித்திருக்கவும் இந்த இல்லற உறவு மிக அவசியம். அப்படித்தான் அல்லாஹ் அமைத்திருக்கிறான்.

அப்படி இல்லை என்று ஒருவன் மறுத்தால் அவன் ஆண்மை அற்ற பொட்டையனாக இருப்பான். பெண் ஒருத்தி இதை மறுத்தால் அவள் பெண்மையற்றவளாகத்தான் இருப்பாள்.

இறைத்தூதர்கள் ஆன்மிகத்தின் உச்சத்தை எட்டியவர்கள்; மறுமையின் கவலை மிகைத்தவர்கள்; அல்லாஹ்வின் அன்பில் ஆழமாக மூழ்கியவர்கள்; அவனது நினைவில்

தங்களையே மறந்து விடுபவர்கள். அப்படி இருந்தும் அவர்கள் ஆண்கள் என்ற அடிப்படையில் ஓர் முழுமையான ஆணுக்குள்ள ஆண்மையின் தேடலாக அவர்களுக்கு பெண்கள் மீது ஹலாலான ஈர்ப்பும் ஆசையும் இருந்தது. அதை வெளிப்படுத்துவதில் அவர்கள் எந்த தவறையும் காணவில்லை. அதில் அவர்கள் போலியான வெட்கத்தின் வேஷம் போடவில்லை. வெளியில் துறவிகளாகவும் உள்ளே கள்ளத்தனம் செய்பவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை. தேவைகளுக்கு ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை முடித்து மிக மகிழ்ச்சியாக இன்பமாக வாழ்ந்தார்கள் நபிமார்களும் ரஸூல்மார்களும்.[46]

எனக்கு உலகத்தில் பிடித்தமான இரண்டில் ஒன்று மனைவிகள் என்று நபி ﷺ அவர்கள் தன்னை பற்றி மக்களுக்கு எவ்வித வரட்டு கூச்சமும் இன்றி சொன்னார்கள் என்றால் மனைவியின் அவசியத்தையும் அவளால் ஆணுக்கு கிடைக்கிற இன்பத்தையும், சுகத்தையும், நிம்மதியையும் இங்கே நபி ﷺ அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.[47]

அதுமட்டுமா, சில சமயம் எல்லா மனைவிகளுடன் அவரவருடைய வீட்டுக்கு சென்று ஒரே நாளில் தாம்பத்திய உறவும் வைத்திருக்கிறார்கள்.[48]

ஒரு மனைவிக்கு பின்னர் இன்னொரு மனைவியுடன் சேர்வது என்றால் உடலுறவுக்கு பின்னர் உறுப்பை நன்கு கழுவிவிட்டு பிறகு குளித்து அல்லது உளூ செய்து சுத்தமாகி கொள்ளுங்கள் என்று வழிகாட்டினார்கள்.[49]

மனைவியுடன் இருந்த பின்னர் குளித்துவிட்டு தலையில்

46. அல்குர்ஆன் 13 : 38.
47. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: ஸஹீஹ் நசாயி, எண்: 3939.
48. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5215.
49. அறிவிப்பாளர்: அபூ ராஃபிஃ رضي الله عنه, நூல்: ஸுனன் அபூதாவூது, எண்: 219.

தண்ணீர் சொட்ட தொழுமிடத்தில் வந்து நின்றிருக்கிறார்கள்.[50]

ஒரு முறை மனைவியிடம் உடலுறவு கொண்டிருந்தார்கள். குளிக்கவில்லை. மறந்துவிட்டார்கள். தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்ட பின்னர், தொழுகை நடத்த வந்துவிட்டார்கள். பிறகு அல்லாஹ் அவர்களுக்கு நினைவூட்டினான். உடனே தோழர்களை அப்படியே நிற்க வைத்துவிட்டு குளிக்க சென்றார்கள். பிறகு வந்து தொழுகை நடத்தினார்கள்.[51]

பெண்களுக்கு மாதம் மாதம் வருகிற மாதவிடாய் காலத்தில் நபி ﷺ அவர்களின் மனைவிமார்கள் இருக்கும்போது கூட நபி அவர்கள் அந்த மனைவிகள் மூலம் ஆகுமான முறையில் இன்பம் பெற்று இருக்கிறார்கள். தங்களது கீழாடையை நன்கு இருக்கமாக கட்டிக்கொள்ள சொல்வார்கள். குறிப்பாக ஹைழ் வருகிற அந்த உருப்பின் மீது துணியை கட்டிக்கொள்ள சொல்வார்கள். பிறகு அந்த இடத்தை தவிர்த்துவிட்டு மனைவியை கட்டி அனைத்து இன்பம் அடைவார்கள்.[52]

அந்தளவு மனைவிகளிடம் தாம்பத்திய உறவு அது முழுமையாக இருந்தாலும் சரி, இல்லை அறை முழுமையாக இருந்தாலும் சரி அதை அந்த மனைவியிடம் அனுபவிப்பதில் அவர்கள் எந்த குறையும் வைக்கவில்லை. நாளை இன்னொரு மனைவியிடம் சென்று அங்கு அனுபவித்துக்கொள்ளலாம் என்று விட்டுவிடவில்லை.

குளிப்பதற்கு இன்றிருக்கிற தண்ணீர் வசதிகள் அன்று இல்லை என்றாலும் பெரும்பாலும் இந்த தேவைகளை இரவிலேயே நபி ﷺ அவர்கள் நிறைவேற்றிக் கொண்டார்கள் என்றால் இந்த தாம்பத்திய உறவுக்கு நபி ﷺ அவர்கள் எந்தளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை நாம் புரிய வேண்டும்.

50. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 605.
51. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 605.
52. அறிவிப்பாளர்: மைமூனா பின்த் அல்ஹாரிஸ் ؓ, ஆயிஷா ؓ நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 302, 303. நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 293.

அதுமட்டுமா, போர், ஹஜ், உம்ரா போன்ற சிரமமான பயணங்களில் கூட நபி ﷺ அவர்கள் மனைவிகளை விட்டு பிரியவில்லை. அவர்களில் பலரை அல்லது சிலரை தம்மோடு அழைத்துச் சென்றார்கள். இரவுகளை தமது மனைவிகளோடு கழித்தார்கள். இது நபி ﷺ அவர்கள் குடும்ப வாழ்க்கையில் தாம்பத்திய உறவுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை மிக ஆழமாக உணர்த்துகிறது.

தக்வாவின் உச்சத்தை அடைவதற்காக அல்லாஹ் கடமையாக்கிய நோன்புடைய மாதத்தில் கூட இரவு காலங்களில் உங்கள் மனைவிகளுடன் நீங்கள் இல்லற உறவு வைத்து உங்கள் ஆன்மாக்களை சாந்தி அடைய செய்யுங்கள், குழந்தை செல்வத்தை தேடுங்கள் (அல்குர்ஆன் 2:187) என்று அல்லாஹ் அனுமதி அளித்திருப்பதை ஆழமாக கவனித்து பார்ப்பவருக்கு புரியவரும், தாம்பத்திய உறவுடைய அவசியமும், அதன் பலனும், நன்மையும்.

அது மட்டுமா, ஹஜ் உடைய பயணத்தில் உம்ராவை முடித்த பின்னர் இஹ்ராமை விட்டு வெளியேறி உங்கள் மனைவிகளிடம் நீங்கள் சுகத்தை தேடிக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் அனுமதி அளித்திருக்கிறான் என்றால் இந்த தாம்பத்திய உறவுடைய அவசியம் மனிதனுக்கு எந்தளவு இருக்கிறது என்பதை புரிய முடியும். ஒரே இஹ்ராமில் செய்யப்படுகிற உம்ரா, ஹஜ்ஜை விட உம்ராவிற்கு பின்னர் இஹ்ராமை முடித்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு பிறகு ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டுகிற ஹஜ் தமத்துஃ சிறந்தது என்று நபி ﷺ அவர்கள் வழிகாட்டியதிலிருந்தும் இந்த தாம்பத்திய உறவின் அவசியமும் சிறப்பும் புரிய வருகிறது.

நபி ﷺ அவர்கள் தமது வாழ்நாளின் இறுதி நேரத்தை எதிர்பார்த்திருந்தபோது கூட ஒரு பக்கம் இறைவழிபாட்டை எப்படி கவனத்தில் வைத்திருந்தார்களோ அதுபோன்று

மனைவிகளில் தனக்கு மிகப் பிரியமான மனைவியிடம் தங்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அதை வெளிப்படுத்துவதில் அவர்கள் வெட்கப்படவில்லை. அவர்களின் ஆசையை மற்ற மனைவிமார்கள் நிறைவேற்றினார்கள். நபி ﷺ அவர்கள் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா உடைய வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார்கள்.[53]

நபி ﷺ அவர்கள் மனைவிமார்களுடன் மட்டுமல்லாமல், அடிமைப் பெண் மூலமும் வாழ்க்கையில் இல்லற சுகத்தை தேடி இருக்கிறார்கள். இதில் எவ்வித குறையும் இல்லை என்பதை மக்களுக்கு தமது செயல் மூலம் நிரூபித்து காட்டினார்கள். பெரும்பாலும் பல ஸஹாபாக்களும் கூட மனைவிகளுடன் பல அடிமைப் பெண்களையும் தங்கள் இல்லற வாழ்க்கைக்காக வைத்திருந்தார்கள். அவர்கள் மூலம் குழந்தைகளை பெற்றிருக்கிறார்கள்.

நபி ﷺ அவர்கள் தமது அடிமைப் பெண் மாரியா மூலம் தமக்கு கிடைக்கப்பெற்ற இப்ராஹீம் என்ற ஆண் மகன் மீது நாம் சொல்லால் வர்ணிக்க முடியாத பாசத்தை வைத்திருந்தார்கள். அந்த குழந்தை இறந்தபோது நபி ﷺ அவர்கள் அழுதார்கள். இந்த அழுகையானது அல்லாஹ் உள்ளத்தில் ஏற்படுத்திய கருணை, இரக்கம், பாசம் என்று மக்களுக்கு விளக்கம் கூறினார்கள்.[54]

நபியவர்களின் மகனார் இப்ராஹீம் உயிரோடு இருந்திருந்தால் அவர் நபியாக ஆகியிருப்பார். ஆனால், நபி ﷺ அவர்களுக்கு பின்னர் நபி இல்லை. அவர்கள்தான் இறுதி நபி ஆவார்கள் என்று அந்த மகனாருக்கு அல்லாஹ்விடம் இருந்த கண்ணியத்தை பற்றி ஒரு நபித்தோழர் சொல்லிக் காண்பிக்கிறார்.[55]

53. அறிவிப்பாளர்: ஆயிஷா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 1389.
54. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 1303.
55. அறிவிப்பாளர்: இஸ்மாயில் இப்னு அபூ காலித் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6194.

தமது மனைவியுடன் இச்சையாக எவ்வளவு நேரம் விளையாண்டாலும் அது அல்லாஹ்விடம் குற்றமில்லை, அது விரும்பத்தக்க ஒன்று என்று நபி ﷺ அவர்கள் மக்களுக்கு தாம்பத்திய உறவை ஆர்வமூட்டி கூறி இருக்கிறார்கள். (அல்ஹதீஸ்) ஏனெனில், இத்தகைய விளையாட்டின் மூலம்தான் ஆணுக்கும் பெண்ணுக்கும் இல்லற உறவின் மீது ஆசை ஏற்படுகிறது. ஒருவர் மற்றவரின் இச்சையை தீர்ப்பதில் மனமுவந்து இறங்கி வருவார்கள் என்பதை நபி ﷺ அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.[56]

மனக்கசப்புகள் நீங்க, கணவனுக்கு மனைவி மீதும் மனைவிக்கு கணவன் மீதும் அன்பும் பாசமும் அக்கறையும் பொங்கி எழ தாம்பத்திய உறவு மிக மிக முக்கியமான ஒரு கீ பாயின்ட் ஆகும்.

மனைவி கணவனுக்காக நல்ல ஆடை அணிந்து தன்னை அலங்கரிப்பதும் அவ்வாறே கணவன் தன்னை அழகுபடுத்திக் கொள்வதும் இஸ்லாமில் மிக முக்கியமான சட்டமாகும்.

அதிகம் நோன்பு வைத்து, அதிகம் இரவு வழிபாடு செய்து உன்னை பலவீனப்படுத்தி உன் மனைவியோடு உனது ஆசையையும் அவளின் ஆசையையும் நீ நிறைவேற்ற முடியாமல் போவதை நபி ﷺ அவர்கள் அனுமதிக்கவில்லை.

அப்படி செய்த தமது தோழர்களை கண்டித்தார்கள். உமது மனைவிக்கு உம் மீது கடமை இருக்கிறது என்று நபி ﷺ அவர்கள் அந்த தோழர்களை எச்சரித்தார்கள். அந்த தாம்பத்திய கடமையை நபி ﷺ அவர்கள் அதை மறந்த தோழர்களுக்கு நினைவூட்டினார்கள்.[57]

---

56. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ؓ, நூல்: ஸஹீஹுல் ஜாமிஃ எண்: 4534.
57. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5199.

அது அலட்சியம் செய்யப்படுவதை நபி ﷺ அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. மறுமையின் தேடல் என்ற பெயரிலோ, இறைவழிபாட்டில் மூழ்குதல் என்ற சாக்குப்போக்குகளை கூறியோ தாம்பத்திய உறவை விட்டு விலகி வாழ்வதை நபி ﷺ அவர்கள் அனுமதிக்கவில்லை. அதை கடுமையாக கண்டித்தார்கள்.[58]

நபி ﷺ அவர்களும் ஸஹாபாக்களும் தங்கள் வயோதிகத்தில் திருமணம் முடித்ததிலிருந்தும்; வயோதிகத்தில் குழந்தை பெற்றெடுத்ததிலிருந்தும்; இறுதி மூச்சு வரை உள்ளூரிலும் பயணத்திலும் மனைவிகளுடனும் அடிமைப் பெண்களுடனும் தாம்பத்திய உறவு வைத்ததிலிருந்தும் "தாம்பத்திய உறவு மனிதனின் சீரான வாழ்க்கைக்கு எந்தளவு மிக மிக அவசியமானது, முக்கியமானது" என்பதை பொது அறிவுள்ள ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும்.

தாம்பத்திய உறவுக்கு சக்தி இருந்து, நோய் போன்ற எவ்வித தடைகள் இல்லாதபோது, கணவனின் ஆசையை நிறைவேற்றாமல் விலகி செல்கிற பெண் மீது இறைவனின் சாபமும் வானவர்களின் சாபமும் இறங்குவதாக நபி ﷺ அவர்கள் எச்சரித்தார்கள்.[59]

மனைவி அடுப்படியில் உணவு சமைத்துக் கொண்டிருந்தாலும் அல்லது வாகனத்தின் மீது அமர்ந்திருந்தாலும் கணவன் படுக்கைக்கு அழைத்தால் மறுப்பு சொல்லக் கூடாது என்று மார்க்கம் வழிகாட்டி, தாம்பத்தியத்தின் அவசியத்தை உடனே நிறைவேற்றிக்கொள்ள தூண்டுகிறது.[60]

கணவன் உள்ளூரில் இருக்கும்போது அவனது அனுமதி

58. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5063.
59. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3237.
60. அறிவிப்பாளர்: தல்க் இப்னு அலீ ஹனஃபி ؓ, நூல்: ஸுனனுத் திர்மிதி எண்: 1160.

இல்லாமல் மனைவி உபரியான நோன்பு வைப்பதை நபி ﷺ அவர்கள் தடுத்ததிலிருந்தும் குடும்ப வாழ்க்கையில் தாம்பத்திய உறவின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் நாம் புரியலாம்.[61]

சில தம்பதிகள் ஓரிரு பிள்ளைகளை பெற்றுக் கொண்ட பின்னர், அந்த பிள்ளைகள் கொஞ்சம் வளர்ந்தவுடன் இவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் தனி தனி அறையில் இரவு கழிக்கிறார்கள். ஒரே வீடு. ஆனால், இரவு தங்குமிடம் வேறு வேறு, ஒரே அறையாக இருந்தாலும் படுக்கை வேறு வேறு, கணவனை விட்டு மனைவி அல்லது மனைவியை விட்டு கணவன் விலகி செல்வது இன்றைய முஸ்லிம் சமுதாயத்தில் பரவலாகி விட்டது.

எந்த பெண், கணவனின் இல்லற அழைப்புக்கு பதிலளித்து அவனுக்கு பணிந்து நடக்கிறாளோ அவளை ஸாலிஹாத் - நல்ல பெண்களில் உள்ளவள் என்று குர்ஆன் புகழ்கிறது. இல்லற அழைப்புக்கு பதில் அளிக்கவில்லை என்றால், கட்டளைகளுக்கு கீழ்ப்படியவில்லை என்றால் அறிவுரை கூறுங்கள், அவளுடன் படுக்கையில் பேசாதீர்கள், தேவைப்பட்டால் காயம் ஏற்படாதவாறு அவளை அடித்து திருத்துங்கள் என்று அல்குர்ஆன் அறிவுரை வழங்குகிறது. அவள் கீழ்ப்படிந்து நடந்து கொண்டால் அவள் மீது வீணான குறைகளை தேடாதீர் என்று அல்குர்ஆன் எச்சரிக்கிறது.[62]

தனது ஆசையை பெண் நிறைவேற்றி கொடுக்கவில்லை என்றால் அவளை தலாக் செய்வதில் ஆண் மீது எவ்வித குற்றமும் இல்லை, அவ்வாறே தனது ஆசையை நிறைவேற்றி கொடுக்க முடியாத, குழந்தை பாக்கியம் தர முடியாத ஆணிடமிருந்து விவாகரத்து பெற பெண்ணுக்கு முழு உரிமையை மார்க்கம்

61. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5195.
62. அல்குர்ஆன் 4 : 34.

வழங்கி இருக்கிறது. தாய்மை அடைவதை பெண்ணின் தார்மீக உரிமையாக இஸ்லாம் பார்க்கிறது.

தாம்பத்திய உறவு இல்லாமல் வாழ்வது வெளிச்சம் வராத பூட்டப்பட்ட குறுகிய இருட்டு அறையில் சிறை வைக்கப்பட்டது போலாகும்.

இல்லற உறவு இல்லாமல் வாழ்வது கடும் வெப்பம் நிறைந்த வறட்சியான பாலைவனத்தில் குடிக்க நீர் இல்லாமலும் ஒதுங்க நிழல் இல்லாமலும் வாழ்வது போலாகும்.

ஆண் பெண் காம உறவு இல்லாமல் வாழ்வது உணவும் நீரும் இல்லாமல் வாழ்வது எவ்வளவு சிரமமோ, அது முடியாத ஒன்றோ அது போலாகும்.

ஓடுகிற தண்ணீரை அடைப்பதும், வீசுகின்ற காற்றை நிறுத்துவதும் எவ்வளவு சிரமமோ அதுபோன்றுதான் ஓர் ஆண் அல்லது ஒரு பெண் தனது உடல் ஆசையை நிறைவேற்ற ஆகுமான வழி இல்லாமல் வாழ்வது.

காற்று இல்லாமல் உடல் புழுங்குவதை விட காம ஆசை நிறைவேறாமல் உள்ளம் புழுங்குவதை தாங்கிக்கொள்வது மிக மிக கடினம்.

பசியினால் வயிற்றில் ஏற்படும் வலியை சமாளிப்பதை விட காமம் தீர்க்கப்படவில்லை என்றால் மனிதனின் மனதில் ஏற்படுகிற நெருக்கடியை சமாளிப்பது மிக கடினம்.

மரணம் ஒன்று மட்டுமே ஓர் உயிரினத்தின் காமத்தின் முடிவாக இருக்குமே தவிர வயதோ பலவீனமோ காமத்தின் முடிவாக இருக்க முடியாது. ஒவ்வொரு வயதுக்கும் அந்த வயதுக்கு ஏற்றார்போல காமம் இருக்கும். இதை மறுப்பவன் கண்ணிருந்தும் கபோதியாவான்.

உங்கள் வாழ்க்கை துணைக்கு அவரின் உடல் ஆசையை தணிக்காமல் உங்களுடன் அவரை வாழ சொல்வது எப்படி

என்றால் ஒரு பறவையை அதன் இறக்கைகளை வெட்டிவிட்டு, பிறகு அதை ஆகாயத்தில் தூக்கி வீசி பறக்க சொல்வதை போன்றுதான் அது.

அல்லது ஒரு மீனை கடலிலிருந்து பிடித்துக்கொண்டு வந்து அதை கரையில் வீசி எறிந்து நீ நீந்து என்று சொன்னால் அது எவ்வளவு சிரமப்படுமோ அப்படித்தான் அதுவும்.

இன்னும் நூறு உதாரணங்களை இன் ஷா அல்லாஹ் கூற முடியும்! புத்தி உள்ளவர்களுக்கும் சிந்திப்பவர்களுக்கும் இதுவே போதும்.

ஆகவேதான், தனது கணவன் போருக்கு சென்று நீண்ட நாள் ஆனதால் உடல் ஆசையினால் சிரமப்பட்டுக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் நிலையை அறிந்த கலீஃபா உமர் அவர்கள் நான்கு மாதங்களை போரில் கழித்த ஆண்கள் தங்கள் இல்லங்களுக்கு திரும்பும்படி அரசாணை பிறப்பித்தார்கள்.[63]

இன்னும், இஸ்லாமில் நீண்ட காலமாக ஒருவரை சிறைப்படுத்தி வைப்பது என்பது அறவே இல்லை. குற்றவாளி ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருப்பினும் சரி, அவர் போரில் கைது செய்யப்பட்டவராக இருந்தாலும் சரி, அவரை அடைத்து வைத்து இம்சை படுத்தக் கூடாது. அவர்களை அடிமைகளாக்கி உங்கள் இல்லங்களில் வைத்துக் கொள்ளுங்கள்!

பெண் அடிமைகள் இஸ்லாமை ஏற்றால் அவர்களுடன் நீங்கள் இல்லற உறவு வைக்கலாம். அவர்களில் உள்ள ஆண் அடிமைகளுக்கும் பெண் அடிமைகளுக்கும் திருமணம் செய்து வையுங்கள்! இப்படியாக அடிமைகளுக்கும் கூட இல்லற வாழ்வுடைய உரிமையை வழங்கிய ஒப்பற்ற மார்க்கம் இஸ்லாம்.

மனிதனின் அத்தனை இயற்கை தேவைகளையும் ஆசைகளையும் அழகிய முறையில் நிறைவேற்றிக்கொள்ள

63. அறிவிப்பாளர்: இப்னு உமர் ﷺ, நூல்: பைஹகி எண்: 17908.

ஆரோக்கியமான நேர்மையான வழிகளை காட்டுகிற மார்க்கம் இஸ்லாம் மட்டுமே!

ஆகவே, என் மார்க்க சகோதர சகோதரிகளே! உங்கள் உலக அல்லது மார்க்க பணிகளை காரணம் கூறி தாம்பத்திய உறவை மறந்தோ, அலட்சியம் செய்தோ, புறக்கணித்தோ, அதை விட்டு விலகி இருந்தோ உங்கள் வாழ்க்கை மற்றும் உங்கள் துணையுடைய வாழ்க்கையின் இன்பத்தையும், மகிழ்ச்சியையும், சுகத்தையும், ஆனந்தத்தையும் தொலைத்து விடாதீர்கள்.

பெண்களே உங்களை அலங்காரப்படுத்தி உங்கள் கணவனுக்கு உங்கள் மீது ஆசைவரும்படி வைத்துக் கொள்ளுங்கள்! ஆண்களே உங்கள் உடலை வலிமையாகவும், ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் வைத்துக் கொண்டு நீங்களும் இன்பம் பெற்று உங்கள் வாழ்க்கை துணைக்கும் இன்பத்தை கொடுங்கள்!

மனைவியோடு உறவுகொள்வதை நன்மையான ஒரு காரியமாக நபி ﷺ அவர்கள் சொன்னதை புரிந்து கொள்ளுங்கள்! ஆம், ஆசையை ஹராமான வழியில் தீர்த்துக்கொண்டால் பாவம்தானே, அப்படி என்றால் அதை ஹலாலான வழியில் தீர்த்தால் ஏன் அது நன்மையாக ஆகாது என்று விளக்கமும் தெளிவும் நபி ﷺ அவர்கள் கொடுத்தார்கள்.[64]

தண்ணீர் இல்லை என்றாலும், தொழுகை முன்னால் இருக்கிறதே என்று தாம்பத்தியத்தை நீங்கள் நிறுத்த வேண்டாம், நீங்கள் தயம்மும் செய்து சுத்தமாகி தொழுது கொள்ளலாம் என்று அல்லாஹ் அனுமதித்து இருக்கிறான்.

நீங்கள் நோயுற்று தண்ணீரை பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறபோது கூட தாம்பத்திய வாழ்க்கையில் மனம் நாடினால் நீங்கள் தாம்பத்திய உறவை நிறுத்தாதீர்கள். உங்கள் ஆசையை

64. அறிவிப்பாளர்: அபூதர் அல்கிஃபாரி رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம். எண்: 1006.

உங்கள் மனைவியிடம் நிறைவேற்றிய பின்னர், நீங்கள் குளிக்க முடியவில்லை என்றால் பரவா இல்லை, தயம்மும் செய்துகொள்ளுங்கள் என்று அல்லாஹ் அல்குர்ஆனில் அனுமதித்ததை புரிந்து கொள்ளுங்கள்![65]

மருத்துவ துறையின் உலக அறிஞர்கள் ஒருமித்து கூறுகிறார்கள், "ஆகுமான இல்லற உறவினால் மனிதனுக்கு முழுமையான உற்சாகமும் உடல் வலிமையும் சுறுசுறுப்பும் கிடைக்கின்றன" என்று.

எத்துனை முறை தன் இணையுடன் சேர்ந்து பிரிந்து பறந்து விளையாண்டு மகிழ்கிற சிட்டுக்குருவியை பாருங்கள்!

அன்பாக கொஞ்சி விளையாடுகிற, முத்தங்களையும் அன்புகளையும் நிமிடத்திற்கு பலமுறை பரிமாறிக்கொள்கிற காதல் பறவைகளை பாருங்கள்!

ஜோடியாக சுற்றி திரிந்து இனப்பெருக்கம் செய்து மகிழ்ச்சியாக வாழ்கிற உயிரினங்களை பாருங்கள்!

காம உறவு இல்லாமல் எந்த உயிரினமும் இல்லை. மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அது மிக முக்கியம். அதை உணர்ந்து அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்!

உடலும், உள்ளமும், அகமும், புறமும், ஆன்மாவும், ஆசையும் நிம்மதியாக மகிழ்ச்சியாக வாழ தாம்பத்திய வாழ்க்கை மிக மிக அவசியம் என்பதை புரிந்து அந்த இன்பத்தை ஒருவர் மற்றவருக்கு கொடுக்க தவறாதீர்கள்!

உங்கள் வாழ்க்கை துணையின் ஆசையை உங்களால் அறவே நிறைவேற்ற முடியவில்லை எனில், அதற்கு உங்களிடம் பலவீனம் இருப்பது மருத்துவ ரீதியாக ஊர்ஜிதமாகி, அதை சரிசெய்வதும் அறவே முடியாது என்றிருந்தால் உங்களுக்கான

65. அல்குர்ஆன் 4 : 43.

மார்க்க ஆலோசனை இதுதான்.

அதாவது, உங்கள் வாழ்க்கை துணைக்கு தாம்பத்தியம் தேவையாக இருந்தும் உங்களால் அதை கொடுக்க முடியவில்லை எனில் நீங்கள் ஆணாக இருந்தால் அவளுக்கு அழகிய முறையில் நல்ல பொருளாதார அன்பளிப்பு செய்து அவளை விட்டுவிடுங்கள்! அவள் விரும்பியவனை மணம் முடித்து அவளுக்கு அல்லாஹ் விதித்த சந்ததிகளை அவள் தேடிக்கொள்ளட்டும். அவள் தாய்மை அடையட்டும். அல்லாஹ்வின் நாட்டத்தில் சந்ததி இல்லை என்றாலும் தாம்பத்திய உறவின் மூலம் அவள் வாழ்க்கையின் சுகத்தையும் இன்பத்தையும் அனுபவித்து நிம்மதியாக அமைதியாக சாந்தமாக வாழ்ந்து கொள்ளட்டும்.

அல்லது, பலவீனம் பெண்ணாகிய உன்னிடம் இருந்தால், உனது கணவனுடன் படுத்து அவனுக்கு ஹலாலான ஆசையை தீர்க்க உன்னால் இயலவில்லை எனில், அதற்கு உன்னிடம் மார்க்க அனுமதித்த காரணமும் இருந்தால் அல்லாஹ் உன்னை மன்னிக்க போதுமானவன். நீ உனது கணவன் இன்னொரு திருமணம் செய்வதை தடுக்காதே! அதில் குறுக்கே நிற்காதே! அவன் இன்னொரு மனைவியை மணம் முடித்து தனக்கு சந்ததிகளை தேடிக்கொள்ளட்டும். அல்லது, வாழ்க்கையின் இன்பத்தை அனுபவித்து கொள்ளட்டும். நீயும் அவனுக்கு மனைவியாக அவனுடன் வாழ்ந்து, அவனது செல்வத்தின் மூலமும் அரவணைப்பின் மூலமும் பலன் பெற்றுக்கொள்!

இதற்கு மாற்றமாக குருட்டுத்தனமான செண்டிமெண்ட் பேசிக் கொண்டு; அல்லது, காஃபிர்களின் கலாச்சார காதல் டயலாக் பேசிக் கொண்டு உங்கள் இம்மை வாழ்க்கையையும் மறுமை வாழ்க்கையையும் பாழாக்கிக் கொள்ளாதீர்கள்!

நான் கூறிய செய்திகள் சரியானதாக இருந்தால் அவை அல்லாஹ்வின் புறத்திலிருந்தாகும். தவறாக இருந்தால் அவை

என் புறத்திலிருந்தும் ஷைத்தான் புறத்திலிருந்துமாகும்.

அல்லாஹ்வே! சொல்லிலும் செயலிலும் நேரான நல்லதின் பக்கம் எங்களுக்கு வழிகாட்டுவாயாக! உன் பக்கமே எங்கள் முகங்களை திருப்புவாயாக! இம்மையிலும் அழகியதை மறுமையிலும் அழகியதை எங்களுக்கு கொடுப்பாயாக! ஆமீன்.

அல்லாஹ்வே! எங்களுக்கு இஸ்லாமிலும் இல்லறத்திலும் மகிழ்ச்சியான நிறைவான வாழ்க்கையை தந்தருள்வாயாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[66]

ஆமீன்.

***

66. அல்குர்ஆன் 25 : 74.

# போட்டிப் போட வேண்டாம்! பிடிவாதம் பிடிக்க வேண்டாம்!

இணங்கி வாழ்வது, விட்டுக்கொடுத்து போவது, சகித்து செல்வது இன்பமான இனிமையான இல்லற வாழ்க்கைக்கு மிக முக்கியமான அருமருந்தாகும்.

வாழ்க்கை என்பது விட்டுக்கொடுத்து வாழ்வதுதானே தவிர, நீயா நானா என்று போட்டி போடுவதற்குரிய கேம் அல்ல வாழ்க்கை.

பணிந்து செல்வதிலும்; தான் விரும்பியதை தனது துணைக்காக விட்டுக் கொடுத்து போவதிலும்; பெருந்தன்மையாக நடந்து கொள்வதிலும்; பிடிவாதம் பிடிக்காமல் உன் விருப்பத்தை நான் ஏற்கிறேன் என்று இறங்கிப்போவதிலும்தான் வாழ்க்கையின் இன்பம் இருக்கிறது.

இன்று, பலருடைய வாழ்க்கை நரகமாக மாறி இருப்பதற்கு காரணம் பொருளாதாரம் குறைந்திருப்பதோ; வீடு சிறியதாக, நெருக்கடியாக இருப்பதோ; வருமானம் குறைவாக இருப்பதோ; செல்வ சேமிப்புகள் இல்லாதிருப்பதோ; நோய்நொடிகள் தொற்றிக் கொண்டிருப்பதோ அல்ல. அல்லது, வேறு விதமான வசதி இன்மையோ அல்ல. மாறாக, கணவன் மனைவி இருவருக்கும் இடையில் இருக்கிற ஈகோ பிரச்சனையும் நீயா நானா என்ற போட்டி மனப்பான்மையும்தான் குடும்ப பிரச்சனைகளுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

பலருடைய நல்ல வாழ்க்கை நாசமாகிப்போனதே இந்த போட்டி மனப்பான்மையினால்தான். நான் ஏன் இவனுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்று மனைவியும், நான் ஏன் இவளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கணவனும் பிடிக்கிற பிடிவாதம்தான் சச்சரவுகளுக்கும் பிரிவினைகளுக்கும் மனக்கசப்புகளுக்கும் முக்கிய காரணம்.

பிரியத்துடன்தான் கல்யாணம் நடந்தது. முழு சம்மதத்துடன்தான் திருமணம் நடைபெற்றது. எல்லோரும் வாழ்த்தினார்கள். இருவீட்டார்களும் நல்லவர்கள்தான். கணவன் மனைவி இருவரும் அவரவர் இடத்தில் நல்லவர்தான். ஆனால், இருவரில் ஒவ்வொருவரிலும் ஒரு ஷைத்தான் இருப்பான். அவன் சும்மா இருப்பானா? நீ ஏன் இறங்கி போக வேண்டும்? என்று ஒவ்வொருவரையும் அவரின் ஷைத்தான் ஏத்தி விடுவான்.

விட்டுக்கொடுப்பவர் கெட்டுப்போக மாட்டார்,

பணிபவர் தாழ்ந்துவிடமாட்டார்,

மன்னிப்பவரின் கண்ணியம் குறைந்துவிடாது.

இந்த உண்மைகளை நாம் காலம் சென்ற பின்னர்தான் புரிய வருகிறோம். பெருமை அல்லாஹ்விற்கு மட்டும் தகுதியான குணம். படைப்புகளிடம் பெருமை இருப்பது அல்லாஹ்விற்கும் பிடிக்காத குணம், மக்களுக்கும் பிடிக்காத குணம்.

பெருமை பிடித்தவர்களையும் பெருமை அடிப்பவர்களையும் யாரும் விரும்ப மாட்டார்கள்.

பணிவு என்பது வானவர்களின் குணம். அது உள்ளவர்களை அல்லாஹ்வும் விரும்புகிறான். மக்களும் விரும்புகிறார்கள். எல்லோராலும் அவர்கள் நேசிக்கப்படுவார்கள். எங்கு சென்றாலும் அவர்களுக்கு மரியாதை கொடுக்கப்படும். மக்கள் அவர்களை வரவேற்பார்கள்.

பிள்ளைகளுக்கு பெற்றோர் முன்னால் பணிவு இருக்க வேண்டும். மனைவிக்கு கணவன் முன்னால் பணிவு இருக்க வேண்டும்.

கணவன் மனைவியோடு பழகுவதில் பேசுவதில் பெருமை இன்றி, பணிவு கலந்த அன்போடு, அன்பு கலந்த பணிவோடு, பாசத்தோடு, நேசத்தோடு இருக்க வேண்டும்.

மனைவியை திட்டுவதோ, மட்டமாக பேசுவதோ, தரம் தாழ்த்தி பேசுவதோ, குத்திக்காட்டி பேசுவதோ, மனைவியோடு பேசும்போது கீழ்த்தரமான சொற்களை உபயோகிப்பதோ அறவே கூடாது. இவை இஸ்லாமில் கண்டிக்கப்பட்ட குணமாகும்.

மனைவியின் மீது கணவனுக்கும் கணவன் மீது மனைவிக்கும் உரிமையும் கடமையும் உண்டு. இருவரும் ஒருவருக்கு ஒருவர் கண்ணியம் கொடுப்பதிலும்; ஒருவரை ஒருவர் மதித்து நடப்பதிலும்; ஒருவர் மற்றவருக்கு தேவையானதை செய்து கொடுப்பதிலும் சரி சமமான உரிமையும் தகுதியும் பெறுகிறார்கள்.

கணவன், மனைவியை நிர்வகிப்பவன், செல்வத்தை உழைத்து சம்பாதித்து, மனைவிக்கும் குடும்பத்திற்கும் பிள்ளைகளுக்கும் செலவளிப்பவன் என்ற அடிப்படையிலும், இயற்கையாக அல்லாஹ் அமைத்த உடல் அமைப்பின்படி பொறுப்புகளை சுமக்க தகுதி பெற்றவன் என்ற அடிப்படையிலும் ஆண்களுக்கு பெண்களை பார்க்கிலும் ஒரு தகுதி அதிகம் உண்டு என்று குர்ஆன் சொல்கிற அதே நேரத்தில் இருவரில் ஒருவர் ஒருவரை சேர்ந்தவரே - அதாவது இருவரும் சமமானவர்களே என்றும் குர்ஆன் கூறுகிறது.[67]

அதாவது, ஒவ்வொருவருக்கும் அவரவரின் உடல் அமைப்பு, பாலினம், மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை கவனித்து தனித்தனி கடமைகளையும் பொறுப்புகளையும் அல்லாஹ் வழங்கி இருக்கிறான்.

67. அல்குர்ஆன் 4 : 34.

ஒருவரின் கடமையை மற்றொருவர் நிறைவேற்ற முடியாது. ஆகவே, ஒவ்வொருவரும் மற்றவரை மதித்து அரவணைத்து அன்புடன் நடக்க வேண்டும்; நடத்த வேண்டும்.

கணவன் மனைவி இருவரில் யாரும் யாருக்கும் அடிமையும் இல்லை, யாரும் யாருக்கும் எஜமானனும் இல்லை. அல்லாஹு தஆலா ஆணுக்கு ஒரு தனி சிறப்பை கொடுத்திருக்கிறான். அதுபோன்று பெண்ணுக்கும் தனி சிறப்பை கொடுத்திருக்கிறான். அந்த சிறப்புகள் ஒருவர் மீது ஒருவர் பெருமை பேசுவதற்கோ, ஆதிக்கம் செலுத்தி, அடிமையாக்குவதற்கோ இல்லை. அந்த சிறப்புகள் மார்க்க அடிப்படையில் சில கடமைகளை விசேஷமாக ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அல்லாஹ் கொடுத்திருப்பதால் உள்ள சிறப்புகளாகும். மற்றபடி அல்லாஹ்விடம் ஆணும் பெண்ணும் சமம்தான்.

இந்த உலகத்தை அழகிய முறையில் படைக்க, சிறப்பான முறையில் அதை இயக்க அவனுடைய ஞானம் எப்படி முடிவு செய்ததோ அந்த தத்துவத்தின் அடிப்படையில் அவன் இந்த பிரபஞ்சத்தையும் அதில் உள்ள படைப்புகளையும் படைத்தான். அவ்வாறே, ஒவ்வொரு படைப்பிலும் பாலினத்தையும் படைத்திருக்கிறான்.

அவனது ஞானம் எத்தகையது என்றால் முன்னோர் பின்னோர் என அனைத்துலக மக்களின் அறிவுகளை எல்லாம் ஒன்று சேர்த்து வைத்து சர்வ வல்லமை மிக்க அல்லாஹ்வின் ஞானத்தை நாம் புரிய முயற்சித்தாலும் ஓர் அளவிற்குதான், அதுவும் அல்லாஹ் நாடிய அளவிற்குதான் நாம் புரிய முடியும். அதற்கு மேல் நாம் புரிய முடியாது. அல்லாஹ்வின் கட்டளையை ஏற்பதும், நம்புவதும், அந்த கட்டளைக்கு பணிந்து நடப்பதும்தான் சரியான அறிவாகும். குதர்க்கம் செய்வதோ எதிர்த்து பேசுவதோ அறிவாக ஆக முடியாது.

சரி, கணவன் மனைவியின் வாழ்க்கையில் எப்போதுமே காற்று

ஒரு சீராகவே வீச வேண்டும் என்று அவசியம் அல்ல. அதுவும் ஓர் உலகம்தானே. உலகத்தில் நடக்கிற கிளைமேட் சேஞ்சிங் அதிலும் நடக்கத்தான் செய்யும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஷைத்தானும் நஃப்ஸூம் நமது நிம்மதியை கெடுப்பதற்காகவே முழு முயற்சியோடு, அதீத பிரயாசையோடு முயற்சி செய்துகொண்டிருக்கும்போது அந்த இருவரின் கெடுதியிலிருந்து நாம் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?

குடும்பத்தை பிரிப்பது ஷைத்தானுக்கு மிகப் பிரியமான ஒரு காரியமாகும். சந்தேகங்களை போடுவதும், சச்சரவுகளை உருவாக்குவதும், பிரச்சனைகளை இழுத்துக் கொண்டுவருவதும், குழப்பங்களின் குட்டையை கிளறுவதும், மனக்கசப்புகளின் குப்பைகளை நோண்டுவதும், வாக்குவாதத்தின் தீயை மூட்டுவதும் ஷைத்தானுக்கும் நஃப்ஸூக்கும் கைவந்த கலையாகும்.

அந்த இருவரும் வேடன்களைப் போல. நாம் வேட்டைகளைப் போல. நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.

வேட்டைக்காரன் தந்திரக்காரனாக இருப்பான். வேட்டைக்காரன் சாமர்த்தியவானாக இருப்பான். வேட்டைக்காரன் சூழ்ச்சிக்காரனாக இருப்பான். அவன் பல விதமான வலைகளை உடையவனாக இருப்பான். வில், அம்பு, துப்பாக்கி போன்ற பல ஆயுதங்களை நம்மை தாக்குவதற்காக வைத்திருப்பான். நம்மை சுண்டி இழுக்க நமக்கு தீனி போடுவான். இரையை வீசுவான். எது நமக்கு பிடிக்கும், எது நமக்கு பிடிக்காது என்பது அவனுக்கு தெரியும். எந்த உணவை வீசினால் நாம் மயங்கி அதை தேடி வருவோம் என்பதெல்லாம் வேட்டைக்காரனுக்கு நன்கு தெரியும்.

குடும்பத்தை சிதைக்க, கணவன் மனைவியை பிரிக்க, நிம்மதியை குலைக்க, குடும்ப அமைதியை கெடுக்க பல வழிகளில்

ஷைத்தான் முயற்சி செய்வான். அந்த வழிகளில் ஒன்றுதான் இந்த நீயா நானா என்று போட்டி போடுதலும், இது எனது விருப்பம், இது எனது உரிமை என்று அடம்பிடித்தலும் ஆகும்.

எல்லாவற்றுக்கும் மார்க்கம் ஒரு தெளிவை நமக்கு கொடுத்திருக்கிறது. நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது எது, எதை நாம் கண்டும் காணாமல் இருக்க வேண்டும், எதற்கு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும், எதை எந்தளவுக்கு வலியுறுத்த வேண்டும், எதற்கு எந்தளவு பிரயாசை எடுக்க வேண்டும், எந்த காரியத்தை முதலில் கவனத்தில் வைக்க வேண்டும், எதை மறந்தால் பிரச்சனை இல்லை, எதை மறக்கக்கூடாது, எதில் கணவனுக்கு கண்டிப்பாக கட்டுப்பட வேண்டும், எதில் மன்னிப்பு உண்டு, மனைவியின் விருப்பங்கள் எந்தளவிற்குவரை நிறைவேற்றப்பட வேண்டும், யார், யாருக்கு அதிகமாகவோ முதலிலோ விட்டுக்கொடுக்க வேண்டும், வாழ்க்கையில் கணவனின் பங்களிப்பு என்ன, மனைவியின் பங்களிப்பு என்ன, அல்லாஹ்வின் கடமைகள் என்ன, அடியார்களின் கடமைகள் என்ன, நன்மையான காரியங்கள் என்ன, பாவமான காரியங்கள் என்ன, இப்படியாக பல வரைமுறைகளை மார்க்கம் நபி ﷺ அவர்களுடைய வாழ்க்கை வழிகாட்டல் மூலமாக நமக்கு தெளிவுபடுத்தி இருக்கிறது.

மார்க்கத்தின் வழிகாட்டல்களில் ஒரு வழிகாட்டலை நாம் புறக்கணித்தாலும், இஸ்லாம் கூறி இருக்கிற நற்குணங்களில் ஒரு நற்குணத்தை நாம் கடைப்பிடிக்காமல் விட்டுவிட்டாலும், குர்ஆன் கூறுகிற சட்ட வரம்புகளில் ஒன்றை நாம் மீறி நடந்தாலும், நபி ﷺ அவர்களின் ஸுன்னாக்களில் ஒன்றுக்கு நாம் மாற்றம் செய்தாலும் கண்டிப்பாக குழப்பமும் பிரச்சனையும் உருவாகும். இதை நாம் மறந்து விடக்கூடாது.

நம் மூலமாக நடக்கிற தவறுகளுக்கு உடனுக்குடன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டுக்கொண்டே இருக்க

வேண்டும். அதை திருத்திக் கொள்ள வேண்டும். அதிலிருந்து மீண்டு நேரான வழிக்கு வந்து விட வேண்டும். அடியார்களின் உரிமைகளில் குறை செய்திருந்தால் அவர்களிடமும் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும்.

பிரச்சனைகளின்போது முதலில் மன்னிப்பவராக நான் இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

மனக்கசப்புகள் ஏற்படுகிறபோது முதன்முதலாக நான் சமரசமாகிவிட தயாராக இருக்கிறேன் என்று ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

வாக்குவாதங்கள் முற்றும்போது போட்டி போட நான் தயாரில்லை, நான் என் கருத்தை திரும்ப பெற்றுக்கொள்கிறேன், நான் அமைதி காக்கிறேன், நான் உன் கருத்தை ஏற்கிறேன் என்று உடனே இறங்கி வர ஒவ்வொருவரும் முந்திக்கொள்ள வேண்டும்.

ஈகோவிற்கும் போட்டி மனப்பான்மைக்கும் இடம் கொடுத்து ஷைத்தானை மகிழ்விப்பதை தவிர்க்க வேண்டும். மன்னிப்பும் விட்டுக்கொடுத்தலும் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் பிடித்தமானவை என்பதை மறந்து விடக்கூடாது. நபி ﷺ அவர்கள் ஹுதைபிய்யா ஒப்பந்தத்தில் எத்தனை உரிமைகளை விட்டுக்கொடுத்தார்கள். எவ்வளவு கீழே இறங்கி வந்தார்கள். முஸ்லிம்களுக்கு நிம்மதி, அமைதி கிடைக்க வேண்டும் என்பதற்காக தமது உம்ரா உடைய இஹ்ராமை கூட உம்ராவை நிறைவேற்றாமல் முடித்துக்கொள்ள முடிவெடுத்தார்கள். அப்படியே செய்தார்கள். தங்கள் தோழர்களுக்கும் அவர்களும் அப்படியே செய்யவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்கள்.[68]

சமாதானமாக, சுமூகமாக செல்வதுதான் அல்லாஹ்விடம் மிக சிறந்தது, வாழ்க்கைக்கு மிக உகந்தது என்று குர்ஆன் கூறுகிறது.

68. அறிவிப்பாளர்: அல்மிஸ்வர் இப்னு மஹ்ரமா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 2731.

மன்னிப்பதும் விட்டுக்கொடுப்பதும் தக்வா - இறையச்சத்திற்கு மிக நெருக்கமானது என்று குர்ஆன் வழிகாட்டுகிறது.

ஆண், கூடுதல் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அல்குர்ஆன் அறிவுரை கூறுகிறது.[69]

பிரச்சனை முத்திவிட்டால், இரு வீட்டார் வரை செய்தி சென்றுவிட்டால் இரு வீட்டாரின் நடுவர்களும் கணவன் மனைவி இருவருக்கும் இடையில் சமாதானம் செய்து சேர்த்து வைப்பதுதான் ரொம்ப நல்லது என்று அல்லாஹ் வழிகாட்டுகிறான். பிரிவது என்பது சேர்த்து வைப்பது அறவே முடியாத கட்டத்தில் செய்யப்படுகிற அறுவை சிகிச்சையைப் போல. அதை முதன்மை படுத்தக் கூடாது.

இவ்வுலக வாழ்க்கையை இன்பமாக கழிக்க வேண்டுமென்றால் இணங்கி, இணைந்து, இசைந்து போக கற்றுக்கொள்ள வேண்டும். முரண்டு பிடித்தாலோ, முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலோ, பிடிவாதம் காட்டினாலோ, நீயா நானா என்று போட்டி போட்டாலோ, நீ முதலில் விட்டுக்கொடு, இல்லை, நீ முதலில் விட்டுக்கொடு, அல்லது, நீ முதலில் இறங்கி வா, இல்லை, நீ முதலில் இறங்கி வா என்று ஒவ்வொருவரும் திமிரு பிடித்தாலோ, ஈகோவிற்கு அடிமையாகி விட்டாலோ பலமாக இழுக்கப்படுகிற கயிறோ ரப்பரோ ஒரு கட்டத்தில் பிய்ந்துதான் போகும் என்பதை போன்றுதான் உறவுகளும் முறிந்துவிடும் என்பது எதார்த்த உண்மையாகும்.

வாழ்க்கையை புரியவேண்டும், உணர்வுகளை மதிக்க வேண்டும். அன்புகளையும் அன்பளிப்புகளையும் பரிமாறிக்கொள்ள வேண்டும். நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். மனைவியின் சின்ன சின்ன சிணுங்கல்களை, கணவனின் அவ்வப்போது வந்துபோகும் கோபதாபங்களை மனதில் வைக்கக் கூடாது. மனதுக்குள் கோபத்தை மறைத்து

69. அல்குர்ஆன் 2 : 237.

வைப்பது வெடிபொருளுக்கு அருகில் நெருப்பை மறைத்து வைப்பது போலாகும்.

`முஃமின்கள் கோபப்படும்போது மன்னித்து விடுவார்கள் என்று குர்ஆன் நமக்கு போதிக்கிறது. நீங்கள் பொறுமையாக இருப்பதும் பொறுத்துக் கொள்வதும் மிக சிறந்தது என்றும் பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கிறான் என்றும் குர்ஆன் நற்செய்தி கூறுகிறது.[70]

ஆகவே, நாம் நமது நபி ﷺ அவர்களையும் நமது சான்றோரையும் பின்பற்றி அன்போடு வாழ கற்றுக்கொள்ள வேண்டும். அன்போடு வாழ என்னென்ன தியாகங்களை செய்ய வேண்டுமோ அவற்றை நாம் செய்தாக வேண்டும். எந்தளவு விட்டுக்கொடுக்க முடியுமோ அந்தளவு நாம் விட்டுக்கொடுக்க வேண்டும்.

நாமாக ஒரு காரியத்தை முடிவெடுத்து, அதில் பிடிவாதம் பிடிக்காமல் நல்லோர், மற்றும் நன்மையை விரும்புகிறவர்களோடு ஆலோசனை செய்து அவர்களின் நல்ல அபிப்ராயத்தை செவிகொடுத்து ஏற்று நடக்க வேண்டும்.

நபி ﷺ அவர்களுக்கு, நீங்கள் உங்கள் தோழர்களுடன் ஆலோசனை செய்து முடிவெடுங்கள் என்று அல்லாஹ் கட்டளையிட்டிருக்க நாம் எந்தளவு ஆலோசனைக்கு தேவை உள்ளவர்கள் என்பதை நாம் புரிய வேண்டும்.[71]

என் அன்பு சகோதர சகோதரிகளே! அன்போடு பாசத்தோடு வாழ பழகிக் கொள்ளுங்கள். ஈகோ என்ற விஷச்செடியை உங்கள் குடும்பத்தில் வளர விடாதீர்கள். நீயா, நானா பார்த்துவிடுவோம் என்று போட்டிபோடுவதற்கு வாழ்க்கை ஒன்றும் மல்யுத்த மைதானமல்ல.

70. அல்குர்ஆன் 2 : 153, 4 : 25, 42 : 37.

71. அல்குர்ஆன் 3 : 159.

ஒருவர் மற்றவரை முடிந்தளவு புரிந்து வாழுங்கள்!

உங்கள் வாழ்க்கை துணைக்கு விட்டுக்கொடுத்து வாழுங்கள்!

**"எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!"**[72]

ஆமின்

***

72. அல்குர்ஆன் 25 : 74.

# வாழ்க்கையை அனுபவியுங்கள்! சடைந்து விடாதீர்கள்!

என் அன்பான சகோதர சகோதரிகளே! அல்லாஹு தஆலா இந்த உலக வாழ்க்கையை நாம் நல்ல முறையில் வாழவேண்டுமென விரும்புகிறான். அல்லாஹ் அனுமதித்த ஹலாலானவற்றை நாம் அனுபவிக்க வேண்டுமென்று அல்லாஹ் விரும்புகிறான்.

அல்லாஹு தஆலா அல்குர்ஆனில் இப்படி கேட்கிறான்:

(நபியே!) கூறுவீராக: "அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்திய அலங்காரத்தையும், உணவில் நல்லவற்றையும் யார் தடைசெய்தார்?" "அது இவ்வுலக வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு (ஆகுமானது) ஆகும். மறுமை நாளில் (அவர்களுக்கு மட்டும் அது) பிரத்தியேகமாக இருக்கும்" என்று கூறுவீராக. புரிந்து கொள்கிற மக்களுக்கு வசனங்களை இவ்வாறு விவரிக்கிறோம்.[73]

நமக்காகவே இந்த உலகத்தில் பல அழகிய அருட்கொடைகளை அவன் படைத்திருக்கிறான். பல நல்ல உணவுகளை உருவாக்கி இருக்கிறான். நல்ல ஆடைகளை அவன் படைத்திருக்கிறான். இந்த பூமியில் உள்ள எண்ணற்ற அருட்கொடைகளை நாம் அவற்றை அனுபவித்து அவனுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று அவன் விரும்புகிறான்.

73. அல்குர்ஆன் 7 : 32.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

மக்களே! பூமியிலுள்ளவற்றில் அனுமதிக்கப்பட்ட நல்லதையே உண்ணுங்கள். இன்னும், ஷைத்தானின் அடிச்சுவடுகளை (-அவன் உங்களை அழைக்கும் அவனது பாதைகளை)ப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான எதிரி ஆவான்.[74]

நம்பிக்கையாளர்களே! நாம் உங்களுக்கு வழங்கிய நல்லவற்றில் இருந்து உண்ணுங்கள்! இன்னும், அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள், அவனையே (நீங்கள்) வணங்குபவர்களாக இருந்தால்.[75]

அவன்தான் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான்.[76]

மேலும், அல்லாஹ்வின் அருளை நீங்கள் எண்ணினால் அதை நீங்கள் எண்ணி முடிக்க மாட்டீர்கள். நிச்சயமாக அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன்.[77]

அல்குர்ஆனின் பல நூறு வசனங்களில் அல்லாஹு தஆலா நமக்கு புரிந்த அருள்களை பெருமையோடு நமக்கு சொல்லிக் காட்டுகிறான். நாம் அவற்றை அனுபவித்து அவனுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று அவன் விரும்புகிறான். நன்றி செலுத்தினால் அவனது அருளை அவன் நமக்கு அதிகப்படுத்தி கொடுப்பான் என்று நமக்கு வாக்கும் அளிக்கிறான்.

மேலும், “நீங்கள் நன்றி செலுத்தினால் நிச்சயமாக (என் அருளை) உங்களுக்கு அதிகப்படுத்துவேன்; இன்னும், நீங்கள் நிராகரித்தால் நிச்சயமாக என் தண்டனை (உங்களுக்கு) கடுமையானதாக இருக்கும்” என்று உங்கள் இறைவன்

74. அல்குர்ஆன் 2 : 168.
75. அல்குர்ஆன் 2 : 172.
76. அல்குர்ஆன் 2 : 29.
77. அல்குர்ஆன் 16 : 18.

அறிவித்த சமயத்தை நினைவு கூருங்கள்![78]

உலகத்தில் நாம் பேராசைப்படக் கூடாது, உலக மோகம் பிடித்து அலையக் கூடாது. செல்வமோ, பதவியோ, வேறு எதுவாக இருந்தாலும் அதை விரும்பலாம் தப்பில்லை. ஆனால், அதை வெறியாக, பேராசையாக தலையில் ஏற்றிக் கொள்ளக் கூடாது. பெண்களை நமக்கு அலங்கரித்துள்ளான், அவர்களை நாம் திருமணம் செய்து வாரிசுகளை தேடிக்கொள்வதற்காக.

தங்கம், வெள்ளி, கால்நடைகள், விவசாய நிலங்கள், இப்படி பல உலக வஸ்த்துக்களை நாம் உரிமையாக்கி இன்புறுவதற்காகவும் மகிழ்ச்சியடைவதற்காகவும் அல்லாஹ் படைத்துள்ளான்.

பெண்கள், ஆண் பிள்ளைகள், தங்கம், வெள்ளியின் குவிக்கப்பட்ட (பெரும்) குவியல்கள், அடையாளமிடப்பட்ட (உயர் ரக அழகிய) குதிரைகள், கால்நடைகள், விளைநிலம் ஆகிய ஆசைகளின் விருப்பம் மக்களுக்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவை (அனைத்தும் அற்ப) உலக வாழ்க்கையின் (சொற்ப) இன்பமாகும்! அல்லாஹ் - அவனிடம்தான் (நிலையான) அழகிய தங்குமிடமுண்டு.[79]

மேலும், கால்நடைகள் - அவற்றை உங்களுக்காகப் படைத்தான். அவற்றில் உங்களுக்கு (குளிருக்கும் வெப்பத்திற்கும் இதமான) ஆடையும் இன்னும், பல பலன்களும் உள்ளன. இன்னும், அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கிறீர்கள். இன்னும், நீங்கள் அவற்றை மாலையில் (இருப்பிடங்களுக்கு) ஓட்டி வரும் நேரத்திலும் (காலையில்) மேய்க்க ஓட்டிச் செல்லும் நேரத்திலும் அவற்றில் உங்களுக்கு அழகு(ம் மகிழ்ச்சியும்) இருக்கிறது.[80]

நாம் நமது உள்ளத்தை உலகத்தில் பறிகொடுத்து விடக் கூடாது. உலகமே கதி என்று அதில் மயங்கி மனதை பறிக்கொடுத்து,

78. அல்குர்ஆன் 14 : 7.
79. அல்குர்ஆன் 3 : 14.
80. அல்குர்ஆன் 16 : 5,6.

வணக்க வழிபாடுகளை மறந்து விடக்கூடாது. அதைத்தான் அல்லாஹ் நமக்கு தடை செய்கிறான்.

(இறை இல்லங்களில் தொழுகின்ற) ஆண்கள் - வர்த்தகமோ விற்பனையோ அல்லாஹ்வின் நினைவை விட்டும் தொழுகையை நிலை நிறுத்துவதை விட்டும் ஸகாத் கொடுப்பதை விட்டும் (இன்னும் வணக்க வழிபாடுகளை அல்லாஹ்விற்கு மட்டும் தூய்மையாக செய்வதை விட்டும்) அவர்களை திசை திருப்பி விடாது. அவர்கள் ஒரு நாளை பயப்படுவார்கள். அதில் (-அந்நாளில்) உள்ளங்களும் பார்வைகளும் தடுமாறும். (அவர்கள் அப்படி அமல் செய்தது ஏனெனில்,) அவர்கள் செய்த மிக அழகிய நன்மைகளுக்கு அல்லாஹ் கூலி வழங்குவதற்காகவும் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மேலும் அதிகப்படுத்துவதற்காகவும் ஆகும். அல்லாஹ் தான் நாடியவருக்கு கணக்கின்றி வழங்குகிறான்.[81]

உலக மோகத்தில் மூழ்கி அல்லாஹ்வை மறப்பதுதான் கூடாது. செல்வத்தை சம்பாதிப்பதில் ஈடுபட்டு வணக்க வழிபாடுகளை விடுவது அல்லது அதில் அலட்சியம் செய்வது, அதை மறந்திருப்பது, இவைதான் கூடாது.

நமது மார்க்கத்தில் துறவரம் அறவே இல்லை. வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகிறேன் என்று குடும்பத்தை விட்டு விலகுவதோ, அல்லது திருமண வாழ்க்கை வேண்டாமென்று ஒதுங்குவதோ, தாம்பத்தியத்தை வெறுத்து, அது வேண்டாம் என்று புறக்கணித்துவிட்டு நான் வணக்க வழிபாட்டில் ஈடுபட போகிறேன் என்று கூறுவதோ நமது மார்க்கத்தில் கிஞ்சிற்றும் அனுமதி இல்லை.

இது குறித்து பல வசனங்களும் பல நபிமொழிகளும் வந்துள்ளன.

உஸ்மான் இப்னு மள்வூனுக்கு நபி ﷺ அவர்கள் தபத்துலை மறுத்தார்கள். அவருக்கு நபியவர்கள் அதற்கு அனுமதி

81. அல்குர்ஆன் 24 : 37,38.

கொடுத்திருந்தால் நாங்கள் ஆண்மை நீக்கம் செய்திருப்போம்.[82]

“தபத்துல்” என்றால் திருமணம் முடிக்காமல் வணக்க வழிபாட்டுக்காக ஒதுங்கிவிடுவது.

மூன்று நபர்கள் நபி ﷺ அவர்களின் மனைவிமார்களிடம் நபியவர்களின் வணக்கவழிபாட்டை விசாரிக்க வந்தார்கள். அவர்களுக்கு சொல்லப்பட்ட வணக்க வழிபாடுகளை மிக குறைவாக அவர்கள் கருதினார்கள். நபி ﷺ அவர்களிருந்து நாங்கள் எங்கே? அவர்களுக்கோ அவர்களின் முந்திய பிந்திய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டன என்று கூறினார்கள். அவர்களில் ஒருவர் கூறினார்: நான் இனிமேல் எப்போதும் இரவில் தொழுதுகொண்டே இருப்பேன். மற்றொருவர் கூறினார்: நான் காலமெல்லாம் நோன்பு வைப்பேன், நோன்பை விட மாட்டேன். இன்னொருவர் கூறினார்: நான் பெண்களை விட்டு விலகியே இருப்பேன். ஒருபோதும் திருமணம் முடிக்க மாட்டேன். ஆக, அவர்களிடம் ரஸூலுல்லாஹ் ﷺ வந்தார்கள். நீங்கள்தான் இப்படி இப்படி கூறினீர்களா? என்று கேட்டார்கள். அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் உங்களில் அல்லாஹ்வை அதிகம் பயப்படுகிறேன். உங்களில் அதிகம் அல்லாஹ்வை அஞ்சுகிறேன். என்றாலும் நான் நோன்பு வைக்கிறேன். நோன்பை விடவும் செய்கிறேன். தொழுகிறேன். தூங்குகிறேன். திருமணம் முடிக்கிறேன். ஆக, யார் என் வழிமுறையை விட்டு விலகுவாரோ அவர் என்னை சேர்ந்தவர் இல்லை.[83]

ரஸூலுல்லாஹ்வே! ஆண்மை நீக்கம் செய்ய எனக்கு அனுமதி கொடுங்கள் என்று உஸ்மான் இப்னு மள்ஊன் رضي الله عنه கூறினார். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: துறவறத்திற்கு பதிலாக

82. அறிவிப்பாளர்: ஸஃத் இப்னு அபீ வக்காஸ் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5073.

83. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5063.

இணைவைத்தல் இல்லாத, இலகுவான மார்க்கத்தை அல்லாஹ் நமக்கு கொடுத்திருக்கிறான்.[84]

நாங்கள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடன் போருக்கு செல்வோம். எங்களுக்கு எதுவும் சொந்தமாக இருக்கவில்லை. ஆகவே, நாங்கள் கேட்டோம், நாங்கள் ஆண்மை நீக்கம் செய்துகொள்ளட்டுமா? ஆக, நபியவர்கள் எங்களை அதிலிருந்து தடுத்தார்கள்.[85]

இன்னும் இதுபோன்ற பல வசனங்களும் நபிமொழிகளும் உள்ளன. நமது மார்க்கம் நடுநிலையானது. அதில் முரண்பாடுகள் இருக்காது, அதில் எல்லை மீறுதல் இருக்காது, அதில் இயற்கைக்கு மாற்றமான, இயற்கைக்கு ஒத்துவராத, இயற்கையோடு முரண்படுகிற எந்த சட்டமும் இருக்காது. அல்லாஹ்தான் இயற்கையை படைத்தான். அவன் அனைத்தையும் நன்கறிந்தவன். அவன் அனுப்பிய தூதர்களை இயற்கை விதிகளுக்கு ஏற்ப மனிதன் வாழவேண்டிய ஒழுக்கங்களையும் வழிமுறைகளையும் கற்பித்து தர அனுப்பினான். இந்த உலக வாழ்க்கைக்கு பின்னர் இருக்கிற மறுமை வாழ்க்கையை நினைவில் வைத்து, அங்கு சொர்க்கத்திற்காக இங்கு நல்லமல்களை அதிகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தையும் இலட்சியத்தையும் மறந்துவிடாமல், அதே நேரத்தில் உலக இன்பங்களில் ஹலால் - ஆகுமானது, ஹராம் - கூடாதது என்று இரு வகைகளை பிரித்து, ஹலாலை எப்படி அனுபவித்து, இந்த உலக வாழ்க்கையை இன்பமாக மகிழ்ச்சியாக வாழ்வது என்ற கல்வியை நபிமார்கள் போதித்து சென்றார்கள்.

நமக்கு இறுதி தூதராக அனுப்பப்பட்ட முஹம்மத் ﷺ அவர்கள் நமக்கு சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். அவர்கள் ஓர்

---

84. அறிவிப்பாளர்: ஸயீத் இப்னு அல்ஆஸ் ﵁, நூல்: முஃஜம் கபீர் - தப்ரானி எண்: 5519.

85. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5075.

ஆன்மீகவாதி மட்டுமல்ல. உண்மையான ஆன்மீகவாதி குடும்ப வாழ்க்கையை வாழ்கிறவர்தான் என்பதை நிரூபித்தார்கள். இரவெல்லாம் வணங்கினாலும் மனைவியை மறக்கவில்லை, அவளுக்கு கொடுக்க வேண்டிய சுகத்தை கொடுக்க மறக்கவில்லை. அவளோடு பேசுவதை, சிரித்து விளையாடுவதை மறக்கவில்லை. வரட்டு ஆன்மீகம் பேசி, பக்தியின் போலி வேஷம் போட்டுக்கொண்டு ஊரை ஏமாற்றவில்லை. சிறந்த கணவனாக, சிறந்த தந்தையாக, சிறந்த உறவினராக, சிறந்த அண்டை வீட்டாராக, சிறந்த நண்பராக வாழ்ந்து காட்டினார்கள்.

தத்துவங்களை சொல்வதும் எழுதுவதும் எளிது. அதை நடத்திக் காட்ட வேண்டும். பின்பற்றி வாழ்க்கையில் செயல்படுத்தி காட்ட வேண்டும்.

வாழ்க்கையின் ஒப்பற்ற நிகரற்ற தத்துவங்களை சொன்னது மட்டுமல்ல, செய்து காட்டினார்கள் நமது நபி ﷺ அவர்கள்.

நமது கட்டுரையின் இறுதி பகுதி என்பதால் பல செய்திகளை குறிப்புகளாக கூறி இதை நிறைவு செய்ய ஆசைப்படுகிறோம். அல்லாஹ் அருள் புரினாவாக! ஆமீன்.

1. நீங்கள் உங்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

2. உங்கள் உடலை அழகாக வசீகரமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துங்கள்.

3. நல்ல ஆடைகளை, சுத்தமான ஆடைகளை, நடுத்தரமான நல்ல ஆடைகளை அணிந்து மகிழுங்கள்.

4. ஆண்கள் வெளியில் வீசும்படியான மனைவிக்கு பிடித்த நல்ல நறுமணத்தை பயன்படுத்துங்கள். உங்களை எப்போதும் மணம் கமழும்படி வைத்துக் கொள்ளுங்கள்!

5. பெண்கள் உங்கள் நறுமணத்தை வீட்டுக்குள் கணவனுக்காக பூசிக் கொள்ளுங்கள்.

6. வெளியில் செல்லும்போது நறுமணம் வீசாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

7. ஆண்கள், எப்போதும் வேலை, வியாபாரம், தொழில், வெளி தொடர்பு என அவற்றிலேயே மூழ்கி குடும்பத்தை மறந்து விடாதீர்கள்.

8. எல்லாவற்றுக்கும் நேரத்தை காலத்தை குறித்துக் கொள்ளுங்கள். வேலைக்கும் வாழ்வாதாரத்திற்கும் தேவையான நேரத்தை சரியாக கொடுங்கள். அதே நேரத்தில் உங்கள் மனைவிக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய நேரத்தை தவறவிட்டு விடாதீர்கள். அவள் உங்களை நம்பிவந்த, நீங்கள்தான் அவளுக்கு ஆதரவும் பாதுகாப்பும் என்று அண்டிவந்த ஓர் உயிர் என்பதை மறந்து விடாதீர்கள்.

9. குடும்ப வேலை, சமையல் வேலை, வீட்டை கவனித்தல் என பல சுமைகள் பெண்களுக்கு இருந்தாலும் தன்னை அலங்கரித்து சுத்தமாக அழகாக நறுமணமாக வைத்துக்கொள்ள வேண்டும். கணவன் பார்க்கும்போது கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கும்படி தன்னை பார்த்துக்கொள்ள வேண்டும்.

10. அப்படித்தான் ஆணும் மார்க்க எல்லைக்கு உட்பட்டு தனது ஆடை விஷயத்தில் தனது மனைவிக்கு பிடித்தமான ஆடையை தேர்ந்தெடுத்து அணிய வேண்டும். இருவரில் ஒவ்வொருவரும் ஹலாலான வழிகளில் மற்றவரை கவர்வதில் ஆர்வமும் கவனமும் செலுத்த வேண்டும்.

11. இருவரும் ஒன்றாக வணக்க வழிபாடுகள் செய்ய வேண்டும். குர்ஆன் ஓதுவது, திக்ரு செய்வது, மார்க்க நூல்கள் படிப்பது, மார்க்க கல்வி வகுப்புகளுக்கு செல்வது, தஃவா பயணங்கள் செல்வது, ஹஜ், உம்ரா பயணங்கள் செல்வது, உறவுகளை சந்திக்க செல்வது, நோயாளிகளை நலம் விசாரிக்க செல்வது, இப்படி நன்மைகளில் ஒன்றாக கூட்டாக பங்கெடுத்து கொள்ள வேண்டும்.

12. இவைபோக, அல்லாஹ் வாழ்வாதாரத்தில் வசதி கொடுத்து இருந்தால், மார்க்க எல்லைகளை அனுசரித்தவாறு, பொதுவான, பாதுகாப்பான, மார்க்கத்திற்கு முரணில்லாத சுற்றுலா தலங்களுக்கு இருவரும் ஒன்றாக பயணம் செய்து வரலாம். ஆனால், அதற்காக மிக ஆடம்பரமாக செலவுகள் செய்வதோ, வீண்விரயம் செய்வதோ, பெருமைக்காக செல்வதோ கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டிய காரியமாகும்.

13. உங்கள் மனைவியிடம் அன்பாக பேச பழகிக் கொள்ளுங்கள். உங்கள் அக்கறையை வெளிப்படுத்த மறந்து விடாதீர்கள். உங்கள் பாசத்தை காட்ட தயங்காதீர்கள். அவளோடு நெருக்கத்தை குறைத்து விடாதீர்கள். வெளியில் சென்றால், காலை, மாலை, மதியம், இரவு என பல நேரங்களில் அவளுக்கு போன் செய்து அவளை நலம் விசாரியுங்கள். அவளது உடல் நிலையைப் பற்றி தொடர்ந்து கவனமாக இருங்கள். அவளை பசியாக பட்டினியாக பங்கறையாக வைத்திருக்காதீரகள், மனைவிக்கு தேவையான ஓய்வை, அமைதியை கொடுத்து விடுங்கள். அவளை ஒரு மிஷின் மாதிரி 24 மணி நேரமும் வேலை வாங்காதீர்கள். அவளின் உடல்வாகு, உடல் ஆரோக்கியம், உடல் வலிமை என பல விஷயங்களை கவனத்தில் வைத்து அவளிடமிருந்து உங்களுக்கான பணிவிடையை எதிர்பாருங்கள்.

14. மனைவியும் தனது கணவனோடு அன்னியோன்னியமாக இருக்க வேண்டும். சிரித்து பேசி, அன்பாக உபசரித்து, கணவனின் மனம் நோகாமல் நடந்து கொள்ள வேண்டும். கணவனை விட்டுக்கொடுக்க கூடாது. கணவனாகிறவன், படிப்பு, கல்வி தகுதி, உடல் அழகு, பொருளாதாரம், குடும்ப கௌரவம் என பலவற்றில் தன்னை விட குறைந்திருந்தாலும் அவனுடைய கணவன் என்ற தகுதியே போதுமானது, மனைவி அவனுக்கு எல்லா விதமான பணிவிடைகளைச் செய்வதற்கும் பணிவாக நடப்பதற்கும். ஆனால், இதை பல பெண்கள் புரிந்து கொள்ளவில்லை.

15. இருவரும் தங்களுக்கு இடையில் வருகிற மனக்கசப்புகளை நீண்ட நேரம் நீடிக்க விட்டுவிடக் கூடாது.

16. ஒருவர் மற்றவரை குறைத்து பேசுவதையும், குத்திப் பேசுவதையும், ஒருவர் மற்றவர் மீது வீண் பழி சுமத்துவதையும், ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் காரணம் கேட்பதோ, தப்பான அர்த்தத்தை கொடுப்பதோ கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்.

17. இருவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்த நேரம் ஒதுக்க வேண்டும். அப்போது ஒருவர் மற்றவருக்கு உணவூட்டி விட வேண்டும். முடிந்தால் இருவரும் ஒரே தட்டில் உணவு உண்ணவேண்டும்.

18. பிறருக்கு முன்னால் அன்பாகவும் தனிமையில் வெறுப்பாகவும் இருப்பது நயவஞ்சகமாகும். உங்கள் அன்பையும் பாசத்தையும் நல்ல உறவுகளையும் வெளி மக்கள் பார்க்கும்படி பகட்டாக காட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் அன்பையும் பாசத்தையும் மறைத்து வையுங்கள்.

19. பிறர் பார்வைக்கு முன்னால் நெருக்கமாக பழகாதீர்கள். உங்கள் மனைவியை பிறருக்கு முன்னால் திட்டவும் செய்யாதீர்கள், இகழவும் செய்யாதீர்கள். அதுபோன்று புகழவும் செய்யாதீர்கள். அப்படித்தான் மனைவிமார்கள் தங்கள் கணவனையும் பிறர் முன்னால் புகழவும் செய்ய வேண்டாம், இகழவும் செய்ய வேண்டாம். உங்கள் வாழ்க்கை துணையை கண்டிப்பதாக இருந்தால் தனிமையில் கண்டியுங்கள். தனிமையில் குறைகளை எடுத்துச் சொல்லுங்கள்.

20. உங்கள் அன்பையும், பாசத்தையும், குடும்ப நெருக்கத்தையும், நல்ல குணத்தையும் நடிப்பாக ஆக்கி விடாதீர்கள். காட்சி பொருளாக ஆக்கி விடாதீர்கள்.

21. வாழ்க்கையில் அவ்வப்போது நிகழ்கிற பிரச்சனைகளை பெரிது படுத்தாதீர்கள்.

22. ஆண் தன் மனைவியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றால், அவன் தன் மகளிடம் அவளின் கணவன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புவானோ அப்படி தனது மனைவியோடு நடந்து கொள்ளட்டும். அதுபோன்று பெண் தனது கணவனோடு எப்படி நடக்க வேண்டுமென்றால், தனது மகனோடு அவனின் மனைவி எப்படி நடக்க வேண்டுமென்று அவள் விரும்புவாளோ அப்படி தனது கணவனோடு அவள் நடந்து கொள்ளட்டும்.

23. கணவன் மனைவியை கை நீட்டி அடிப்பதோ, அல்லது பிற பொருள்கள் மூலம் அடிப்பதோ அறவே கூடாது. ஒரு சின்ன மிஸ்வாக் குச்சியை கொண்டு மட்டும் அடிக்கலாம். அதுவும் காயம் ஏற்படக் கூடாது, தழும்புகள் வரக் கூடாது, உள் காயம் ஏற்படக் கூடாது.

24. மனைவி, தனது கணவனை ஒருபோதும் அடிக்கவே கூடாது. அவனை அவமரியாதை செய்து பேசக் கூடாது. கண்ணியக் குறைவான சொற்களைக் கொண்டு அழைக்கக் கூடாது.

25. கணவனின் வீட்டார், அல்லது மனைவியின் வீட்டார் வீட்டுக்கு வந்தால் இருவரும் அவர்களை மிக கண்ணியமாக உபசரித்து, மன மகிழ்வோடு அவர்களை தங்க வைத்து, நல்ல முறையில் உணவளித்து, முடிந்தளவு அன்பளிப்பு செய்து அவர்களை வழி அனுப்பி வைக்க வேண்டும். அவர்களுக்கு முன் சச்சரவு செய்வதோ, வாக்குவாதம் செய்வதோ கூடாது. இன்னும் வந்த விருந்தாளிகளை அவமானப்படுத்தும்படியான செயலை செய்வதோ, அவர்களால் நெருக்கடிக்கு உள்ளாகுவதோ கூடாது. எது உங்களிடம் இருக்குமோ அதில் நல்லதைக் கொண்டு, சிறந்ததைக் கொண்டு அவர்களை உபசரியுங்கள். அவர்களுக்காக உங்களை கடனாளிகளாகவும் ஆக்கத் தேவை இல்லை.

26. எல்லா காரியங்களிலும் நடுநிலையைக் கையாளுங்கள். கருமியாகவும் இருக்காதீர்கள். ஊதாரியாகவும் இருக்காதீர்கள்.

27. பெருநாள் போன்ற சிறப்பான நாள்களில் உறவுகளை சந்திக்க தவறாதீர்கள். ரமழான் மாதத்தில் உறவுகளுக்கு உதவ மறக்காதீர்கள்.

28. கணவன், தனது மனைவியின் குடும்பத்தில் உள்ள ஏழைகளுக்கு உதவுவது, மனைவியின் மனதை குளிர வைப்பதும் அவளை மகிழ்விப்பதும் ஆகும். அவ்வாறே, கணவன் தனது குடும்பத்தில் உள்ள ஏழைகளுக்கு உதவும்போது அவனை தடுப்பதோ, அவனை குறை சொல்வதோ, அவனை பழிப்பதோ மனைவிக்கு அறவே கூடாது.

29. ஒருவர், மற்றவர் செய்கிற நன்மையில் துணை நிற்க வேண்டும், அவரை ஊக்குவிக்க வேண்டும், ஆர்வமூட்ட வேண்டும். நன்மையில் யாரும் யாரையும் பழிக்கக் கூடாது.

30. பாவமான காரியங்களில் ஒருவர் மற்றவருக்கு துணை நிற்கக் கூடாது. நன்மையில் உதவி ஒத்தாசை செய்யவேண்டுமே தவிர, பாவமான அநியாயமான காரியங்களில் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யக் கூடாது.

31. பிள்ளைகளை வளர்ப்பதில் இருவரும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் அல்லாஹ் தமக்கு கொடுத்த அமானிதம் என்று உணர வேண்டும்.

32. பிள்ளைகளை கண்டிப்பதில், ஒழுக்கம் சொல்லித் தருவதில், அவர்களை திருத்துவதில் இருவருக்கும் சமமான பொறுப்பும் கடமையும் உண்டு.

33. இருவரும் இது குறித்து கலந்தாலோசித்து செயல்பட வேண்டும். ஒருவர் கண்டிக்கும்போது மற்றவர் குறுக்கிட்டு, பிள்ளைகளுக்கு ஆதரவாக பேசுவது கூடாது.

34. பிள்ளைகளை கண்டிக்கிறோம் என்ற பெயரில் அவர்களை

திட்டுவதோ, ஏசுவதோ, காயம் உண்டாகும்படி அடிப்பதோ யாருக்கும் அனுமதி இல்லை.

35. பிள்ளைகளை கண்டிக்கும்போது அழகிய வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும். ஒரு குழந்தைக்கு முன்னால் இன்னொரு குழந்தையை மட்டம் தட்டுவதோ குறைத்து பேசுவதோ கூடாது.

36. பிள்ளைகளுக்கு மத்தியில் பாரபட்சம் காட்டுவதோ ஒருவரை விட ஒருவரை உயர்த்தி பேசுவதோ அறவே கூடாது. எல்லா பிள்ளைகளையும் சமமாக நீதமாக நடத்த வேண்டும்.

37. மனைவி தனது மாமனார் மாமியாருக்கு பணிவிடை செய்வதில் எவ்வித சங்கடத்தையும் உணரக் கூடாது. அவர்களின் சில கசப்பான அணுகுமுறைகளை சகித்துக் கொள்ள வேண்டும். தனது அன்பான மதி நுட்பமான அணுகுமுறைகளை கொண்டு அவ்விருவரின் உள்ளங்களை மனைவி கொள்ளைக் கொள்ள வேண்டும்.

38. அவர்களுக்கு முரட்டுத்தனமாக பதில் சொல்வதோ, அவர்களை எதிர்த்துப் பேசுவதோ, அவர்களிடம் போட்டிப் போடுவதோ, அவர்களிடம் சண்டை செய்வதோ அறவே கூடாது. அவர்களை அவமரியாதை செய்வதோ, அவர்களுக்கு உணவு சமைக்க மறுப்பதோ அல்லது உணவு பரிமாற மறுப்பதோ கூடாது. இது கணவனுக்கு கீழ்ப்படிய மறுப்பதுக்கு சமமான பாவமாகும்.

39. உங்கள் மனைவியிடம் அவளின் குடும்பத்தார் பற்றி குறை சொல்லாதீர்கள். அதுபோன்று உங்கள் கணவனின் குடும்பத்தார் பற்றி அவரிடம் குறை சொல்லாதீர்கள்.

40. நீங்கள் உங்கள் மனைவியின் வீட்டிலுள்ள மஹ்ரமல்லாத பெண்கள், உதாரணமாக உங்கள் மனைவியின் சகோதரிகள், அவளின் ஒன்றுவிட்ட சகோதரிகள், அவளின் சின்னம்மா பெரியம்மாக்கள், அவளின் மாமிகள் போன்றோரிடம் தனிமையில் பேசாதீர்கள், அந்த பெண்களிடம் பழகாதீர்கள்.

41. உங்கள் கணவனின் வீட்டில் அவரின் சகோதரர்கள், அவரின் ஒன்றுவிட்ட சகோதரர்கள் இன்னும் பிற ஆண்களிடம் தனிமையில் சந்திக்காதீர்கள், அவர்களிடம் பழகாதீர்கள்.

42. உங்கள் குடும்பத்தில் குழப்பங்களுக்கு வழிகளை ஏற்படுத்தாதீர்கள். திருமண நிகழ்வுகள், குடும்ப சந்திப்புகள் போன்றவற்றில் ஹிஜாபை பேணுங்கள்! ஆண்கள், பெண்களுக்கு என தனித்தனி அவைகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்! மேற்கத்தியர்களின் கலாச்சாரத்தை குடும்பத்தில் கொண்டுவந்து குடும்பத்தை நாசம் செய்து விடாதீர்கள்.

43. வேலைக்கு செல்கிற மனைவியாக நீங்கள் இருந்தால் நீங்கள் வேலை செய்கிற இடத்தில் ஹிஜாபை பேணுங்கள்! அந்நிய ஆண்களிடமிருந்து தூரத்தை கடைப்பிடியுங்கள். அவர்களுக்கு உங்கள் செல்போன் எண்ணை கொடுத்து, அவர்கள் உங்களிடம் பேசுவது, நீங்கள் அவர்களிடம் பேசுவது போன்ற தொடர்பை உண்டாக்காதீர்கள். நீங்கள் அவர்களின் வீட்டுக்கு செல்வது, அவர்கள் உங்கள் வீட்டுக்கு வருவது போன்ற நெருக்கத்தை உண்டாக்காதீர்கள்.

44. பணியிடத்தில் உணவு உண்ணும்போது கணவன், அந்நிய பெண்களுடன் உணவருந்துவவதும் மனைவி, அந்நிய ஆண்களுடன் உணவருந்துவதும் மார்க்கம் அனுமதிக்காத செயலாகும்.

45. ஒவ்வொரு நாளும் வீட்டில் குர்ஆன் ஓதுவதையும் கல்வி நூல்களை படிப்பதையும் ஒருபோதும் விட்டுவிடாதீர்கள்.

46. உங்கள் மஸ்ஜிதில், உங்கள் அருகிள் உள்ள இஸ்லாமிய கல்வி நிறுவனங்களில் நடைபெறும் மார்க்க நிகழ்ச்சிகளில் இருவரும் ஒன்று சேர்ந்து கலந்து கொள்ளுங்கள். பிறகு, இல்லம் திரும்பி நீங்கள் அங்கு என்ன நல்ல செய்திகளை செவியுற்றீர்கள் என்பதை உங்களுக்குள் பேசுங்கள்!

47. உங்கள் பிள்ளைகளையும் மார்க்க கல்வி நிறுவனங்களுக்கு

அழைத்து சென்று அங்கு நடக்கிற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள செய்யுங்கள்!

48. உங்கள் பிள்ளைகளுக்கு அல்லாஹ்வின் மீதும் நபி ﷺ அவர்கள் மீதும் அன்பையும் பாசத்தையும் ஏற்படுத்துங்கள்.

49. அதுபோன்று குர்ஆன், ஹதீஸ், மார்க்க கல்விகள் மீது உங்கள் பிள்ளைகளுக்கு மதிப்பையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்துங்கள்.

50. உங்களுக்கும், உங்களது பிள்ளைகளுக்கும், குடும்பத்தாருக்கும் மறுமையின் நினைவூட்டலை செய்து கொண்டே இருங்கள்! சொர்க்க நரகத்தைப் பற்றி அதிகம் பேசுங்கள்! மஹ்ஷர் மைதானத்தின் நிகழ்வுகள் பற்றி வந்துள்ள வசனங்கள், நபிமொழிகளை தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருங்கள்! வீடுகளில் நஃபில், ஸுன்னத் தொழுகைகளை உயிர்ப்பியுங்கள். அதிகம் திக்ரு, இஸ்திக்ஃபார் செய்யுங்கள். முடிந்தால் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் குறைந்தளவாவது தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது வாருங்கள்.

51. நல்ல மார்க்க அறிஞர்களோடு, கல்விமான்களோடு நல்ல நட்பை உருவாக்கிக் கொள்ளுங்கள்! அவர்களிடம் உங்கள் சந்தேகங்களுக்கும் குழப்பங்களுக்கும் தெளிவை பெற்று மார்க்க முறையில் தீர்வை தேடிக்கொள்ளுங்கள்!

52. உங்கள் பிள்ளைகளுக்கு நல்லது, கெட்டதை எப்படி பிரித்தறிவது என்பதை கற்றுக்கொடுங்கள்!

53. பிள்ளைகளுக்கு நல்ல நட்பை தேர்ந்தெடுப்பதின் அவசியத்தையும் கெட்ட நட்பின் பாதிப்பையும் புரிய வையுங்கள்.

54. முடிந்தளவு நல்ல மார்க்க கல்வியோடு உள்ள கல்வி நிறுவனத்தில் பிள்ளைகளை படிக்க வையுங்கள்.

55. பிள்ளைகளின் கல்விக்கு செலவளிக்க தயங்காதீர்கள்! வீண் செலவுகளை தவிர்த்துவிட்டு, ஆடம்பர சுற்றுலாக்களை நிறுத்திவிட்டு, அனாவசியமான, ஆடம்பரமான பொருட்களை

வாங்கி குவிப்பதை நிறுத்திவிட்டு பிள்ளைகளின் கல்விக்கு அந்த செல்வத்தை செலவழியுங்கள்!

56. பிள்ளைகளுக்கு நபிமார்கள், ஸஹாபாக்கள், தாபியீன்கள், மற்றும் சான்றோர் உடைய வரலாறுகளை சொல்லிக்கொண்டே இருங்கள். அது சம்பந்தமான நூல்களை வாங்கி கொடுத்து அவர்களை வாசிக்க வையுங்கள். வீடுகளில் ஒரு சிறிய நூலகத்தை அமைத்து வையுங்கள். அதில் நல்ல பயனுள்ள நூல்களின் தொகுப்புகள் இருக்க வேண்டும்.

57. நீங்களும் குர்ஆனை மனனம் செய்வதோடு உங்கள் பிள்ளைகளையும் குர்ஆனை மனனம் செய்பவர்களாக உருவாக்குங்கள். தினந்தோறும் அதை ஓதவையுங்கள், அதை ஓதி தொழும்படி பழக்கத்தை உண்டாக்குங்கள். பிள்ளைகளுக்கு சரியான தொழுகை முறையை கற்றுத்கொடுங்கள். அவர்களின் வயதுக்கு ஏற்ப நூல்களை தேர்வு செய்து அதை படிக்க செய்யுங்கள். அரபி மொழியை நீங்களும் அவர்களும் கற்க முயற்சி செய்யுங்கள்.

58. தர்மம், உண்மை பேசுதல், ஏழை எளியவர்களுக்கு உதவுதல், போன்ற நற்குணங்களை பிள்ளைகளுக்கு பழக்குங்கள்!

59. உங்கள் பிள்ளைகளுக்கு முன்னால் எந்த கெட்ட பழக்கத்தையும் செய்துவிடாதீர்கள். அது அவர்களை மிக விரைவில் கெடுத்து விடும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

60. பெண்கள் வீடுகளில் தொழுகையை உரிய நேரத்தில் நிலை நிறுத்துபவர்களாக இருக்க வேண்டும். தொழுகையில் அலட்சியம் நிகழாமல் இருக்கும்படி தொழுகையை பாதுகாக்கவும். எந்த ஒரு மகிழ்ச்சியான நிகழ்வோ துக்க நிகழ்வோ தொழுகையிலிருந்து நம்மை திசை திருப்பி விடக்கூடாது. வீட்டுக்கு வருகிற விருந்தாளிகளையும் தொழுகை நேரத்தில் தொழுகையில் ஈடுபட வையுங்கள். உங்கள் இல்லத்தில் உள்ள நூலகத்தை அவர்களுக்கு காண்பியுங்கள். அதில் உள்ள நல்ல நூல்களை

அவர்களை வாசிக்க செய்யுங்கள். அவர்களுக்கு நல்ல நூல்களை அன்பளிப்பு செய்து வாசிப்பின் நன்மையை புரிய வையுங்கள். வீட்டிற்கு வருவோருக்கு அவர்களுக்கு சடைவு ஏற்படாதவாறு தஃவா செய்யுங்கள். உங்கள் அண்டை வீட்டாருக்கும் குர்ஆன் ஓத கற்றுக்கொடுங்கள்.

இன்னும் பல அறிவுரைகளும் உபதேசங்களும் இருப்பினும் இந்த சில அறிவுரைகளோடு நிறைவு செய்கிறேன்.

அல்லாஹ்வே! எங்களை மன்னிப்பாயாக! எங்களுக்கு நன்மையை எளிதாக்கி தருவாயாக! பாவத்திலிருந்து எங்களை பாதுகாப்பாயாக!

**“எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் மக்களையும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! இறையச்சமுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!”**[86]

ஆமீன்.

***

86. அல்குர்ஆன் 25 : 74.

# தாருல் ஹுதாவின் வெளியீடுகள்.

## அல்குர்ஆன்

1. அல்குர்ஆன் அரபி 15 lines (Executive Hard bound,Paper 40gsm, Size 14x21cm) 275
2. அல்குர்ஆன் அரபி 15 lines (Executive Hard bound, Paper 60gsm, Size 18x24cm)400
3. அல்குர்ஆன் அரபி Mushaf Uthmani Print 15 lines (Executive Hard bound, Paper 60gsm,Size 18x24cm) ........ 350
4. அல்குர்ஆன் அரபி 13 lines (Executive Hard bound, Paper 60gsm, Size 18x24cm) 500

## தமிழ் புத்தகங்கள்

1. தொழுகை முறை ........ 15
2. நோன்பு ........ 15
3. இறைவனுக்கு உருவம் கொடுக்க முடியுமா? ........ 10
4. ஹிஜாப் - முஸ்லிம் மங்கையரின் மேன்மை ........ 15
5. திருமண வாழ்த்து, காலை மாலை திக்ருகள், இஸ்திகாரா துஆ ........ 15
6. ஸகாத் - வழிமுறைகள், சட்டதிட்டங்கள் ........ 20
7. இறைமார்க்கம் இறைவேதம் ஓர் அறிமுகம் ........ 30
8. இயேசுவின் அழைப்பு ........ 20
9. அல்குர்ஆன் துஆக்கள் ........ 20
10. இஸ்லாமியக் கொள்கை. வினா - விடைகள் ........ 30
11. தடுக்கப்பட்டவை ........ 20
12. இறைநெறி கூறும் இயற்கைக் கடமைகள் ........ 20
13. இறுதிப் பேருரை (முழுத் தொகுப்பு) ........ 30
14. நம்பிக்கையின் அடிப்படைகள் ........ 30
15. குர்ஆன் ஹதீஸ் கூறும் பிரார்த்தனை ........ 30
16. தூய திருகலிமா ........ 30
17. ஒரு தெய்வமா? பல தெய்வமா? ........ 40

18. இல்லங்களை அச்சுறுத்தும் அபாயங்கள் ........................................ 40
19. அழைப்புப்பணி - அழைப்பாளர்................................................................ 40
20. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கைகள்........................................ 40
21. இஸ்லாமிய ஒளியில் குழந்தை வளர்ப்பு ........................................ 40
22. மூன்று அடிப்படைகள் ................................................................ 40
23. அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள் ................................ 60
24. அன்றாடம் கடைப்பிடிக்க 1000 சுன்னத்துகள் ........................................ 40
25. வஸிய்யத்தீ ................................................................................40
26. உம்ரா வழிகாட்டி (ஆர்ட் பேப்பர் 18x12 cm) ........................................ 40
27. குர்ஆன் ஹதீஸ் கூறும் துஆக்கள் ருக்யாக்கள் (10.5x14 cm) ................ 40
28. கண்ணியமிகு குர்ஆன் சூரா 39 முதல் இறுதி வரை ................................40
29. கவலைப்படாதே! ................................................................ 50
30. லும்அத்துல் இஃத்திகாத்................................................................50
31. ஹதீஸ் கலை இமாம்களின் கொள்கை ................................................50
32. அத்தவ்ஹீத் ................................................................ 60
33. ஸகாத் - ஃபிக்ஹ்................................................................ 60
34. இயற்கை மதம்................................................................ 60
35. ஹிஸ்னுல் முஸ்லிம் (மஸ்னூன் துஆக்கள்) ........................................ 60
36. இஸ்லாமின் இறைக்கோட்பாடு ................................................ 60
37. மீளாப்பயணம் (ஜனாஸாவின் சட்டங்கள்)........................................ 60
38. இப்னு தைமிய்யா வாழ்க்கை வரலாறு ................................................ 80
39. தஃலீமுல் குர்ஆன் (தஜ்வீது வழிகாட்டி) ........................................ 80
40. நபியவர்களின் சரியான தொழுகை முறை................................................60
41. வெற்றிக்கு வழி ................................................................ 60
42. முஸ்லிம் பெண்மணியின் நற்குணங்கள்................................................80
43. அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ உடைய அகீதா........................................70
44. ஹஜ். உம்ரா வழிகாட்டி................................................................ 75
45. அழைப்புப் பணி கேள்வி-பதில் ................................................ 80
46. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம் ................................................ 80
47. ரஹ்மத்தான ரமழான்................................................................ 80
48. அத்தஹாரா - தூய்மை - ஃபிக்ஹ் ................................................ 80
49. நோன்பு - ஃபிக்ஹ்................................................................ 80
50. ஹிஸ்னுல் முஸ்லிம் (21x14 cm)................................................ 80

51. அல்அகீதத்துல் வாஸிதிய்யா ....................................................80
52. முன்மாதிரி முஸ்லிமின் நற்குணங்கள் ....................................................80
53. இஸ்லாமின் பார்வையில் மத நல்லிணக்கம் ....................................................80
54. இரு ஸஹீஹிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்புமிகு நபிமொழிகள்......
55. முன்மாதிரி முஸ்லிம் .................................................... 100
56. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 1) .................................................... 100
57. ஹஜ் - ஃபிக்ஹ் .................................................... 100
58. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (21x14 cm Single Colour) .................. 100
59. இஸ்லாமில் சொத்துரிமை சட்டங்கள் .................................................... 100
60. அல்குர்ஆன் பாக்கியம் நிறைந்த வேதம் .................................................... 100
61. ஹாஇய்யாஹ் (கவிதை தொகுப்பு) இமாம் அபூ தாவூத் ....................................................110
62. தப்சீர் முதல் ஜுஸ்வு .................................................... 120
63. இறைத்தூதரின் தூய வரலாறு .................................................... 150
64. அல்குர்ஆன் விரிவுரையின் சில அடிப்படைகள் - உஸைமீன் ..............130
65. இஸ்லாம் நீங்கள் அறியவேண்டிய மார்க்கம் .................................................... 150
66. உலக முடிவு .................................................... 150
67. தொழுகை - ஃபிக்ஹ் .................................................... 150
68. ஷர்ஹுஸ் ஸுன்னா ....................................................160
69. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 2) ....................................................
70. மகிழ்ச்சியான வாழ்க்கை அன்பான குடும்பம் ....................................................
71. இஸ்லாமிய சிறப்பு கல்வி வகுப்பு .................................................... 200
72. முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி .................................................... 230
73. இல்முத் தஜ்வீத் .................................................... 290
74. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (14x21 cm Full Colour) .................... 250
75. அர்ரஹீக் அல்மக்தூம் (18x24 cm) .................................................... 350

Bank Account Details

**Indian Bank |** A/c Name: **DARUL HUDA** | Current A/c No.
**6724227449 |** Branch: Mannady | IFS Code: IDIB000M016
**Gpay & Phonepe No. 98401 74121**